بسم الله الرحمن الرحيم

"
பூமியில் உள்ளவர்களில் பெரும்பாலோரை நீர் பின்பற்றுவீரானால் அவர்கள் உம்மை அல்லாஹ்வின் பாதையை விட்டு வழிகெடுத்து விடுவார்கள். (ஆதாரமற்ற) வெறும் யூகங்களைத்தான் அவர்கள் பின்பற்றுகிறார்கள் - இன்னும் அவர்கள் (பொய்யான) கற்பனையிலேயே மூழ்கிக்கிடக்கிறார்கள்.

(அல்குர்ஆன் : 6:116)
"


மரணத்தின் பிடியில் மியான்மர் முஸ்லிம்கள்... - 6

போராளி கௌரி லங்கேஷை கொலை செய்தது யார்? - 14

மோடியினால் விழும் விமான போக்குவரத்துக் கழகங்கள் - 28

பண மதிப்பு நீக்கம் ஒரு நாடகம் - 30

தொடர் தோல்விகளை மறைக்க மோடி இனக் கலவரத்தை தூண்ட வாய்ப்பு - 33

காந்திஜியைக் கொலை செய்ய மறுத்த பக்த் மியானின் வரலாறு - 35

ஹிஜாப் எங்களைப் பாதுகாத்தது - 39

இந்து பத்திரிகையின் தலையங்கமும் நீதியின் ஆதங்கமும் - 42

எது முதலில்? - 44

இஸ்லாமிய வங்கி முறை - 50

காலம்தரும் பாடங்கள் - 52

இந்தியாவுக்கு ஏன் நோபல் பரிசு கிடைக்கவில்லை.. மோடி காரணமா ? - 55

NIA-வின் தலைமையில் நடந்த நாடகம் - 56

நீட் வழக்கில் அநீதிகள் - 58

பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி - 64



நவம்பர்-2017 ஸபர்-1439

# வைகறை வெளிச்சம்

ஆசிரியர்
**மு. குலாம் முஹம்மது,** M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
**கே.எம். இலியாஸ் ரியாஜி,** M.A.,

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.



http:/www.facebook.com/vaigarivelicham

**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

தலையங்கம்

# கடன் பட்டோருக்கு அநியாயம் செய்யாதீர்!

சசிபெருமாள் - தன் உயிரைத்தந்து மதுவுக்கு எதிரான பெரும் போரை முடிக்கிவிட்டார். ஆனாலும் மதுவும் அதன் விற்பனையும் நின்றபாடில்லை. அதனால் அழியும் குடும்பங்கள் ஆயிரமாயிரம். இந்த மனிதப் படுகொலைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

அனிதா என்ற மாணவி தன் உயிரைத் தந்து நீட் என்ற தேர்வுக்கு எதிரான போரை முரசறிவித்து தொடங்கி வைத்தாள்.

உண்மையில் அவள் சமூக நீதிக்கான ஒரு பெரும் போரின் தொடக்கம் என அமைந்தாள். பாசிசத்தின் கோரப் பற்களுக்குப் பலியானாள்.

நமது நெல்லை மாவட்டத்தில் இசக்கி முத்து தன் குடும்பத்தோடு தன்னையும் மாய்த்துக் கொண்டு வட்டிக் கொடுமையின் கோரத்தை உரக்க முழங்கி உலகறியச் செய்திருக்கின்றார்.

இப்போது வட்டிக் கொடுமையினால் தங்களை மாய்த்துக் கொண்டவர்களின் பட்டியல் பிரவாகமெடுத்துக் கொண்டிருக் கிறது.

அடுத்து வட்டியின் கோரப்பிடியி லிருந்து தங்களை விடுத்துக்கொள்ள வழி தெரியாமல் மரணத்தை தீர்வாக எடுத்துக் கொள்ளலாமா என திட்டம் தீட்டிக் கொண்டிருந்தவர்களின் பட்டியல் பத்திரிகைகளில் பவனி வருகின்றது.

நம் நாட்டில் ஒரு நாளைக்கு மூன்று விவசாயிகள் என விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டார்கள். விவசாயம் செய்ய கடன் வாங்கினார்கள் வட்டிக்கு! கடனை அடைக்க முடியவில்லை. கையறு நிலை! தற்கொலையே தீர்வு என்றாகிவிட்டது.

இந்தக் கோரமான தற்கொலையிலிருந்து விவசாயிகளைக் காப்பாற்றிட அரசு அந்தக் கடன்களையும் வட்டியையும் ஒன்போல் தள்ளுபடி செய்தது, அன்று

இந்தக் கொடுமைக்ள, அதாவது மனித இனத்தினை ஒட்டுமொத்தமாக அழிக்கும் கொடுமைகள். இன்றைய சமுதாய அமைப் பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட செல்களாக ஆக்கப்பட்டுவிட்டன. இன்றைய சமுதாய அமைப்பின்சட்டங்கள்வட்டியைஓர்உயிர்க் கொல்லியாகவோ, தீமையாகவோ பார்க்க வில்லை. மாறாக பொருளாதார முறையின் நடுநாயகமாகவே பார்க்கின்றன.

அதேபோல்தான் மதுவும், அரசே மதுவை விற்பனை செய்யும் கோரம்.

சமூகநீதிக்கானபெரும்போர்தொடர்ந்து கொண்டிருக்கின்றது. ஆனால் சமூக நீதியை மறுப்பவர்கள் இன்று மத்தியிலே ஆட்சியில் அமர்ந்திருக்கின்றார்கள்.

ஆனால் இவற்றிற்கெல்லாம் மேலாக ஒரு கொள்கை, அது இஸ்லாம்.

அது வட்டி என்பது ஓர் உயிர்க்கொல்லி, பொருளாதாரச் சுரண்டலின் அடிப்படை என 1400 ஆண்டுகளுக்கு முன்னரே கண்டு கொள்கின்றது. அதனை எல்லா விதத்தி லேயும் தடை செய்கின்றது.

வட்டி பரிவர்த்தனையில் கந்து வட்டி, வங்கி வட்டி என்றெல்லாம் பாரபட்சளைப் பார்த்திடவில்லை. வட்டி அது எந்த பெயரில் வந்தாலும் தடுக்கப்பட்டது. அதற்கு கணக் கெழுதுவது, வட்டித் தொழில் நடத்திட

இடம் தருவதும் எல்லாமே தடை செய்யப் பட்டது.

அதனால் இந்தக் கொள்கையைப் பின்பற்றிடும் இந்தச் சமுதாயத்தினூடே வட்டி இன்றளவும் வெறுக்கப்பட்டு, ஒதுக்கப் பட்ட ஒரு நடவடிக்கையாகவே இருந்து வருகின்றது.

மிகவும் நெருக்கடியான சூழ்நிலைகளிலே இந்தியாவில் முஸ்லிம்கள் வாழ்ந்து கொண்டி ருக்கின்றார்கள். பொருளாதாரத் துறையில் அவர்களைத் தலையெடுக்க முடியாமல் தடுத்துக் கொண்டிருப்பது அரசு.

இந்த இக்கட்டான நெருக்கடிகளையே அரசிடமிருந்து எதிர்ப்பார்க்க வேண்டும் என்ற நிலையிலிருந்தும், அவர்கள் வட்டி யைத் தவிர்த்தே வாழ்ந்து கொண்ருக்கின் றார்கள்.

இதனால் இந்தியாவில் வாழும் முஸ்லிம் கள் வங்கியில் தங்கள் கணக்குகளில் சேர்ந் துள்ள வட்டித் தொகை 67.5 கோடியை தீண்டாமலே வாழ்ந்து கொண்டிருக்கின் றார்கள். இதனை மிகவும் விளக்கமாக வைகறை வெளிச்சம் அக்டோபர் 2017 இதழில் வெளியிட்டிருக் கின்றோம்.

இனிவரும் நாட்களிலும், இந்தக் கொள்கை வாழும் - அங்கெல்லாம் மக்களின் உயிரைக் குடிக்கும் வட்டி அதன் அனைத்து வடிவங்களிலும், தடுக்கப்பட்டதாகவே இருக்கும் என்பது உறுதி.

இந்தக் கொள்கையைப் பின்பற்றித்தான் இந்த நாட்டை பொருளாதார வல்லரசாக ஆக்கிக் காட்டினார் அவ்ரங்கஜேப் என்ற கீர்த்திமிக்க ஆட்சியாளர். அவர் ஆட்சியில் தான் வட்டியில்லா பொருளாதாரம் இந்தியாவில் செயலிலிருந்தது.

இந்கக் கொள்கை மீண்டும் நாடாள வந்தால் மட்டுமே இதுபோன்ற கொடுமை கள் முடிவுக்கு வரும் - நிரந்தரமாக அழியும்.

நாம் அனைவரையும் படைத்து பரி பாலித்துவரும் அல்லாஹ் கூறுகின்றான்

"அல்லாஹ் வட்டியை (அதில் எந்த வளமுமில்லாமல்) அழித்து விடுவான். இன்னும் தான தருமங்களை (வளங்களைக் கொண்டு) பெருகச் செய்வான், தன் கட்டளைக்குகளை நிராகரித்துக் கொண்டி ருக்கும் பாவிகள் எவரையும் அல்லாஹ் நேசிப்பதில்லை. (2:276)

**ஈமான் கொண்டவர்களே!**

**நீங்கள் உண்மையான முஃமின்களாக இருந்தால் அல்லாஹ்வுக்கு அஞ்சி அடங்கி எஞ்சியுள்ள வட்டியை வாங்காது விட்டு விடுங்கள். இவ்வாறு நீங்கள் செய்ய வில்லை யென்றால், அல்லாஹ்விடமிருந்தும் அவனுடைய தூதரிடமிருந்தும் போர் அறிவிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.**

நீங்கள் பாவமன்னிப்புக் கோரி (இந்த வட்டி என்ற பாவத்திலிருந்து மீண்டு விட்டால் உங்கள் பொருள்கள் அசல் - முதல் உங்களுக்கு உண்டு. கடன் பட்டோருக்கு நீங்கள் அநியாயம் செய்யாதீர்கள். நீங்களும் அநியாயம் செய்யயப்படமாட்டீர்கள்.

-அல்குர்ன் 2:278, 279

**இந்தக் கொள்கையை - எற்போம்**
**மாய்ப்போம் வட்டியை**
**நிலைநாட்டுவோம் அதை இங்கே**

**- எம்.ஜி.எம்.**

**வைகறை வெளிச்சம்**
இதழில்
**விளம்பரம் செய்து பயனடையுங்கள்**

மியான்மர் நாடு, ரோஹிங்யா என்ற இடம்!

ஜெய்ன்பிரான் என்ற கிராமம்!

இரவின் நடுப்பகுதி. மக்கள் உறக்கம், நிசப்தம். இந்த நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு, சிலர் பேசிடும் சப்தம் வீட்டில் தன் குழந்தைகளுடன் தூங்கிக் கொண்டிருந்த இஸ்மத் அராவை உசிப்பிற்று அதிரவைத்தது.

பேசிக் கொண்டிருப்பவர்கள் கொலை பாதகர்களாகத்தான் இருந்திட வேண்டும். அவர்கள் இப்படித்தான் நடுவு நிசியில் வந்து வீடுகளைத் தீ வைப்பார்கள்.

ஆமாம்! இஸ்மத் அரா எதிர் பார்த்த திலும், அதிர்ச்சிக்கு உள்ளானதிலும் தவறே இல்லை. அதுவே நடந்தது. அவருடைய மூங்கில் வீடு சர, சர எனத் தீப்பிடித்து எரிந்தது, குழந்தைகளை வாரிச் சுருட்டிக் கொண்டு ஓடத் தொடங்கினார்கள்.

தீயின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியா மல் அவளது 13 வயது மகள் ஜன்னத் தீயில் எரிந்து கொண்டிருந்தாள். மூன்றரை வயது மகன் 'அப்சார்' அவளுடைய கைகளிலிருந் தான். அதுதான் மிச்சம், அனைத்தும் எரிந்து போயிற்று.

இதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் தான் இஸ்மத் அராவின் கணவரை மியான்மரின் இராணுவத்தினர் அழைத்துச் சென்றார்கள்.

ஏன்? எனக் கேட்டதற்கு அவர்கள் பதில் சொல்லவே இல்லை. இப்படி பதில் சொல்லா மல் அழைத்துச் சென்ற ஆண்களை மியான்மர் இராணுவம் சந்தடி இல்லாமல் கொலை செய்து கொண்டிருக்கின்றது.

தனித்து, தவிக்கும் இஸ்மத் அராவுக்கு எங்கு செல்வது என்றே தெரியவில்லை.

'இஸ்மத் அரா' நடுங்க வைக்கும் இரவி னூடே நடக்கத் தொடங்கினாள். தன்னைப் போல் இரவோடு இரவாக வீட்டிலிருந்து துரத்தப்பட்டவர்களெல்லாம் பங்களாதேஷ் என்ற நாட்டை நோக்கித்தான் நடந்தார்கள்.

விடியும் வரை நடந்தாள். இந்தப் பாவிகள் பார்த்துவிட்டால், அவளையும் அந்தப் பச்சி ளம் குழந்தையையும் கொன்று விடுவார்கள். விடிந்தபோது அவள் பல மைல்களைக் கடந்து வந்திருந்தாள். அப்போது தான் அவளுக்கோர் உண்மைத் தெரியவந்தது.

# மரணத்தின் பிடியில் மியான்மர் முஸ்லிம்கள்





தன்னைப்போல் பல பெண்கள் தங்கள் குழந்தைகளை முதுகிலும், கையிலும் சுமந்தவர்களாகப் பங்களாதேஷை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள். தன்னுடைய சொந்தகிராமத்தைச் சார்ந்த பெண்கள் பலர் அங்கே நடந்து கொண்டிருந்தார்கள். ஆண்கள் மியான்மர் இராணுவத்திற்குப் பலியாகி இருப்பார்கள் என்பது யாரும் சொல்லாமலே தெரியும்.

அங்கிருந்து நாஃப் என்ற ஆற்றைக் கடந்து தான் இந்துமகா கடலின் ஓரத்தை எட்ட வேண்டும். ஆற்றைக் கடக்க படகில் இரவு முழுவதும் பயணம் செய்ய வேண்டும். இதில் இஸ்மத் அரா ஆகியோர் படகில் ஆற்றைக் கடக்க, படகை வாடகைக்கு எடுக்க வேண்டும். முதலில் வாடகை எனப்பேசிய படகுக்காரன் பின்னர் எதையாவது கொடுங்கள் என்றான். எல்லோரிடமிருந்ததையும் ஒன்றாய் போட்டு அவனுடைய கைகளில் ஒப்படைத்தார்கள்.

படகு நகர்ந்தது, காலையில் உடுத்திருந்த துணிகள் நன்றாக நனைந்த பின்பு வந்து சேர்ந்தார்கள் பங்களாதேஷ்க்கு கரை அமைத்துத் தந்த இந்துமகா கடலின் ஓரம். அது அக்டோபர் 12,2017 அதிகாலை.

அங்கே நாங்கள் ஒரு வாரம் காத்திருக்க வேண்டியதாயிற்று. பங்களாதேஷுக்கு உள்ளே நுழைந்திட இந்த ஒருவாரமும், எந்த உருப்படியான உணவுமில்லை. பிஸ்கட், காய்ந்த, உலர்ந்த அரிசி இவற்றைக் கொண்டே வாழ்ந்திட வேண்டும் என்ற அவலம். உணவுப் பொருள்கள் தீர்ந்துபோகும் என்ற நிலை வந்தபோது, இருந்த உணவை குழந்தைகளுக்குக் கொடுத்துவிட்ட முதியவர்கள் உணவுப் பொருள்களை உண்பதை விட்டுவிட்டார்கள்.

ஒரு பாதி பாக்கெட் பிஸ்கட், அரை லிட்டர் தண்ணீர் இவையே உணவாக வழங்கப்பட்டன என்கின்றார் ரஹானா என்ற முஸ்லிம் பெண். மக்கள் தாகத்தால் தவித்தார்கள். அதனால் அங்கு தென்பட்ட நீர்த்தேக்கங்களிலுள்ள தண்ணீரை குடித்தார்கள். இந்த தண்ணீரைக் குடித்ததால் பலர் இறந்து விட்டார்கள். அவர்களை அங்குள்ள அந்த சதுப்பு நிலத்திலேயே புதைத்துவிட்டோம் என்கின்றார் ரஹானா.

செப்டம்பர் 28, 2017 அன்று ரஹானாவின் கணவனையும் இன்னும் அந்தக் கிராமத்தைச் சார்ந்த 14 பேரையும் மியான்மரின் இராணுவம் தூக்கிச் சென்றது. அப்போது ரஹானா நிறைமாத கர்ப்பிணியாக இருந்தாள். இரண்டு நாளுக்குப்பின் அவளுடைய வீடு தீக்கிரையாக்கப்பட்டது.

ராக்கட் லாஞ்சேர்ஸ் - பறந்துசென்று தாக்கும். ஆயுதங்களைக் கொண்டுதான் ரஹானாவின் ஊரைத் தாக்கினார்கள் மியான்மர் இராணுவத்தினர்.

வீடு எரிந்ததும், ரஹானாவின் குடும்பம் சிதறுண்டது. அவளுடைய பெண் குழந்தைகள், அவர்கள் பருவ வயதை அடைந்தவர்கள். தப்பி ஓடினார்கள். அவர்கள் ஷாபிரா முஹம்மத் ஷெற்றா என்பவர்கள். இன்னும் மூன்று குழந்தைகள், தஸ்லிமா, ஜாஸ்மைன், பாத்திமா ஆகியோர் என்ன ஆனார்கள் என்பதே தெரியவில்லை.

ரஹானாவின் அடுத்த குழந்தை இங்கே படகுக்குக் காத்திருக்கும், அகதிகள் முகாமில் பிறந்தது. மூன்று நாள்களுக்குமேல் அதை உயிருடன் காப்பாற்றிட இயலவில்லை. இறந்து போனது. அதே சதுப்பு நிலத்தில் புதைக்கப் பட்டது. அந்தச் சோகத்தை நினைவு கூறும் ரஹானா அந்தக் குழந்தைக்குப் பெயர் வைக்க வேண்டும் என்ற நினைப்புகூட வரவில்லை. அதை எப்படி காப்பாற்றுவது என்பதைப் பற்றியே ஆலோசித்துக் கொண்டிருந்தேன் என்றாள்

கடைசியில் ரஹானாவும், அவருடைய பெண் குழந்தைகளோடு தப்பியோடிய தாத் தாவும் 'ஷாபோரி' அகதிகள் முகாமில் சந்தித் தார்கள். ஆனால் 72 வயதான தாத்தா ஒரே ஒரு பெண் குழந்தையோடுதான் வந்தார். ஷாபிரா என்ற பெண் குழந்தைதான் அது. அகதிகள் முகாமிற்கு வந்த அந்தப் பெண் குழந்தைக்கு தலையை தூக்கி அமர்ந்திட முடியாது. குண்டடி பட்டதுதான் காரணம்.





இஸ்மத் அரா, ரஹானா ஆகியோரின் கதையைப் போன்றதே ஏனைய பெண்களின் கதையும் என்கிறார் 50 அகதிகள் குடும்பங் களைச் சந்தித்துப்பேசிய 'தி இந்து' ஆங்கில நாளிதழின் செய்தியாளர் 'Suvojit Bagghi' சுவோஜித்பாகி. 10 நாட்களாக இந்தப் பேட்டிகள், சந்திப்புக்கள் தொடர்ந்தன.

ஆகஸ்ட் 25, (2017) முதல் அக்டோபர் 11 (2017) வரை ஐந்து லட்சத்து எண்பத்தாறாயிரம் (5,86,000) ரோஹிங்யா முஸ்லிம்கள் பங்களா தேஷை வந்தடைந்துள்ளார்கள். இன்னும் 10,000 பேர் வந்து சேர இருக்கின்றார்கள். உலக முஸ்லிம் நாடுகளின் உதவி இல்லை என்றால் பங்களாதேஷ் நிலைகுலைந்திருக்கும் இந்நேரம்.

**காயங்கள்**

இப்படி அதிகளாக வருபவர்கள் பல்வேறு காயங்களுக்கு ஆளாகி இருக்கின்றார்கள். அத்தனையும் மியான்மர் இராணுவத்தின் தாக்குதல்களால் குண்டடி பட்டவர்கள்.

குழந்தைகளின் தலையில் கனரக ஆயு தங்களால் (Heavy Object) தாக்கி இருக் கிறார்கள். பெண்களும் ஆண்களும் கைகளி லுள்ள விரல்கள் துண்டிக்கப்பட்டவர் களாக இருக்கின்றார்கள்.

பலருடைய உடல்களின் ஆபத்தான பகுதிகளில் குண்டுகள் பாய்ந்திருந்தன. சிலருடைய பிடரியில் குண்டுகள் பாய்ந் திருந்தன. சிலருக்கு முதுகுத் தண்டில் குண்டுகளின் கிழிசல்கள் இருந்தன.

இதை ஆரோன் ஜாக்சன் என்ற மருத் துவர் கூறினார். இவர் "Planting Peace" அமைதிக்கான அறக்கட்டளையின் சார்பில், பங்களாதேஷில் உள்ள அகதிகள் முகாமில் பணியாற்றிக் கொண்டிருப்பவர்.

டாக்டர் ஆரோன் ஜாக்சன் கடந்த ஒரு மாதமாக இந்த அகதிகள் முகாமில் வேலை செய்து கொண்டிருக்கின்றார். அவர் குழந்தைகளின் தலையில் பலத்த காயத்துடன் இரும்பு துகள்கள் இருப்பதை எங்களிடம் காட்டினார். அத்தனையும்

குண்டுகளின் சிதறல்கள்.

### இனப்படுகொலை

உண்மையில் மியான்மரில் நடந்து கொண்டிருப்பது இனப்படு கொலை Genocide ஆனால் ஐக்கிய நாடுகள் சபை இந்தச் சொல்லாட்சி யைப் பயன்படுத்திட மாட்டேன் என்கின்றது. இனப்படுகொலை என அறிவித்தால் ஐக்கிய நாடுகள் சபை பல பெரிய நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும். அத்தோடு மியான்மரில் ஐக்கிய நாடுகள் சபை யின் அமைதி காக்கும் படையையும் நிறுத்திட வேண்டியது வரும். இதை ஐக்கிய நாடுகள் சபை செய்ய விரும்பவில்லை. இதையும் டாக்டர் ஆரோ ஜாக்சன்தான் சொன்னார்.

### ஐக்கிய நாடுகள் சபை

ஐக்கிய நாடுகள் சபை இதில் சற்று எட்டவே நிற்கின்றது. பிரச் சனையின் முழு ஆழத்தையும் புரிந்து கொண்டு சில உருப்படி யான நடவடிக்கைகளை எடுத்து ரோஹிங்யா முஸ்லிம்கள் மீது நடக்கும் தாக்குதலை தடுத்திட நடவடிக்கை எடுக்க வில்லை. மாறாக, இதை ஐ.நா. அகதிகள் பிரச்சனை என்றே பார்க்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை கண்காணிப்பாளர் யாங்கிலீ Yangheelee ; இந்து ஆங்கில நாளி தழிடம் செப்டம்பர் முதல் வாரத் தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரோஹிங்யாக்கள் இறந்து போனார் கள் என கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் சபை சார்பில் அகதிகளைக் கவனித்துக் கொண்டி ருக்கும் வில்லியம் லேசி சுவிங், உலகின் எந்தப் பகுதியிலும் இதுவரை இல்லாத அளவிற்கு அகதிகள் வரும் வேகம் அதிகரித் துள்ளது என்கிறார்.

## துருக்கியின் துயர் துடைப்பு!

பங்களாதேஷ் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு மிகவும் பக்கத்தில் இருக்கின்றது. அங்கேதான் இதுவரை 6 லட்சம், ரோஹிங்யா முஸ்லிம்கள் அகதி களாகச் சென்றிருக்கின்றார். அவர்களை பங்களா தேஷ் இப்போது அகதிகளாக ஏற்றுக் கொள்கின்றது. இதற்கு முன்னர் இதே பங்களாதேஷ் இந்த அகதிகளை ஈவிரக்கமின்றி திருப்பி அனுப்பியது.

தங்களுடைய சகோதரர்களைத் தங்களைத் திருப்பிவிட்ட நிலையில் என்ன செய்வது, எனத் தெரியாமல் திணறினார்கள் ரோஹிங்யா முஸ்லிம்கள். தங்கள் பெண்களை அவர்களே கடலில் பிடித்துத் தள்ளிவிடும் அவலநிலை. காரணம், பெண்களோடு திரும்பவந்தால், தங்கள் பெண்களைத் தங்களின் கண் முன்னாலேயே மியான்மரின் இராணுவர்களும் பௌத்தர்களும் கற்பழிப்பார்கள், கொலை செய்வார்கள் என்ற பீதிதான்.

எந்த ஆதரவும் அற்று நின்ற அந்த மக்களை பங்களாதேஷ் முஸ்லிம்களை அதிகமாகக் கொண்ட நாடே திருப்பி அனுப்பியதை, பல பத்திரிகையாளர்கள் தங்கள் மத நம்பிக்கைக் கொண்ட மக்களை இந்த கோரமான கையறு நிலையில் கைவிடும். இவர்களை என்னவென்பது என்று எழுதினார்கள். நம்பிக்கை யாளர்கள் அனைவரும் சகோதரர்களே என்ற இறை மறை யின் சொல்...?

இப்போது துருக்கி நாடு ஒரு குழுவை அனுப்பி பங்களாதேஷில் இருக்கும் அரசோடு பேசியதால் பங்களாதேஷ் ரோஹிங்யா முஸ்லிம்களை ஏற்றுக் கொள்கின்றது. ஏனெனில் இதனால் ஏற்படும் இழப்பு களை அதாவது ரோஹிங்யா முஸ்லிம்களை ஏற்றுக் கொள்வதால் ஏற்படும் இழப்புகளை துருக்கி அரசே ஏற்றுக் கொள்ளும் என துருக்கியின் ஆட்சியாளர் தைய்யூப் எருதுகான் வாக்குறுதி வழங்கி இருக் கின்றார். (விரிவான தகவல்களுக்கும் பார்க்க வைகறை வெளிச்சம் அக்டோபர் 2017)

மலேசியா ஏற்கெனவே பல ஆயரம் ரோஹிங்யா முஸ்லிம்களுக்குப் புகலிடம் கொடுத்துள்ளது. இப் போது பங்களாதேசுக்கு ரோஹிங்யா முஸ்லிம் களால் ஏற்படும் செலவுகளில் தானும் பங்கேற்க இருப்பதாக அறிவித்துள்ளது. ஓங்குக இந்த சகோதரத்துவம்.

– எம்.ஜி.எம்.

### புதிய குடும்பங்கள்

மியான்மரைச் சார்ந்த மீனவர் ஜென்னத் அலீ. இவர் தன்னுடைய மனைவியையும் மூன்று குழந்தைகளையும் இழந்து விட்டார். அவர் எப்படியோ அகதிகள் முகாமை வந்த டைந்துவிட்டார். அங்கே சில சிறுவர்கள் அவர்கள் தங்கள் பெற்றோர்களை இழந்து விட்டார்கள். அவர்களுக்குத் தந்தையாக இருந்து அவர் அந்தக் குழந்தைகளைக் பார்த்துக் கொள்கின்றார்.

அதேபோல் சித்தாரா பேகம். இவள் ஒரு ரோஹிங்யா முஸ்லிம். இவர் 17 வயதான ஷமீரா பேகத்தைத் தத்தெடுத்துக் கொள் கின்றார்.

அவர் கூறுகின்றார், என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர் தஸ்லீமா என்ற பெண்மணியைத் தத்தெடுத்துக் கொண்டார். தஸ்லிமா ரோஹிங் யாவைச்சார்ந்த அகதி. அவருடைய பெற்றோர் களை மியான்மர் இராணுவம் சுட்டுக் கொல் வதை கண்ட நாளிலிருந்தே அவள் மனநிலை பாதிக்கப்பட்டவளாக ஆனாள்.

### அழிவுகள்

மியான்மரில் ரோஹிங்யா முஸ்லிம்கள் வாழ்ந்த 288 கிராமங்கள் அழிக்கப்பட்டுள் ளன. அக்டோபர் (2017) முதல் வாரத்தில் மட்டும் 66 கிராமங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அதாவது ரோஹிங்யா முஸ்லிம்கள் வாழ்வாதா ரங்கள் முழுமையாக அழிக்கப்பட்டுவிட்டது என்கின்றது ஐக்கிய நாடுகள் சபை. (Source : The Hindu 22-10-2017)



### ரோஹிங்யா முஸ்லிம்களை நாடு கடத்தக்கூடாது உச்ச நீதிமன்றம் தீர்ப்பு...

இப்படி வந்திருக்கும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு அக்டோபர் 13 (2017)-இல். ஆனால் மோடி அரசின் அழுத்தங்கள், இனப்படு கொலைகளின் மேதை மோடி அரசின் வழக் கறிஞர் துல்ஹார் மேத்தாவின் ஓலம், இவை யெல்லாம் நீதிபதிகளை தடுமாறச் செய்து விட்டன.

மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு (தலைமை நீதிபதி தீபக், மிஸ்ரா, Y.D. சந்திரசூட், வில்கர்) முதலில் நாங்கள் ரோஹிங்யா முஸ்லிம் களை நாடு கடத்திடக்கூடாது, அவர்களைக் மனிதாபிமானத்தோடு நடத்திட வேண்டும், அவர்களில் யாராது தேசத்தின் பாதுகாப்பிற்கு ஊறுவிளை வித்தால் அவர்கள் மீது தேவையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளலாம் என ஓர் இடைக்கால உத்தரவைப் பிறப்பிக்க இருக்கின்றோம் என்றார்கள்.

உடனேயே மோடி அரசின் வழக்கறிஞர், பதறிப்போனார். நீங்கள் ஓர் இடைக்கால உத்தரவைப் பிறப்பித்தால் அதற்கு சர்வதேச அளவில் எதிர் விளைவுகள் ஏற்படும். தயவு செய்து அப்படி யொரு இடைக்கால உத்தர வைப் பிறப்பித்து விடாதீர்கள் என கதறினார்.

அத்தோடு இடைக்கால உத்தரவைப் உங்களிடம் மனு தந்தவர்கள் அதாவது ரோஹிங் யா முஸ்லிம்கள் சார்பில் மனுப் போட்டவர்கள் கூட கேட்கவில்லை என்றார். அத்தோடு இதில் தொழிலாளர் கள் பிரச்சனையும் இருக்கின்றது என்றும் கூறினார். நீதிபதிகள் நாங்கள் வேண்டுமானால் எழுத் துப் பூர்வமாக எதையும் பிறப்

பிக்கவில்லை.

எங்களுடைய இப்போதைய நிலைபாடு இதுதான். நீங்கள் அவர்களை ரோஹிங்யா முஸ்லிம்களை நாடு கடத்த முடியாது. மனிதாபிமானத்தோடு அவர்களைப் பார்க்க வேண்டும். நாட்டின் உள்நாட்டுப் பாதுகாப்பைப் பராமரிக்க வேண்டியது உங்கள் கடமை எனக் கூறிவிட்டார்கள்.

அத்தோடு இந்த வழக்கை இன்னும் விசாலாமாக விசாரிக்க வேண்டியதிருப்பதால், நாங்கள் இந்த வழக்கை நவம்பர் 21-ஆம் நாளுக்குத் தள்ளி வைக்கின்றோம் எனக் கூறிவிட்டார்கள்.

**சர்வதேச அளவில் இந்தியா**

இந்தியாவில் அகதிகளாக வாழ்ந்துக் கொண்டிருக்கும் ரோஹிங்யா முஸ்லிம்கள் ஒரு லட்சம் பேர், இவர்களை கண்ணை மூடிக் கொண்டு வெளியேற்றுவோம் எனக் கூறிடும் இந்தியாவின் நிலைபாடு இவை பயங்கர விமர்சனத்துக்கு உள்ளாகி வருகின்றது.

மோடி அரசின் வெளியேற்ற கொள்கையை சர்வதேச நாடுகள், மனிதாபிமானமற்ற செயல் என்று விமர்சித்து வருகின்றன.

1972-ல் பங்களாதேஷ் போரின் போது ஏறத்தாழ 5 ஐந்து லட்சம் பேர் அகதிகளாக வந்தார்கள். அவர்களை அன்றைய பிரதமர் இந்திராகாந்தி அரவணைத்தார். அவர்கள் தாங்களாகவே தங்கள் தாயகம் திரும்புவரை அவர்களை பராமரித்தார். இதனை சர்வதேச பார்வையாளர்களும், இந்தியாவிலுள்ள மனித உரிமை ஆர்வலர்களும் சுட்டிக் காட்டவே செய்தார்கள்.

**தெற்கு ஆசிய மனித உரிமை ஆணையத்தின் தலைவர் கூறுகின்றார்**

தெற்காசிய மனித உரிமை ஆணையத்தின் செயல் தலைவர் ரவீ நாயர் அண்மையில் பத்திரிகை களுக்கு அளித்த பேட்டியின்போது அவரிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அந்த கேள்வி,

**ஏன் இந்தியா தன்னுடைய கொள்கைகளை மாற்றிக் கொள்கின்றது?**

இப்போது ரோஹிங்யா முஸ்லிம்களின் நிலையில் இன்னும் மோசமாக நடந்து கொள்கின்றது. தற்போதைய இந்திய அரசு (மோடியின் அரசு) ஒரு மனுவாடி - (சர்வாதிகார) அரசு (Manuwady Authoritarion Government) அவர்கள் இந்திய முஸ்லிம்களை எப்படி



நடத்துகின்றார்கள் என்பது வெட்கக் கேடானது. அதன்பின் அவர்கள் ரோஹிங்யா முஸ்லிம்களை எப்படி வித்தியாசமாக நடத்த வேண்டும் என எதிர்பார்க்கின்றீர்கள். அவர்களையும் குரூரமாகவே நடத்துவார்கள். இப்போதுள்ள வலதுசாரி அரசின் இதயமற்ற செயல்களுக் கெதிராக நாம் மக்கள் கருத்தை உருவாக்கிட வேண்டும்.

சாதாரண இந்தியர்கள், அவர்களின் வறிய நிலையிலும் மிகவும் தாராளமாகவே நடந்து கொள்கிறார்கள். நாம் சாதாரண மக்களிடம் இப்போதைய இந்திய அரசு நமது கலாச்சாரத்திற்கும் பண்பாட்டுக்கும் எதிரானது என்பதை எடுத்துச் சொல்லிட வேண்டும், இவர்கள் குரூரம் நிறைந்த மனுவாதிகள். நம் கலாச்சாரத்திற்கு எதிரானவர்கள் என்பதையும் எடுத்துச் சொல்லிட வேண்டும்.

புதுடெல்லியின் தலைமைக்கு எந்த ஒழுக்க பண்புகளும் இல்லை என்பதை இன்றயை உலகம் உணருகின்றது.

The world recognizes that New Delhi has no moral leadership qualities.

(Source : Radiance - Views Weekly 1-7 Oct 2017)

ஏற்கெனவே நமது நாட்டின் பெயர் சர்வதேச அளவில் கெட்டுக் கிடக்கின்றது என்பதே உண்மை. இப்போது ரவி நாயர் அவர்களின் பேட்டியும் சர்வதேச அளவில் அனைத்து ஊடகங்களிலும் வெளி வந்துள்ளது.

இதைத்தான் மோடி அரசின் வழக்கறிஞர் துல்சார் மேத்தா பதறித்துடித்து உச்ச நீதிமன்றத்திடம் கூறியுள்ளார்.

**இந்திய அரசின் அச்சங்கள்**

மோடியின் இன சுத்திகரிப்பு அரசு இரண்டு விஷயங்களில் அச்சப்படுவதாக ஊடகங்களிலும், உச்ச நீதிமன்றத்திலும் ஓல மிட்டுள்ளது. இதனால் இந்த இரண்டு விவகாரங்களையும் இங்கே தெளிவுபடுத்தியாக வேண்டும்.

*1.* தீவிரவாதம் : இந்தியாவில், முஸ்லிம்களின் பெயரில் தீவிரவாதச் செயல்களை நடத்திக் கொண்டிருப்பவர்கள் சங்கப் பரிவாரத்தைச் சார்ந்தவர்கள்தான்.

இதனை பல நூறு ஆதாரங்கள், சாட்சியங்கள் ஆவணங்கள் ஆகியவற்றின் வழி நிரூபித்து விட்டோம். நீதிமன்ற வழக்குகள், நூல்கள் இவற்றின் வழியே நீதிமன்றங்களிலும், மக்கள் மன்றங்களிலும், தெளிவுபடுத்தியுள்ளோம்.



இந்தத் தீவிரவாத செயல்களின் வழிதான் இவர்கள் ஆட்சியைப் பிடித்தார்கள். இவர்களின் இந்த அரசு ஒரு தீவிரவாத அரசு.

ஆக, ரோஹிங்யா முஸ்லிம்கள் அல்ல தீவிரவாதிகள். இன்றைக்கு ஆட்சிச் செய்து கொண்டிருப்பவர்களும் அவர்களின் பரிவாரங்களுந்தான் தீவிரவாதிகள்.

அண்மையின் தங்கள் கூற்றை நியாயப்



படுத்திட ஓர் அப்பாவி ரோஹிங்யா முஸ்லிமை இவர்கள் கைது செய்து வைத்திருக்கின்றார்கள். (இதனை விளக்கமாக வைகறை வெளிச்சம் அக்டோபர் 2017 இதழில் வெளியிட்டிருக்கின்றோம் வாசகர்கள் அதனைப் படிக்கவும்)

**தொழிலாளர் பிரச்சனை**

உச்ச நீதிமன்றத்தில் மோடி அரசின் சார்பில் வாதாடிய வழக்கறிஞர் துல்சார் மேத்தா சந்தடி சாக்கில், இன்னொரு விஷயத்தையும் சொல்லி இருக்கின்றார். அது ரோஹிங்யா முஸ்லிம்களை வெளியேற்றாவிட்டால் தொழிலாளர் பிரச்சனை வரும் என்பது.

அதாவது ரோஹிங்யா முஸ்லிம்கள் இந்தியக் குடிமக்களின் வேலைகளைப் பிடுங்கிக் கொள்வார்கள் என்பதையே அப்படிக் கூறியுள்ளார்.

இது, முஸ்லிம் நாடுகளான சிரியா முதலான நாடுகளிலிருந்து மக்கள் ஐரோப்பிய நாடுகளை நோக்கி நகர்ந்தபோது, அங்குள்ள ஐரோப்பிய நாடுகளைச் சார்ந்த பாசிஸ்ட்டுகள் மேற்கொண்ட அணுகுமுறையே!

முஸ்லிம் அகதிகளை வரவேற்ற ஐரோப்பியா அரசுகளை எதிர்க்கும் முகமாக, அவர்கள் தங்கள் நாடுகளில் பின்வருமாறு சுவரொட்டிகளையும், பதாகைகளையும், வைத்தார்கள். அந்தப் பதாகைகளிலும், சுவரொட்டிகளிலும் "அகதிகளாக வருபவர்கள் உங்கள் வேலைகளைப் பிடுங்கவே வருகின்றார்கள் எனப் பிரச்சாரம் செய்தார்கள்.

இந்தப் பிரச்சாரத்திற்காக அவர்கள் சில அரசியல் கட்சிகளையே தொடங்கினார்கள்.

அதே பாசிச பாஷையில் தான் மோடி அரசின், வழக்கறிஞரும் உச்ச நீதிமன்றத்தில் பேசி இருக்கின்றார்.

பாசிசம் எல்லா இடமும் ஒரே பாஷையில்தான் பேசுகின்றது.

## நன்றி! நன்றி!

**இந்தியாவில் வாழும் ரோஹிங்யாகளுக்காக ஆறு மூத்த வழக்கறிஞர்கள் வாதாடினார்கள். அவர்களுக்கான பணத்தைத் தந்திடும் அளவில் ரோஹிங்யா முஸ்லிம்கள், வசதியானவர்கள் அல்ல. அவர்களுக்காக வாதாடிய மூத்த வழக்கறிஞர்கள், பாலிநரிமன், இராஜீவ்தாவன், கபில்சிபல், காலின் கன்சால்வஸ், பிரசாந்த் பூஷன், அஷ்வினிகுமார் ஆகியோருக்கு நன்றிகள் பல. இவர்களால்தான் தர்மம் வாழுகின்றது நம் நாட்டில்.**

**- எம்.ஜி.எம்.**

போராளி

# கௌரி லங்கேஷை கொலை செய்தது யார்?

சனாதன் சன்ஸ்தா இயக்கம் (துணை அமைப்பு ஹிந்து ஜனஜாக்ருதி சமிதி) கௌரி லங்கேஷ் கொலையில் சம்பந்தப்பட்டுள்ளது என்பது இந்த இயக்கத்திற்கு எதிரான முதல் குற்றச்சாட்டு அல்ல.

சனாதன் சன்ஸ்தா இயக்கம் பல குண்டு வெடிப்பு செயல்களில் ஈடுபட்டது. அதன் இயக்கத்தினர் கோவாவில் குண்டு வைக்க சென்ற போது குண்டு வெடித்து இறந்தனர். பல முற்போக்குவாதிகளை கொலை செய்துள் ளனர். பல மிரட்டல்களை முற்போக்கு சிந்தனையாளர்களுக்கு வைத்துள்ளனர். இந்த இயக்கத்தினர் தீவிரவாதிகள்.

ஆனால் அவர்கள் தங்களை கூறிக்கொள் வதெல்லாம் அறிவியல் தொழில்நுட்பத்தில் உள்ள தருமத்தில் உள்ள அறிவை இந்துக் களுக்கு போதிப்பது தான் எங்கள் வேலை என்பதே.

### யார் இந்த சனாதன் சன்ஸ்தா இயக்கத்தினர்?

அதை பார்ப்பதற்கு முன்னால் முதலில் 30 ஆகஸ்ட் 2011ல் 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்ட இருவரைப்பற்றி பார்த்துவிடுவோம். ரமேஷ் கட்கரி, விக்ரம் பவே என்ற அந்த இருவருக்கும் விசாரணை நீதிமன்றம் கட்கரி ரங்கயாதன் ஆடிட்டோ ரியம் குண்டு வெடிப்பு வழக்கு விசாரணையில் 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையை வழங்கியது. 2008ம் ஆண்டு தானேவிலும் வாஷியிலும் பன்வேலிலும் இந்த குண்டு வெடிப்புகள் நிகழ்ந்தன. இரண்டு திரையரங்கு களிலும் ஒரு சினிமா ஹாலிலும் இந்த குண்டு வெடிப்புகள் நிகழ்த்தப்பட்டன. இந்த குண்டு வெடிப்புகளை நிகழ்த்திய இந்த இரு தீவிரவாதி களும் சனாதன் சன்ஸ்தா இயக்கத்தை சேர்ந்த வர்கள்.

இந்த வழக்கில் ஆறு பேர் குற்றம் சாட்டப் பட்டனர். ஆறு பேரும் இந்து அடிப்படைவாத இயக்கமான சனாதன் சன்ஸ்தாவை சேர்ந்த வர்கள். ஆறு பேரில் நான்கு பேர் விடுதலை செய்யப்பட்டனர். மங்கேஷ் நிகாம், சந்தோஷ் ஆங்ரே, ஹேமந்த் சால்கே, ஹரி திவேகர் ஆகிய நால்வரும் விடுதலை செய்யப்பட்டவர்கள். இவர்களும் சனாதன் சன்ஸ்தா இயக்கத்தை சேர்ந்தவர்களே.

இவர்களுக்கு எதிராக முதலில் சட்ட விரோத நடவடிக்கைகளை தடுக்கும் சட்டத் தின் கீழ் Unlawful Activities (Prevention) Act நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பின்னர் இந்த சட்டத்தின் கீழான நடவடிக்கை பின் வாங்கப்பட்டது.

### குண்டுகள் வெடித்தது எங்கெங்கே?

ஜூன் 4 2008-இல் கட்கரி ரங்கயாதன் திரையரங்கில் ஒரு குண்டு வெடித்தது. இதில் ஏழு பேர் படுகாயமுற்றனர்.

மே 31 2008ல் விஷ்ணு பவே ஆடிட்டோரி யத்தில் வெடித்தது. இது தானேவில் உள்ள வாஷி மாவட்டத்தில் உள்ளது. இதே நேரத்தில் ஒரு வெடிக்காத குண்டு பன்வேலில் உள்ள ராஜ்காட் மாவட்டத்தில் சினிராஜ் சினிமாவில் கண்டெடுக்கப்பட்டது. இவை அனைத்தையும் வைத்தவர்கள் இந்த சனாதன் சன்ஸ்தாவை சேர்ந்த தீவிரவாதிகள்.

### சனாதன் சன்ஸ்தாவின் தொடர்பு

இவர்களுக்கு வழக்காடிய வழக்கறிஞர் இதில் எந்த இயக்கதிற்கும் தொடர்பில்லை என வாதாடினார். ஆனால் ஆதாரங்கள் மிகத்தெளிவாகவே சனாதன் சன்ஸ்தாவுக்கு எதிராக இருந்தன. ஆனாலும் இந்த இயக் கங்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் வழக்கு தொடர்ந்தவர்களும் கோரவில்லை, நீதிபதியும் இதை கண்டு கொள்ளவில்லை.




இல்லை என்றால் இந்த இயக்கம் 2011ம் ஆண்டிலேயே தடை செய்யப்பட்டிருக்கும். பல முற்போக்காளர்கள் உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கும். ஆனால் அதனை அன்று ஆட்சியில் இருந்த மத்திய மாநில அரசாங்கங்கள் செய்யவில்லை.

Vikram Bhave, a Sanatan Sanstha seeker, who himself is a convict in the Gadkari Rangayatan auditorum blast case in Thane in 2008

விசாரணை நிலுவையில் இருந்த நிலையில் குற்றவாளிகள் பின்னர் மும்பை உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்து 02 மே 2013ல் பிணையில் செல்ல அனுமதி பெற்றனர். இதற்கிடையே விக்ரம் பவே மாலேகான் குண்டு வெடிப்பில் பின்னால் உள்ள பார்க்கவியலாத கைகள் என்ற Malegaon Sphotamagil Adrushya Hath (Invisible hands behind Malegaon blast) புத்தகத்தை வெளியிட்டான். வேடிக்கை என்னவென்றால் இந்த புத்தகத்தை வெளியிட்டது அபிநவ் பாரத் என்ற தீவிரவாத இயக்கத்தின் தலைவி ஹிமானி சாவர்கர். இவள் ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தை தோற்றுவித்த சாவர்கரின் மருமகள்.

https://www.ndtv.com/mumbai-news/thane-blasts-convicts-get-10-years-in-jail-466099

**சனாதன் சன்ஸ்தா தீவிரவாத இயக்கமே..**

சரி விஷயத்திற்கு வருவோம். சனாதன் சன்ஸ்தா இயக்கத்தை எப்படி இந்த தீவிரவாதியுடன் தொடர்புபடுத்துவது?

அந்த கவலையே உங்களுக்கு வேண்டாம். சனாதன் சன்ஸ்தா இயக்கத்தின் அதிகாரபூர்வ முத்திரையுடன் அவர்கள் இந்த தீவிரவாதிக்கு பணம் தந்து உதவியதை அவர்களே வெளியிட்டுள்ளார்கள் என்பது தான் வேடிக்கை.

**தீவிரவாத பயிற்சி**

இவர்களுடைய இணைய தளத்திற்கு சென்று பார்த்தால் இவர்கள் எத்தகைய தீவிரவாத செயல்களை போதித்து வருகிறார்கள் என்பது வெட்ட வெளிச்சம்.



நினைப்பவர்கள். இதனை அவர்கள் தங்கள் இணையதளத்திலேயே கூறியுள்ளனர் வேறு விதமாக.

இவர்களுடைய இயக்கத்தில் இணைந்து செயல்பட நினைத்த இரண்டு சிறுமிகளை ஆர்.எஸ்.எஸ்ஸை சேர்ந்த அவர்களுடைய குடும்பத்தினர் வலுக்கட்டாயமாக கொண்டு சென்று விட்டதாக அந்த இணையதளத்தில் குற்றம் சாட்டியுள்ளனர்.

மஹாராஷ்டிர காவல்துறையின் கூற்றுப்படி சனாதன் சன்ஸ்தாவின் உறுப்பினர்கள் சமீர் கெய்க்வாட்டும் அவனுடன் ரவீந்திர பாட்டீலும் கோவிந்த பன்சாரே படுகொலையை செய்தவர்கள். இந்த ரவீந்திர பாட்டீல் 2009 வழக்கில் தேசிய விசாரணை நிறுவனத்தால் தேடப்படுபவன்.


Texts on Defence : Vol. 3 H - Self-defence Training

Firing

**Standing stance (*khaḍā pavitrā*) [shooting in the standing ure]**

1. Assume a stance as described in sub-point 'F' of point '6. ling the rifle'.

Standing stance (2)

2. 'Ready to fire - one (*fire ke liye sajja - ek*)' : Once the command '*Fire ke liye sajja - ek* (Ready to fire - one) is given, touch the tip of the rifle butt to your right shoulder. Support the wooden part near the barrel of the rifle with the left hand. At that time the left elbow should face the ground and the fingers of the right hand should be held against the butt of the rifle. The right elbow should be parallel to the ground. The rifle too should be parallel to the ground and the opening of its barrel should face the evildoer. The gaze too should be towards the evildoer.

Standing stance (3)

3. 'Two (*do*)' : When '*Do* (two)' is counted, the right index finger should be placed on the trigger of the rifle. The right cheek should touch the butt of the rifle. One should close the left eye and with the right, one should fix one's gaze on the target.

While taking aim, the rifle should be positioned in such a way that the slit at the posterior end of the barrel and the iron pointer in the small tube lie in one line and are just above the target. Then gradually the barrel should be lowered such that the upper portion of the slit and the iron pointer

Chapter 6 : Training with Air Rifles 109

lie in one line and the rifle should be steadied when the target is aligned with these two. This makes it easier to aim accurately at the target.

4. 'Three (*tin*)' : Inhale and hold the breath and then pull the trigger to strike the target.

Objective : Holding the beath helps to remain steady when pulling the trigger.

Suggestions : After the pellets are fired one should reload the rifle as given in sub-points 'A and F' of point '6. Loading the rifle' and fire again as given above.

After firing all pellets one should assume the stance as given in point '6 F' by reversing all the steps. Finally one should return to the attention stance (*sāvdhān*).

**7 B. Sitting stance (*baiṭhā pavitrā*) [shooting in the sitting stance]**

1. Load the rifle according to steps 'A to F' of 'point 6. Loading the rifle'. Then proceed as given below.

2. Ready to fire - one (*fire ke liye sajja - ek*)' : Once this command is given touch the right knee to the ground. Bending the toes of the right foot support the foot on its ball. At that time the left knee should be bent and kept in front of the right one. The left elbow should rest on the left knee and the fingers of the left hand should support the wooden part near the barrel of the rifle. The butt of the rifle should be clapsed by the fingers of the right hand and the end of the butt should be pressed against the right shoulder. At that time the right elbow should be parallel to the ground.

Sitting stance (2)

3. 'Two (*do*)' : The right index finger should rest against the trigger. Hold the butt of the rifle against the right cheek and close the left eye. As described in point '7 A: Standing stance (*khaḍā pavitrā*)' aim at the target with the right eye

2009ல் நடந்த முர்காவூன் சர்ச் குண்டு வெடிப்பு வழக்கில் தேடப்பட்டவுடன் ரவீந்திர பாட்டீல் தலைமறைவாகி விட்டான். இந்த வழக்கில் இரண்டு சனாதன் சன்ஸ்தா உறுப்பினர்கள் தங்க ளுடைய ஸ்கூட்டரில் வெடி குண்டுகளை எடுத்து சென்ற போது தற்செயலாக (நல்லவேளையாக) வெடித்து விட்டது. அதில் அவர்கள் இறந்து விட்டனர். மல்கோண்டா பாட்டீல்,யோகேஷ் நாயக் என்பது அவர்கள் பெயர்.

அகோல்கர் என்பவனும் தலைமறை வாகி விட்டான்.

விநாயக் தலேகர், விநாயக் அஷ்டேகர், திலிக் மங்கய்ன்கர், தனஞ் செய் அஷ்டேகர், பிரஷாந்த் ஜூவேகர், வினய் படீல் என்ற ஆறு பேரை இந்த குண்டுவெடிப்புடன் தொடர் புள்ளதாக கூறி காவல்துறை கைது செய்தது. பின்னர் இவர்கள் 2013ல் விடுவிக்கப்பட்டனர்

இவர்கள் விடுவிக்கப்பட்டதை சனாதன் சன்ஸ்தா அமைப்பு திருவிழாவாக கொண்டாடியது.

என்.டி.டி.வி செய்திகளின் படி இந்த அகோல்கரும் வீரேந்திர தவ்தே என்பவனும் 2009ம் ஆண்டே தபோல்கரை கொலை செய்ய திட்டமிட்டனர். ஆனால் மேற்சொன்ன குண்டுவெடிப்பில் இரண்டு சனாதன் சன்ஸ்தா




இயக்கத்தினர் தற்செயலாக இறந்து விடவே அவர்கள் இந்த திட்டத்தை தள்ளிவைத்தனர். கடைசியாக ஆகஸ்ட் 20 2013ல் இந்த



**Jubilation by 'Hindutvavadis' outside Court after Shri. Samir Gaikwad was granted bail !**

கொலை நடத்தி முடிக்கப்பட்டது. தபோல்கர் நடைபயணம் மேற்கொண்ட நேரத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வீரேந்திர சிங் தவ்தே தான் இந்த கொலைக்கு காரணகர்த்தா. இவனே இதை திட்டமிட்டவன். இவன் தான் முதலில் காவல்துறையிடம் அகப்பட்டவன். இவன் ஒரு ஈ.என்.டி(காது, தொண்டை, மூக்கு) மருத்துவன்.

நரடா செய்திகள் என்ற பத்திரிகையின் கூற்றுப்படி சனாதன் சன்ஸ்தா அமைப்பை சேர்ந்த சமீர் கெய்க்வாட் என்பவனும் அவனுடன் ரவீந்திர பாட்டீலும் கோவிந்த பன்சாரேவின் கொலையை செய்து முடித்தனர்.இதனை மற்ற பத்திரிகைகளும் உறுதிப் படுத்துகின்றன. சமீர் கெய்க்வாட்டின் மொத்த குடும்பத்திற்கும் சனாதன் சன்ஸ்தாவிற்கும் தொடர்பு உண்டு என ஹிந்து பத்திரிகை எழுதியது.

http://www.thehindu.com/news/cities/mumbai/first-arrest-in-pansare-murder-case/article7658986.ece

http://www.thehindu.com/news/national/other-states/pansare-murder-sanatan-sanstha-under-the-scanner/article7665709.ece

https://www.sanatan.org/en/innocence-of-sanatan-sanstha

https://www.ndtv.com/pune-news/narendra-dabholkars-murder-delayed-by-4-years-due-to-2009-margao-blast-cbi-1419649

https://www.ndtv.com/india-news/narendra-dabholkar-murder-cbi-names-arrested-doctor-virendra-tawde-as-key-conspirator-1455558

http://naradanews.com/2016/04/narada-news-investigation-hindu-sanatan-sansthas-plot-kill-muslims-christians/

### சனாதன் சன்ஸ்தா வெளியில் தெரிய ஆரம்பித்தது எப்போது?

2008ல் சனாதன் சன்ஸ்தா இயக்கத்தை சேர்ந்த இருவர் பன்வேல் என்ற இடத்தில் "ஜோத்தா அக்பர்" என்ற திரைப்படம் ஒடிக் கொண்டிருந்த போது அதற்கும் "ஆம்ஹி பச்புதே" என்ற மராத்தி நாடகத்திற்கும் குண்டு வைத்தனர். அப்போது தான் இந்த இயக்கத்தின் பெயர் முதலில் வெளிவரத்தொடங்கியது. இதன் பின்னர் இந்த இயக்கத்திற்கு எதிராக பொது நல வழக்குகள் சமூகசேவகர்களால் தொடரப்பட்டது.

### சனாதன் சன்ஸ்தாவை காப்பாற்றிய ப.சிதம்பரம்

2011ல் மஹாராஷ்டிர அரசும் கோவா அரசும் கர்நாடகா அரசும் சனாதன் சன்ஸ்தா இயக்கம் தீவிரவாத இயக்கம் என அறிக்கை கள் அனுப்பின. அப்போது இந்த அமைப்பை காப்பாற்றியவர் அப்போதைய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம்.

சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டத்தின் பிரிவு 35(3)(சி)ன்35 (3) ( c) of the Unlawful Activities (Prevention) Amendment Act (UAPA) கீழ் இந்த அமைப்பை தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை ப.சிதம்பரம் நிராகரித்தார். இவர்களை தடை செய்யும் அளவிற்கு குறிப்பிட்ட நடவடிக்கைகள் குறிப் பிட்ட சம்பவங்கள் எதுவுமில்லை என அப்போது அவர் கூறினார் என ஹிந்து பத்திரிகை செய்திகளை வெளியிட்டுள்ளது. மேலும் ப.சிதம்பரம்

"none of the three [State governments] have addressed the real issue and they may be asked to indicate whether the organisation be banned or members of the organisation be prohibited from undertaking any activity under

section 153 (b) IPC [imputations, assertions prejudicial to national integration].” என்று கூறினார்.

இதன் அர்த்தம் "இந்த மூன்று மாநில அரசுகளும் (மஹாராஷ்டிர அரசும் கோவா அரசும் கர்நாடகா அரசும்) உண்மை பிரச்னையை குறிப்பிடவில்லை. இந்த அமைப்பு தடை செய்யப்பட வேண்டுமா அல்லது இந்த அமைப்பின் உறுப்பினர்கள் இந்திய பீனல் கோட் பிரிவு 153 (பி)ன் கீழ் தேசிய ஒருங்கிணைப்புக்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபடுவதை தடுக்க வேண்டுமா என்பதை குறிப்பிட வேண்டும் என கேட்டுக்கொள்ளப் படுகின்றன"

http://www.thehindu.com/news/national/understanding-the-sanatan-sanstha/article7686673.ece

http://www.hindustantimes.com/india-news/maharashtra-seeks-ban-on-right-wing-sanatan-sanstha-sends-proposal-to-centre/story-Gp1BCOlG8RsrhlSsZ0zJUJ.html

இந்த நிறுவனமும் அதன் உறுப்பினர்களும் இவ்வளவு வெளிப்படையாக தீவிரவாத செயல்களில் ஈடுபட்ட பின்னரும் முன்னாள் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்திற்கு ஏன் இந்த சந்தேகம் எழுந்தது என்று தெரியவில்லை. இதே போன்ற கேள்விகளைத் தான் அப்போதைய காங்கிரஸ் உள்துறை அமைச்சர்கள் சிமி (SIMI) அமைப்பை தடை செய்வதிலும் எழுப்பினார்களா என்று தெரியவில்லை. பா.ஜ.க.வின் கோவா எம்.எல்.ஏ.வான விஷ்ணு வாக்என்பவர் சிமி அமைப்பை போன்று சனாதன் சன்ஸ்தா அமைப்பையும் தடை செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்.

https://timesofindia.indiatimes.com/india/Like-SIMI-ban-Sanatan-Sanstha-for-creating-terror-says-Goa-BJP-MLA/articleshow/49065729.cms

http://www.deccanchronicle.com/151001/nation-current-affairs/article/ramnathi-villagers-goa-seek-ban-sanatan-sanstha

http://www.tribuneindia.com/news/nation/goa-cong-writes-to-pm-seeking-ban-on-sanatan-sanstha/136891.html

http://www.thehindu.com/todays-paper/tp-miscellaneous/tp-others/congress-seeks-ban-on-sanatan-sanstha/article14424951.ece1

மூன்று மாநில அரசுகள் இந்துத்துவா பாஜக எம்.எல்.வின் கோரிக்கை, கோவா பொது மக்களின் கோரிக்கை, சொந்த கட்சியான காங்கிரஸ் கட்சியின் கோரிக்கை இவை எதற்கும் ப.சிதம்பரம் அவர்கள் செவி சாய்க்கவில்லை. சனாதன் சன்ஸ்தாவை தடை செய்ய போதுமான ஆதாரமில்லை என்று மறுத்துவிட்டார்.

http://www.thehindu.com/news/national/understanding-the-sanatan-sanstha/article7686673.ece

**சனாதன் சன்ஸ்தாவின் நோக்கங்கள்**

சனாதன் சன்ஸ்தாவின் நோக்கம் எளிமையானது. தீய செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக இனப்படுகொலையை நடத்துவது. தீய செயல்களை செய்பவர்கள் யார் என்றால் இந்திய முஸ்லிம்களும் இந்திய கிறித்தவர்களும்.

இவர்கள் பல ஆண்டுகளாக முஸ்லிம்களுக்கும் கிறித்தவர்களுக்கும் எதிராக பிரச்சாரங்களை செய்து வருகின்றார்கள். இது குறித்து பல அரசுகள் உளவு செய்திகளை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தன. ஆனால் காங்கிரஸ் அரசாகட்டும் அல்லது பிஜேபி அரசாகட்டும் இதனை காதில் போட்டுக் கொள்ளவில்லை.

ஆர்.எஸ்.எஸ். இயக்க பின்புலத்தில் இயங்கக்கூடிய ஹிந்து ஐக்கியாவேதி என்ற கேரள இந்து அமைப்பு கேரள எழுத்தாளர்களை பார்த்து இப்படி மிரட்டுகிறது, "கௌரி லங்கேஷின் தலைவிதி தான் உங்களுக்கும்".

http://www.hindustantimes.com/india-news/gauri-lankesh-s-fate-awaits-you-kerala-hindu-aikyavedi-leader-warns-writers/story-bHRdATiXpIbp3u6DBtDOeM.html

https://scroll.in/latest/850266/kerala-police-book-hindu-leader-for-allegedly-threatening-secular-writers

**முஸ்லிம்களையும் கிறித்தவர்களையும் கொலை செய்..**

இவர்களுடைய சிந்தனைகளை இப்படி மாற்றியமைப்பதே சனாதன் சன்ஸ்தாவின் வேலை. தீவிரவாத செயல்களின் மூலம் முஸ்லிம்களையும் கிறித்தவர்களையும் கொலை செய்வதை தீயசெயல் புரிபவர்களை அழித்தொழிக்கும் புனிதமான ஆன்மீக பயிற்சியாக இவர்களுடைய பரப்புரைகளிலும் அதற்கான புத்தகங்களிலும் எழுதி வைத்து தான் இவர்கள் இத்தகைய தீவிரவாத செயல் களில் ஈடுபடுகிறார்கள். ஆனாலும் இவர் களுக்கு எதிராக எந்த ஆதாரமும் இல்லை என த்திய காங்கிரஸ் பாஜக அரசுகள் கருதின. கருதுகின்றன.

2008இல் இருந்து 2011 வரை மஹாராஷ் டிரா தீவிரவாத எதிர்ப்புப்படை தோண்டி எடுத்த ஆதாரங்கள் சனாதன் சன்ஸ்தாவிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க போதுமானவை என்றாலும் முன்னாள் காங்கிரஸ்-தேசியவாத காங்கிரஸ் அரசும் தற்போதைய பிஜேபி அரசும் அரசியல் காரணங்களுக்காக இவற்றை கருத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. ஆனாலும் காவல்துறையினரின் கோப்புகளில் காணப் படும் ஆதாரங்களை அவ்வளவு எளிதில் அழித்துவிட முடியாது என நரடா செய்திகள் பத்திரிகை கூறுகிறது.

**ஆர்.கே.சிங்**

பிஜேபி பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் உள்துறை செயலாளருமான ஆர்.கே. சிங் அவருடைய பணிக்காலத்தில் சனாதன் சன்ஸ்தாவிற்கு எதிராக நடவடிக்கையை மேற் கொள்ள மஹாராஷ்டிர அரசு போதுமான ஆதாரங்களை அளிக்கவில்லை என்று கூறினார்.

தேசியவாத காங்கிரஸ் கட்சியின் செய்தி தொடர்பாளர் நவாப் மாலிக் அவர்கள் மஹா ராஷ்டிரா அரசின் பரிந்துரைகளை செயல் படுத்த ஆர்.கே.சிங் தவறுவதாகவும் சனாதன் சன்ஸ்தாவுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள தயங்குவதாகவும் குற்றம் சாட்டினார்.

"சனாதன் அமைப்பின் மீதான தடை கோரும் மஹாராஷ்டிரா அரசின் கோரிக் கையை யு.பி.ஏ அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. ஆர்.கே. சிங் போன்ற நபர்கள் இந்த பொறுப்பில் இருக்கும் வரை இந்த கோப்பிற்கு முடிவு எட்டப்படாது" என்று அப்போது அவர் கூறினார்.

மாநில அரசு ஒருவேளை போதுமான ஆதாரங்களை தரவேயில்லை என்றாலும் மஹாராஷ்டிர தீவிரவாத தடுப்புப்படை 2008ல் சனாதன் சன்ஸ்தா அமைப்பினர் 6 பேருக்கு எதிராக தாக்கல் செய்த 1020 பக்க குற்றப்பத்திரிகையில் போதுமான ஆதாரங்கள் சனாதன் சன்ஸ்தாவிற்கும் அதன் கிளை அமைப்பான ஹிந்து ஜனஜாக்ருதி சமிதிக்கும் எதிராக இருக்கவே செய்தன என நரடா செய்திகள் என்ற பத்திரிகை கூறுகிறது.

**மகன் தீவிரவாதி - தந்தையின் பெருமிதம்**

ஆகஸ்ட் 2008ல் தானே குண்டு வெடிப்பு சம்பவத்தில் ஈடுபட்டவரின் தந்தை விக்ரம் பவே என்பவன் தன் மகனின் தீவிரவாத செயல்குறித்து ஒரு பத்திரிகை சந்திப்பில் இவ்வாறு கூறினான், "என்ன செய்திருந்தாலும் சரி அவர்கள் ஹிந்துத்துவாவிற்காக செய்துள் ளார்கள்."

"இந்த கட்கரி ரங்கயாதன் குண்டு வெடிப்பில் என் மகன் விநாயக்கின் பங்கு குறித்து நான் பெருமிதம் கொள்கிறேன்."

விக்ரம் பவேவும் சனாதன் சன்ஸ்தாவின் உறுப்பினன். இது தான் சனாதன் சன்ஸ்தா வின் ஆன்மீக பயிற்சி. தன் மகனின் தீவிரவாத செயலை பகிரங்கமாக ஒப்புக் கொண்டு அதை குறித்து பெருமைப்படும் ஒரே இயக்கம் சனாதன் சன்ஸ்தாவாகத் தான் இருக்க முடியும். இவ்வாறு கண்ணை மூடிக்கொண்டு தீவிரவாத செயல்களில் ஈடுபடுவதற்கும் தன்னுடைய குடும்பத்தாரை ஈடுபடுத்துவதற்குமான பயிற்சி யைத் தான் சனாதன் சன்ஸ்தா கொடுத்து வருகிறது.

பவே இப்படியும் கூறினான், "என் மகன் குண்டு வைத்தானா என்பது எனக்கு தெரியாது ஆனால் குண்டு வைத்த நான் அந்த செயலை கண்டிக்க மாட்டேன்"




**தந்தையும் தீவிரவாதி**

பின்னர் விக்ரம் பவேவும் இந்த குண்டு வெடிப்புகளில் ஈடுபட்டவன் என்பது கண்டு பிடிக்கப்பட்டு நீதிமன்றத்தால் 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டான்.

மஹாராஷ்டிராவின் சிப்லுன், சதாரா, நாசிக் போன்ற பகுதிகளில் சனாதன் சன்ஸ்தா தன்னுடைய வேர்களை ஆழமாக பதித்துள்ளது.

**இந்து இளைஞர்களுக்கு மூளைச்சலவை**

பல ஓய்வு பெற்ற காவல்துறை அதிகாரிகள், ஆயுதப்படை அதிகாரிகள் சனாதன் சன்ஸ்தாவில் தற்போது உறுப்பினர்கள். இளைஞர்கள் தங்கள் வேலைகளை விட்டு விட்டு எப்படி சனாதன் சன்ஸ்தாவின் இணைய மூளைச்சலவை செய்யப்படுகிறார்கள் என்பது குறித்து பல செய்திகள் உள்ளன.

முதலில் இந்த படித்த மற்றும் படிக்காத இளைஞர்கள் இந்துக்களின் புனிதமான நம்பிக்கைகளை காப்பாற்றும் பாதுகாவலர்களாக மாற்றப்படுவார்கள். பின்னர் இவர்கள் இந்த இயக்கம் தரும் தீவிரவாத பயிற்சிகளுக்கு ஆட்படுத்தப்படுவார்கள். அதன் பின்னர் இவர்களுக்கு இடப்படும் தீவிரவாதப் பணிகளை செவ்வனே செய்து முடிப்பார்கள்.

உள்துறை செயலர் ஆர்.கே.சிங். சனாதன் சன்ஸ்தாவை தடைசெய்ய மஹாராஷ்டிர அரசு போதுமான ஆதாரங்களை தரவில்லை எனக்கூறி வசதியாக தப்பித்துக்கொண்டாலும் அவர் செய்திருக்க வேண்டியது என்னவென்றால் மஹாராஷ்டிரா தீவிரவாத தடுப்புப்படை சமர்ப்பித்திருந்த ஆவணங்களை சற்றே உற்று நோக்கியிருக்க வேண்டும். ஆனால் அதனை மத்திய உள்துறை செய்யவில்லை.

சன்ஸ்தாவின் செய்தி தொடர்பாளர் ஒருவன் சில ஊடகபேட்டிகளில் சனாதன் இயக்கத்தினர் வெறும் சத்தத்தை ஏற்படுத்தத்தான் வெடிகுண்டுகளை வைத்தார்கள் என அரக்கத்தனமாக பேசினான். இது ஆவணப் படுத்தப்பட்டுள்ளது.

**தீவிரவாதிகளுக்கு பணம் பட்டுவாடா..**

காவல்துறையினர் ரமேஷ் கட்கரி மற்றும் விக்ரம் பவே ஆகிய இருவரின் குடும்பத்தினருக்கு அவர்கள் குண்டு வைத்ததற்காக சனாதன் சன்ஸ்தா அமைப்பு பண உதவி




செய்து வருவதை கண்டறிந்தனர். இவர்கள் இருவரும் தானேவிலும் வாஷியிலும் 4 ஜூன் 2008ல் வெடிகுண்டுகளை வெடிக்க செய்தனர்.

மஹாராஷ்டிரா கோவா காவல்துறையினர் இதுபோன்ற ஆயிரக்கணக்கான ஆவண ஆதாரங்களின் மீது அமர்ந்து கொண்டு தான் இந்த விசாரணையை செய்து முடித்துள்ளனர்.

தற்காப்புக்கலை என்ற போர்வையில் சனாதன் சன்ஸ்தா தன் இயக்கத்தினருக்கு எவ்வாறு ஆயுத பயிற்சிகளை அளிக்கிறது என்ற ஆவணங்கள் சனாதன் சன்ஸ்தாவினரிட மிருந்தே கைப்பற்றப்பட்டு காவல்துறையின ரிடமும் தற்போது உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் அலுவலகத்தையும் அலங் கரித்து கொண்டிருப்பதாக நரடா செய்திகள் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தீய செயல்களில் ஈடுபடுவர்களுக்கு எதிராக இந்த தீவிரவாதப் பயிற்சிகளை பிரயோகப்படுத்த வேண்டும் என சனாதன் சன்ஸ்தா அறிவுறுத்துகிறது. தீய செயல்களில் ஈடுபடுபவர்கள் யார் என்றால் அவர்கள் முற்போக்குவாதிகள், முஸ்லிம்கள் மற்றும் கிறித்தவர்கள் என்று அதற்கு விளக்கமும் அளிக்கப்படுகிறது.

சனாதன் சன்ஸதாவின் தற்காப்பு கலை புத்தகத்தின்படி பாகிஸ்தானும் முஸ்லிம்களும் பேய்கள்.

தங்களுடைய இயக்கத்தினரை ஹிந்து நக்சல்களாக மாறவேண்டும் என வலியுறுத்தும் இவர்களுடைய அறிவிப்புகள் பத்திரிகை களில் வந்தாலும் அது மத்திய மாநில அரசுகளுக்கு செவிடன் காதில் ஊதிய சங்கை போன்றதாகும்.

சனாதன் சன்ஸ்தாவின் முக்கியமான கொள்கை "கஷ்டதர்மாவிற்கு எதிராக போர் தொடுப்பது. " நம்மை நாடியவர்களை பாதுகாப்பதற்கும் தீயசெயல் புரிபவர்களை அழிப்பதற்காகவும் ஆன்மீக பயிற்சி எடுப்பது கலியுகத்தில் நன்மையான பகுதி" என்பதே கஷ்டதர்மாவிற்கு எதிராக போர் தொடுப்பதின் விளக்கம்.

டாக்டர் ஜெயந்த் பாலாஜி அதாவாலே என்பவன் இஸ்லாமிய தீவிரவாதத்திற்கு (?) எதிராக பதிலடி தர தற்போது தேவைப்படுவது இந்து தீவிரவாதமே என்று கூறி அதற்காக உருவாக்கப்பட்டதே இந்த இயக்கம். இவன் ஒரு ஹிப்னோ தெரஃபிஸ்ட். மனோ தத்துவ நிபுணன். இதனால் மற்றவர்களை மூளை சலவை செய்து தீவிரவாதிகளாக்குவது இவனுக்கு எளிதாகிப்போனது.

சனாதன் சன்ஸ்தாவின் முன்னாள் உறுப்பினர்கள் கூற்றுப்படி இதன் முதல் பயிற்சி முகாம் டாமிஸ் கிராமத்தில் (Damise village) நடந்தது.

அதன் பின்னர் பயிற்சி முகாம்கள் சதாரா, கரத், ராய்கத் (Satara, Karad and Raigad) போன்ற இடங்களில் நடந்தன. இவை மஹா ராஷ்டிரா மாநிலத்தில் உள்ளன. (பல குண்டு வெடிப்புகளில் உபயோகப் படுத்தப்பட்ட சிம் கார்டுகள் சதாரா மாவட்டத்தில் உள்ள

PANVEL SANATAN SANSTHA

SCHEDULE-I - HONORARIUM

| SR.NO. | NAME | AMOUNT |
|---|---|---|
| | KUM. KARUNA MHATRE. | 6000.00 |
| 2 | KUM. KAVITA GARUD. | 4000.00 |
| 3 | KUM. YOJANA NAIK. | 7300.00 |
| 4 | SHRI. YOGESH JOSHI. | 12000.00 |
| 5 | SHRI. VIJAY BAGVE. | 14250.00 |
| 6 | SHRI. VISHNU LONDHE. | 2850.00 |
| 7 | SHRI. SHRIRAM DHANAWDE. | 12500.00 |
| 8 | SHRI. AJAY PRAJAPTI | 10500.00 |
| 9 | SHRI. MAYURESH MULYE. | 2200.00 |
| 10 | SHRI. YOGESH PRABHUDESAI. | 2250.00 |
| 11 | SHRI. BHUPENDRA MOUJE. | 11500.00 |
| 12 | SHRI. GHANSHYAM MALONDKAR. | 2550.00 |
| 13 | SHRI. SANJAY NANOSKAR. | 15750.00 |
| 14 | SHRI. SHANKAR MHATRE. | 5250.00 |
| 15 | SHRI. SUBHASH MHATRE. | 6000.00 |
| 16 | KUM. YOGITA NAIK. | 4600.00 |
| | KUM. DEEPALI HONAP. | 5000.00 |
| | KUM. PALLAVI AUNDHKAR. | 8500.00 |
| | KUM. VEENA ADKAR. | 6400.00 |
| 20 | SHRI. KULDEEP VAITY. | 12000.00 |
| 2 | SHRI. SUNIL AWARE | 8500.00 |
| 22 | SHRI. ANIL PADLE. | 12000.00 |
| 23 | SHRI. SATYAVAN KADAM. | 6000.00 |
| 24 | SHRI. VIJAY LOKE. | 3000.00 |
| 25 | KUM. MADHAVI ACHARYA. | 3000.00 |
| 26 | SHRI. BHUSHAN MITHBAVKAR. | 6000.00 |

| SR.NO. | NAME | AMOUNT |
|---|---|---|
| 27 | SHRI. JAGDISH PATIL. | 4900.00 |
| 28 | SHRI. NITIN SALOKHE. | 3500.00 |
| 29 | SHRI. RAMAKANT KENI. | 10500.00 |
| 30 | KUM. NISHA HOJGE. | 2750.00 |
| 31 | KUM. VIDYA KHATU. | 5400.00 |
| 32 | SHRI DEEPAK PRARAB | 7000.00 |
| 33 | MRS. SMITA JOSHI | 2000.00 |
| 34 | MRS. NANDINI SALOKHE | 750.00 |
| 35 | KUM. MANDAKINI SHENDE | 1800.00 |
| 36 | KUM. PRATIKSHA HADKAR. | 2250.00 |
| 37 | KUM. RUKMINI THAKUR | 2000.00 |
| 38 | SHRI.SIDRAM VANMARE. | 2500.00 |
| 39 | SHRI. JITENDRA AMBRE. | 1800.00 |
| 40 | SHRI. RAMCHANDRA PANGUL. | 6000.00 |
| 41 | SHRI. SANDESH KOLI. | 1350.00 |
| 42 | SHRI. AMIT HAMBAR. | 9500.00 |
| 43 | SHRI. SAMBHAJI MANE. | 750.00 |
| 44 | SHRI. ABHAY VARTAK. | 3000.00 |
| 45 | SHRI. VIKRAM BHAVE. | 3000.00 |
| 46 | SHRI. ABHIJEET SAWANT. | 5000.00 |
| 47 | SHRI. SHASHIKANT KUMBHAR. | 7500.00 |
| 48 | KUM. SUVARNA THAKUR. | 3000.00 |
| 49 | SHRI. ASHOK DAHATONDE | 3750.00 |
| 50 | MRS. PRACHITI DESHMUKH | 1000.00 |
| 51 | SHRI. RAVINDRA SALOKHE. | 3000.00 |
| 52 | SHRI. AJAY THAKUR. | 2750.00 |
| 53 | SHRI. JANARDAN SARANG. | 5000.00 |
| 54 | SHRI. SAGAR MHATRE. | 2250.00 |
| | SHRI. VAIBHAV NAGARKAR. | 4100.00 |

narada TheNextHashtag

வனோடு தொடர்புடையது என்பது கூடுதல் செய்தி)

தங்களுடைய இயக்கவாதிகளுக்கு சனாதன் சன்ஸ்தாவினர் முன்னாள் இராணுவத்தினரைக் கொண்டு பயிற்சி அளித்தனர். ஒவ்வொரு முகாமும் 200 பேருக்கு கமாண்டோ பயிற்சி அளித்தது. அப்படி பயிற்சி முடித்தவர்களை சதக்குகள் (Sadhaks) என்று கூறுவார்கள்.

இந்த தீவிரவாத பயிற்சியைத்தான் சனாதன் சன்ஸ்தா ஆன்மீக பயிற்சி என்று அழைக்கிறது. அதன் பின்னர் இவர்கள் தர்மாவிற்கு (இந்து மதத்திற்கு) எதிராக வேலை செய்பவர்களை அடையாளம் கண்டு அவர்களை அழித்தொழிக்க வேண்டும் என சனாதன் சன்ஸ்தாவின் பத்திரிகை கூறுகிறது.

இவை அனைத்தும் மத்திய மாநில அரசு களின் கண்களுக்கு தெரியவில்லை. மத்திய மாநில அரசுகள் குருடாகிப்போயின.

தீய செயல் செய்பவர்களுக்கு எதிரான வன்முறை வன்முறையே அல்ல என்பது இவர்களின் பத்திரிகையில் உள்ள வாசகங்கள்.

மஹாராஷ்டிர தீவிரவாத தடுப்புப்படை தாக்கல் செய்துள்ள 1020பக்க குற்றப் பத்திரிகையை ஆய்வு செய்தாலே போதும் சனாதன் சன்ஸ்தா அமைப்பு தீவிரவாத அமைப்பு தான் என்பது தெள்ளத்தெளிவாகும்.

நரடா செய்திகள் என்ற பத்திரிகையில் வந்துள்ள இந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ள அனைத்து ஆவணங்களும் அதாவா லேவால் எழுதப்பட்டவை

"கஷ்ட தர்மா சாத்னா" என்ற புத்தகம் (நாடியவர்களை பாதுகாப்பதற்கும் தீயசெயல் புரிபவர்களை அழிப்பதற்காகவும் எடுக்கப் படும் ஆன்மீக பயிற்சி) என்ற புத்தகத்தில் இவர்களின் முக்கியமான அடிப்படை நம்பிக்கைகள் என்னவென்று தெளிவாக தெரியவருகின்றன.

"நீதிக்காக நாம் போர் செய்வோம்" என்று







எழுதி போர் பிரகடனம் செய்து இருந்தாலும் அதாவாலே இதுவரை சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. உண்மையில் அதாவாலே மதப்போருக்கான அல்லது தர்மயுத்தத் திற்கான கால அட்டவணையையே உருவாக்கி தன்னை பின்பற்றுபவர்களுக்கு கொடுத்துள் ளான். இதன் மூலம் சனாதன் சன்ஸ்தா இயக் கத்தினர் "தெய்வீக ஆட்சியை" கொண்டு வருவோம் என்று நம்புகின்றனர்.

**தீவிரவாத அட்டவணை**

தீயசெயல் செய்வோருக்கு (முற்போக்கு வாதிகள், முஸ்லிம்கள்,கிறித்தவர்கள்) எதிரான போருக்கான அதாவாலேவின் அட்டவணை இதோ:

*1997* முதல் *1999* வரை - தீயசெயல் செய்வோரை அழித்தொழிக்க நினைக்கும் மனங்களை கவர்வது ஆன்மீக பயிற்சியின் ஒரு பகுதி.

*2000-2006* வரை : தீயசெயல் செய்வோரை அழித்தொழிக்கும் செயலை உண்மையில் செய்வது

*2007-2022* வரை : தெய்வீக அரசை (உண்மையான சத்தியத்தின் அரசு) எப்படி நடத்துவது என அறிந்து கொள்வது.

*2023-2025:* தெய்வீக அரசை நடத்துவது -

(ஆன்மீக அறிவியல் : தொகுதி 1 'Science of Spirituality 1E, Spiritual Practice of Protecting Seekers and Destroying Evildoers, Page 64)

சனாதன் சன்ஸ்தாவின் செய்தி பத்திரிகை யான சனாதன் பிரபாத்தில் கிறித்துவ பாதிரியார்களை கொம்புகளுடன் வரைந்து கேலி செய்வது மற்ற மதத்தினரை சீண்டுவது போன்ற செயல்களை எளிதாக காணலாம்.

நவம்பர் 2005ல் இவர்களின் பத்திரிகையில் வந்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பற்றிய தரக்குறைவான கட்டுரை மஹாராஷ்டிராவின் பல பகுதிகளில் கலவரத்தை உருவாக்கியது.

சனாதன் சன்ஸ்தா மிகச்சிறிய இயக்கமாக தெரியலாம். ஆனால் இவர்களின் தீவிரவாத செயல்களுக்கு மற்ற இந்துத்துவா இயக்கங்களும் ஆதரவளித்து வருகின்றன. கவரப்பட்டு வருகின்றன. பஜ்ரங் தள், சிவசேனா, மஹாராஷ்டிரா நவநிர்மான் சேனா போன்ற இயக்கங்கள் சனாதன் சன்ஸ்தாவுடன் ஒரே தளத்தில் பயனிக்க தயங்கவில்லை. ஆர்.எஸ்.எஸ்-இன் பல தலைவர்களும் இதே தளத்தில் பயணிக்கவே விரும்புகின்றனர் என்பது இந்த நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு விடப்பட்டுள்ள சவால். (நன்றி - நரடா செய்திகள் பத்திரிகை)

**ஆம்ஆத்மி கட்சி**

குஜராத் கலவரங்களில் ஈடுபட்டவர்களை பேட்டி கண்டு அதனை இரகசியமாக படமாக்கி ஊடகங்களில் வெளிவிட்டவர் ஆசிஷ் கேதான் அவர்கள். அவர் தற்போது ஆம் ஆத்மி கட்சியில் உள்ளார். சனாதன் சன்ஸ்தா அமைப்பு தடை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அவர் முன்வைத்தார்.

article/news-ians/sanatan-sanstha-behind-free-thinkers-murders-should-be-banned-aap-116060601434_1.html

http://www.thehindu.com/news/national/goa-giving-financial-support-to-sanatan-aap/article7685826.ece

கம்யூனிஸ்ட் கட்சிகளும் சனாதன் சன்ஸ்தா அமைப்பின் மீது தடையை கோரின.

https://scroll.in/latest/849818/gauri-lankesh-murder-left-parties-demand-ban-on-outfits-like-the-sanatan-sanstha

**சனாதன் சன்ஸ்தா அமைப்பால் கொலை செய்யப்பட்டவர்கள்**

நரேந்தர தபோல்கர், கல்புர்கி, கோவிந்த் பன்சாரே தற்போது கௌரி லங்கேஷ் என இந்த அமைப்பால் கொல்லப்பட்ட முற்போக்காளர்களின் பட்டியல் விரிந்து கொண்டே செல்கிறது.

குறிப்பாக கோவிந்த் பன்சாரே அவர்கள் கர்கரேயை கொலை செய்தது யார்? என்ற நூலை அறிமுகம் செய்து வெளியிட்ட சில நாட்களில் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர்கள் அனைவரும் கொல்லப்பட்டது ஒரே வகையில் தான்.




ஆம் ஆத்மி கட்சியின் கோவா பிரிவும் இதனையே வலியுறுத்தியது. மேலும் சனாதன் சன்ஸ்தாவின் பத்திரிகைக்கு கோவா மாநில அரசு விளம்பரம் அளிப்பதை கடுமையாக கண்டித்தது.

http://www.business-standard.com/

நாட்டுமக்கள் உண்மையை அறிந்து கொள்ளக்கூடாது என்பதில் இந்துத்துவாவாதிகள் கவனமாக இருக்கிறார்கள்.

கல்புர்கியையும் கௌரி லங்கேஷையும் சுட்டுக்கொல்ல பயன்பட்டது ஒரே துப்பாக்கி தான் என்பது ஆய்வில்

தெரிய வந்துள்ளது. இந்த கொலைகளின் மூலம் முற்போக்காளர்களின் வாயை மூட எத்தனிக்கின்றனர் இந்த தீவிரவாதிகள்.




**கௌரி லங்கேஷ்**

கௌரி லங்கேஷ் பத்திரிகையாளர் மற்றும் சமூக சேவகர். பெங்களூரை சேர்ந்தவர். லங்கேஷ் பத்திரிகே என்ற கன்னட வாரப் பத்திரிகையின் ஆசிரியர். இந்த பத்திரிகையை ஆரம்பித்தவர் அவருடைய தந்தை லங்கேஷ். இவர் இந்து தீவிரவாதத்திற்கெதிராகவும் சாதி வேறுபாடுகளுக்கு எதிராகவும் பெண்ணுரிமைகளுக்காவும் பேசி வந்தார். அது மட்டுமன்றி முஸ்லிம்களுக்கு ஆதரவாக பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கருத்துகளை வெளியிட்டு வந்தார். இது போதாதா இந்து தீவிரவாதிகளுக்கு அவரை கொல்ல.

கௌரி லங்கேஷ் அவர்களுக்கு குழந்தைகள் கிடையாது. ஜவஹர்லால் நேரு பல்கலைகழகத்தின் மாணவனும் போராளியு



மான கன்னையா குமாரையும் குஜராத் தலித் போராளி ஜிக்னேஷ் மேவானியையும் தன்னுடைய பிள்ளைகள் என்று கூறி வந்தார். இவருக்கு தொடர்ச்சியாக மிரட்டல்கள் வந்த வண்ணம் இருந்தன. ஆனால் அவர் அதைப்பற்றி எல்லாம் கவலைப்பட்டவராக தெரியவில்லை.

அது மட்டுமன்றி கல்புர்கியும் கௌரி லங்கேஷ் அவர்களும் லிங்காயத் என்ற சமூகத்தை சேர்ந்தவர்கள். அவர்கள் அந்த சமூகத்தை தனிமதமாக சிறுபான்மை இனத்தவர்கள் பட்டியலில் இணைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து போராடி வந்தனர். இது ஆதிக்க இந்துக்களுக்கு பேரிடியாக இருந்தது. இந்துக்கள் என்ற நிலையில் இருந்து அவர்கள் போய் விட்டால் அது இந்துக்களுக்கு பேராபத்து. நாளை பலர் இதே போன்ற கோரிக்கையை முன்வைப்பார்கள் என்று நினைத்தார்கள். எனவே இந்த இருவரையும் தீவிரவாதிகள் கொன்று விட்டனர்.

செப்டம்பர் 5 2017 அன்று ராஜேஷ்வரி நகரில் உள்ள அவருடைய இல்லத்தில் வைத்து அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். வயதான பெண்மணி என்றும் பாராமல் அவரை நோக்கி 7 துப்பாக்கி குண்டுகள் பாய்ச்சப்பட்டன இரவு எட்டுமணியளவில். சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

தபோல்கர், கோவிந்த பன்சாரே, கல்புர்கி எப்படி சுட்டுக்கொல்லப்பட்டார்களோ அதே போன்று இவரும் சுட்டுக்கொல்லப்பட்டார். எப்படி தபோல்கர், கோவிந்த் பன்சாரே கொலைகளில் சனாதன் சன்ஸ்தா அமைப்பினர் ஈடுபட்டனரோ அதே போன்றுதான் இவருடைய கொலையிலும் சனாதன் சன்ஸ்தா அமைப்பினர் ஈடுபட்டுள்ளனர் என

சந்தேகிக்கப்படுகின்றனர்.

கர்நாடகா முதலமைச்சர் சித்தாராமையா இது ஜனநாயகத்தின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல் என இந்த படுகொலையை கண்டித்தார். அரசு மரியாதையுடன் துப்பாக்கி குண்டுகள் முழுங்க கௌரி லங்கேஷின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

கௌரி லங்கேஷின் படுகொலையை கண்டித்து நாடெங்கும் பல போராட்டங்கள் நடைபெற்றன. பெங்களூரில் நடைபெற்ற போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். நானும் கௌரி தான் என்ற கோஷத்துடன் நடைபெற்ற இந்த போராட்டத்தின் மூலம் மக்கள் சொல்ல வந்தது என்னவென்றால் நீ எங்களில் எத்தனை பேரை கொலை செய்ய முடியும்? நாங்களும் கௌரி லங்கேஷ் போன்றே சிந்திப்போம் என்பதே.

https://www.ndtv.com/bangalore-news/week-after-gauri-lankesh-murder-bengaluru-on-streets-with-i-am-gauri-posters-1749459



**கௌரி லங்கேஷின் கடைசிப்பதிவு**

கர்நாடக முஸ்லிம்கள் மனமுடைந்து போய்விட்டனர் என்றால் அது மிகையல்ல. கௌரி லங்கேஷ் தன்னுடைய சமூகவலை தளத்தில் முகநூலில் பலரை தன் நண்பர்களாக வைத்திருந்தார். அவர் முகநூலில் கடைசியாக போட்ட பதிவு என்ன தெரியுமா? ரோஹிங்யா முஸ்லிம்களுக்கான பதிவு. ரோஹிங்யா முஸ்லிம்களை நாட்டை விட்டு வெளியேற்றும் இந்திய அரசின் முடிவை விமர்சித்து எழுதியது. முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டால் ஓடோடி வந்து விடுவார் கௌரி. இது முஸ்லிம்களுக்கு பெருத்த சேதமே. ஒட்டு மொத்த முஸ்லிம் சமுதாயமே அன்றைய தினம் கண்ணீர் விட்டது. முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல சமூகத்தில் பின் தங்கியவர்களுக்காகவும் தொடர்ந்து போராடி வந்தவர்

கௌரி லங்கேஷ்.

https://economictimes.indiatimes.com/news/politics-and-nation/senior-journalist-gauri-lankesh-shot-dead-in-bengaluru/articleshow/60381538.cms

**சனாதன் சன்ஸ்தா தடை செய்யப்பட வேண்டும்**

2009லேயே தடை செய்யப்பட்டிருக்க வேண்டிய ஒரு அமைப்பு. தீவிரவாத அமைப்பு. வெளிப்படையாக தாங்கள் யாருக்கு எதிரானவர்கள் என்பதை பகிரங்கப்படுத்தி தீவிரவாதப் பயிற்சிகள் எடுத்து தங்களுக்கு வேண்டாதவர்களை தொடர்ச்சியாக கொலை செய்து வருகின்றது. இந்த கொலைகளை தடுக்க இம்மியளவு கூட மத்திய அரசு விரும்பவில்லை. அப்படி இருந்திருந்தால் என்றோ சனாதன் சன்ஸ்தா அமைப்பை தடை செய்திருக்க வேண்டும். ஆனால் அப்படி செய்யவில்லை. செய்ய விரும்பவுமில்லை.

இந்த அமைப்பு தடை செய்யப்பட்டிருந்தால் இன்று கௌரி லங்கேஷ் கொலை செய்யப்பட்டிருக்க மாட்டார். குறைந்த பட்சம் தபோல்கர், கோவிந்த பன்சாரே போன்றோரின் கொலைகளில் சனாதன் சன்ஸ்தாவின் கைகள் உறுதி செய்யப்பட்ட பின்னராவது இந்த அமைப்பு தடை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

காங்கிரசோ அல்லது பிஜேபியோ யாராக இருந்தாலும் அவர்கள் இந்துத்துவாவாதிகளை தங்களின் செல்லப்பிள்ளைகளாகத் தான் பார்க்கின்றனர். போதுமான ஆதாரங்கள் இருந்தும் இந்த தீவிரவாத இயக்கங்களின் மீது இவர்களின் ஆட்சியில் எந்த நடவடிக்கையும் இல்லை. ஆனால் எந்த ஆதாரமும் இல்லாமல் எந்த முகாந்திரமும் இல்லாமல் சிமி அமைப்பின் மீது தடை நீட்டிக்கப்படுகின்றது. இது தான் இந்த நாட்டின் ஆட்சியாளர்களின் தர்மம்.

கடைசியாக நம் கோரிக்கை இப்போதாவது அடுத்த கொலை நடப்பதற்கு முன்னாவது சனாதன் சன்ஸ்தா அமைப்பை தயவு செய்து தடை செய்யுங்கள்.

**- அபூ அஃப்ரஹ்**

Courtesy - Narada News






# மோடியினால் விழும் விமான போக்குவரத்துக் கழகங்கள்

சிறு தொழில்கள் சிதறின... விவசாயம் வீழ்ந்தது... பெருந்தொழில்கள் அதல பாதாளத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றன. படுவேகத்தில் இவற்றைத் தொடர்ந்து ஆகாய மார்க்கமும் அதிர்ந்து கொண்டிருக்கின்றது.

ஜி.எஸ்.டி. (Good Service Tax) என்ற இந்திய அரசின் வரிவிதிப்பால், இந்தியாவிலுள்ள விமான போக்குவரத்து நிறுவனங்களுக்கு ரூ. 5,700 கோடி நஷ்டம் ஏற்படும். இந்த இழப்பு வருடந்தோறும் நடக்கும் இந்திய விமானப் போக்குவரத்து கழகங்களின் கூட்டமைப்பைச் சேர்ந்த ஜெட் ஏர்வேஸ், இண்டிகோ, ஸ்பைஸ் ஜெட் போன்ற நிறுவனங்களின் பொறுப்பாளர்கள் மத்திய பாசிச அரசின் நிதி அமைச்சகத்திடம் இதைக் கூறி உள்ளார்கள். (செப்டம்பர்-27, 2017-இல்)

வாடிக்கையாளர்கள், அதாவது விமானப் போக்குவரத்தைப் பயன்படுத்துவார்கள். இனி இந்திய விமான போக்குவரத்து நிறுவனங்களைப் புறக்கணிப்பார்கள். காரணம், இந்திய விமானங்களின் கட்டணம் அதிகமாக இருக்கும். அதற்குக் காரணம் ஜி.எஸ்.டி. என்ற வரி விதிப்பே.

ஆனால், உலகின் இதரப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு இந்த வரி விதிப்பு இல்லை. அதனால் அவை விதிக்கப்படும் கட்டணம் மிகவும் குறைவாகவே இருக்கும். பெரும்பாலும் "Gulf Airline" என்ற கேல்ஃப் ஏர்லைன் போன்ற நிறுவனங்களையே வாடிக்கையாளர்கள், அதாவது பயணிகள் பயன்படுத்துவார்கள். ஏனெனில் அங்கு ஜி.எஸ்.டி. என்ற வரி இல்லை.

இந்தியாவின் விமானப் போக்குவரத்தை நடத்திக் கொண்டிருப்பவர்கள் இனி சர்வதேச விமானப் போக்குவரத்துக் கழகங்களோடு போட்டியிட முடியாது.

இந்திய விமானப் போக்குவரத்து நிறுவனங்களின் கூட்டமைப்பு பொட்டில் அறைந்தார் போல், இன்னொன்றையும் சொன்னார்கள். அது, சென்ற வருடம் 2016 ஆம் ஆண்டில் நமது அரசு விமானப் போக்குவரத்தை அனைவருக்கும் உகந்ததாகவும் மாற்றப் போகின்றோம்.

விமானப் போக்குவரத்து நிறுவனங்கள் நஷ்டத்தால் கீழே வீழ்ந்து விடாமல் பார்த்துக் கொள்வோம் என்பதே.

அத்தோடு, சின்ன, சின்ன நகரங்களுக்கும், விமானப் போக்குவரத்தை இணைப்போம் என்றும் அரசு அறிவித்தது. இப்போது ஜி.எஸ்.டி.யால் இந்த மொத்த அறிவிப்பும் ஏட்டுச் சுரைக்காய்தான் என்றாகிவிட்டது.

**எடுத்ததற்கெல்லாம் ஜி.எஸ்.டி. வரி**

இந்தியாவின் வெட்கக்கேடு, விமானங்களின் என்ஜின் அல்லது ஏதாவது உறுப்பு அல்லது பகுதி பழுது பட்டால் பழுது பார்க்கப்படும் நிறுவனங்கள் ஏதும், இந்தியாவில் இல்லை. இதனால் விமானங்களின் உறுப்புகள் பழுது பட்டால் வெளிநாடுகளில்தான், பழுது பார்க்க வேண்டும். அவற்றைப் பழுது பார்த்து இந்தியாவுக்குள் கொண்டு வந்திடும்போது, அவற்றை இறக்குமதி செய்தாக Import Duty என்ற இறக்குமதி வரியை விதித்து விடுகின்றார்கள். (The Hindu 13-10-2017)

இந்த இறக்குமதி வரி போதாதென்று, அந்த விமான உறுப்பை பழுது பார்த்திட ஆகும் செலவுக்கும், கூலிக்கும் ஜி.எஸ்.டி. என்ற வரி விதிக்கப்படுகின்றது. இதனால் விமான போக்குவரத்துத் துறைக்கு மேலும் 350 கோடி ரூபாய் செலவாகும் எனக் கணிக்கப்படுகின்றது. இதையும் நிதி அமைச்சகத்திடம் தெரிவித்துள்ளார்கள்.

**உதிரி பாகங்களை இடம் விட்டு இடம் மாற்றினால் ஜி.எஸ்.டி.?**

நாம் எத்தகையதொரு குரூரம் நிறைந்த ஆட்சியின் கீழ் இருக்கின்றோம் என்பதற்கு இதோர் அத்தாட்சி.

விமான போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் விமானங்களின் உதிரி பாகங்களை நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் (Central Stores) பாதுகாப்பாக வைத்திருக்கின்றார்கள். அந்த மாநிலத்திற்குச் செல்லும் விமானம் தற்செயலாக பழுதடைந்தால் உடனேயே அதை மாற்றுவதற்கே இந்த ஏற்பாடு.

சில நேரங்களில் இந்த உதிரி பாகங்களை மாநிலம் விட்டு மாநிலம் எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது. இப்போதைய பாசிச அரசு, அதற்கும் வரி விதித்துள்ளது. இதனால் விமான போக்குவரத்து நிறுவனங்களுக்கு ரூபாய் 300 கோடி இழப்பு ஏற்படுகின்றது. வருடந்தோறும் ஏற்படும் இந்த இழப்பை விமான நிறுவனங்கள் ஏற்றிட முடியாது. ஆதலால் அவை மூடப்படும் நிலை ஏற்படலாம். அவை மூடப்பட்டால் வேலை இழப்போர் எண்ணிக்கை அதிகமாகும். ஏற்கெனவே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகின்றது. மோடி ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின் வேலைவாய்ப்புகள் ஏதும் ஏற்படவே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (Source The Hindu 13-10-2017)




இப்படி தங்கள் ஆதாரங்களை, நிதி அமைச்சகத்திடம் எடுத்துச் சொல்லி ஒரு விண்ணப்பத்தையும் தந்துள்ளார்கள் விமான போக்குவரத்தைச் சார்ந்தவர்கள். எதிர்காலம் இருண்டதாகவே இருக்கின்றது என்கின்றார்கள்.

**குறிப்பு :** நிச்சயமாக விமானப் போக்குவரத்தை நடத்துபவர்கள், ஜி.எஸ்.டி.யை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதனை விமானங்களில் பயணம் செய்வதைப் பழக்கமாக கொண்டவர்களின், தலையில்தான் கட்டுவார்கள். இதனை தாங்காமல் பயணிகளில் பெரும்பாலோர் இந்திய விமானங்களை புறக்கணிப்பார்கள். ஏனைய நாடுகளின் விமானப் போக்குவரத்தை நாடுவர். இதனால் இந்த வியாபாரம் இன்னும் கெடும் அபாயம் உள்ளது.

**– எம்.ஜி.எம்.**

# பணமதிப்பு நீக்கம் ஒரு நாடகம்!



## ராம்மனோகர் ரெட்டி நேர்காணல்

கடந்த நவம்பர் 8 இரவு பிரதமர் நரேந்திர மோடி அறிவித்த பணமதிப்பு நீக்க நடவடிக்கையின் மூலம் ஏற்பட்ட எதிர்மறை விளைவுகள் குறித்து விமர்சனக் குரல்கள் எழுந்திருக்கின்றன.

உலக அரங்கில், பல்துறை ஆய்வு முடிவு களை வெளியிடும் மிக முக்கியமான ஆய்விதழாக இந்தியாவிலிருந்து வெளியாகும் எகனாமிக் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி இதழின் ஆசிரியராகச் சுமார் 12 ஆண்டுகாலம் பணியாற்றிய சி.ராம் மனோகர் ரெட்டியும் இந்நட வடிக்கையை விமர்சிக்கிறார்.

டீமானிடைசேஷன் அண்ட் பிளாக் மணி (ஓரியண்ட் பிளாக் ஸ்வான் பதிப்பக வெளியீடு) எனும் புத்தகத்தை எழுதியி ருக்கிறார். இந்தப் புத்தகத்தையொட்டி, தி இந்து மையம் சமீபத் தில் விவாதம் ஒன்றை ஏற்பாடு செய் திருந்தது. அதில் கலந்துகொள்ள சென்னை வந் திருந்த ராம்மனோகர் ரெட்டியைச் சந்தித்துப் பேசிய திலிருந்து...

*மக்களின் எதிர்ப்பு இல்லாத காரணத்தா லேயே பண மதிப்பு நீக்க நடவடிக்கை வெற்றி பெற்றதாகக் கூறப் படுகிறது. இது குறித்து உங்கள் கருத்து என்ன?*

இந்தக் கேள்வியை நான் இரண்டு விதமா கப் பார்க்கிறேன். ஒன்று, இந்த நடவடிக்கை மூலம் அரசு என்ன சாதித்தது? இரண்டு, மக்கள் இந்த நடவடிக்கையை எப்படிப் பார்க்கிறார்கள்?

முதல் கேள்விக்குப் பதில், பணமதிப்பு நீக்க நடவடிக்கை மூலம் அரசு, மிகக் குறைந்த அளவே சாதித்திருக்கிறது. பணமதிப்பு நீக்க அறிவிப்புக்குப் பிறகு, கடந்த மூன்று நான்கு மாதங்களில், அரசுக்குத் திரும்பக் கிடைத்திருக் கும் கறுப்புப் பண அளவு, மிகவும் குறைவுதான். ஆர்.கே. நகரைப் பாருங்கள். எவ்வளவு கறுப்புப் பணம் புழங்கியிருக்கிறது?

இரண்டாவது கேள்விக்குப் பதில், இந்த நடவடிக்கையால் மக்கள் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரி கிறது. கறுப்புப் பணம் ஒழியும் என்று நடுத்தர மற்றும் கீழ் நடுத்தர மக்கள் நம்பவைக்கப் பட்டிருக்கிறார்கள். அதனால்கூட, அவர்கள் எந்த ஒரு எதிர்ப் பையும் காட்டாமல் இருந் திருக்கலாம். ஆனால், அவர்கள் இப்போது உண்மையை உணர்ந்திருப்பார்கள்.

*கள்ள நோட்டுக்களைக் கட்டுப்படுத்துவது இந்த நடவடிக்கையின் நோக்கங்களில் ஒன்று என்று சொல்லப் படுகிறது. அது சரிதானா?*

நிச்சயமாக இல்லை. காரணம், பண மதிப்பு நீக்க நடவடிக்கையின்போதும் புதிய 2,000 ரூபாய் கள்ள நோட்டுக்கள் பிடிபட்ட தாக ஊடகங்களில் செய்திகள் வெளியாயின. ஆக, இந்தப் புதிய ரூபாய் நோட்டுக்கள் முன்பு நம்மிடையே இருந்த ரூபாய் நோட்டுக்களில் இருந்த அதே அம்சங்களையே கொண்டிருக் கின்றன. புதிய ரூபாய் நோட்டுக்களில் கூடுத லான பாதுகாப்பு அம்சங்கள் எதுவுமில்லை.

இந்த நடவடிக்கையின்போது, தங்களிட மிருக்கும் கணக்குக் காட்டப்படாத பணத்தை பிரதான் மந்திரி கரீப் கல்யாண் டெபாசிட் திட்டத்தின் கீழ் வங்கியில் டெபாசிட் செய்ய மத்திய அரசு வழிவகை செய்தது. இதன் மூலம் சுமார் ரூ.50 ஆயிரம் கோடி முதல் ரூ.1 லட்சம் கோடி வரை கறுப்புப் பணம் வசூலா கும் என்று சொல்லப்பட்டது. ஆனால் வெறும் ரூ.4,000 கோடி மட்டுமே வசூலாகியுள்ளது. இதுகுறித்து உங்கள் கருத்து என்ன?

பணமதிப்பு நீக்க நடவடிக்கை தோல்வி யடைந்து விட்டது இன்று இதிலிருந்தே தெரிகிறதே! பணமதிப்பு நீக்கத்தால், கறுப்புப் பணம் வைத்திருப்பவர்கள்தான் அதிகப் பயன டைந்துள்ளார்கள். காரணம், வங்கிகள் மூலம் அவர்கள் தங்களின் பணத்தை வெள்ளையாக மாற்றிவிட்டார்கள். நீங்கள் குறிப்பிட்ட திட்டத்தையும் அவர்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. சுலபமாகத் தப்பித்து விட்டார்கள்.

மேலும், அந்தத் திட்டத்தின் கீழ் வங்கி களில், வருமானத்தில் 25%-க்கும் குறைவாகக் கணக்குக் காட்டப்படாத பணத்தை டெபா சிட் செய்தவர்களை இப்போது, வருமான வரித்துறை தனக்குக் கிடைத்துள்ள கூடுதல் அதிகாரத்தின் காரணமாக, வன்கொடுமைக்கு உள்ளாக்கி வருகிறது. அதாவது, சட்டத்தை மதித்து நடந்துகொண்டவர்கள் மாட்டிக் கொள்ள மறுபக்கம், சட்டத்தை மதிக்காதவர் கள் தப்பித்துக்கொண்டார்கள்.

பணமதிப்பு நீக்க நடவடிக்கை என்பது வெறும் பொருளாதார நடவடிக்கை என்ப தைத் தாண்டி, அது ஒரு அரசியல் தந்திரம் என்கிறீர்கள். அதை விளக்க முடியுமா?

நிச்சயமாக! முதல் விஷயம், பணமதிப்பு நீக்க அறிவிப்பு ரகசியமாக வைக்கப்பட்டது. முன்னறிவிப்பு கொடுத்தால், கறுப்புப் பணம் வைத்திருப்பவர்கள் உஷாராகிவிடலாம் என்று அரசு நினைத்திருக்கலாம். ஆனால், அவ்வளவு ரகசியமாக வைத்தும், பலர் தப்பித்துக் கொண்டார்கள் என்பதுதான் கவலையளிக்கும்



விஷயம்.

கறுப்புப் பொருளாதாரத்தை ஒழிப்பது தான் எங் களின் லட்சியம் என்கிறது அரசு. கறுப்புப் பணம், அதில் ஒரு சிறு பங்குதான். அதனால்தான் மோடி, கறுப்புப் பணத்தை ஒழிப்பது எங்களின் முதல் நடவடிக்கை என்றார். ஆனால் அந்த நடவடிக்கைக்குப் பிறகு, வேறு பெரிய நடவடிக்கைகள் எதையும் அரசு மேற்கொள்ள வில்லை. இதுவே அவர்களின் மெத்தனத்தைக் காட்டுகிறது.

உதாரணத்துக்கு, இந்த ஆண்டு கொண்டு வரப்பட்ட பட்ஜெட்டை எடுத்துக்கொள் ளுங்கள். தேர்தல் நன்கொடைகளில் பெரிய அளவில் கறுப்புப் பணம் கைமாறுகிறது. எனவே அதைத் தடுக்க தேர்தல் பத்திரங்கள் என்ற விஷயம் இந்த பட்ஜெட்டில் பரிந்து ரைக்கப்பட்டுள்ளது. இதன்படி, கட்சிகளுக்கு நிதி அளிப்பவர்கள், வங்கிகள் மூலம் இந்தப் பத்திரங்களைப் பயன்படுத்தலாம். இதனால் ஒருவர், தான் எந்தக் கட்சிக்கு நிதி அளித்தேன் என்பதை வெளிப்படுத்தத் தேவையில்லை. அதேபோல, தான் யாரிடமிருந்து நிதி பெற்றேன் என்று கட்சியும் வெளிப்படுத்த அவசிய மில்லை. இது மேலும் குழப்பத்தையே விளைவிக்கும். கறுப்புப் பணம் அதிகமாக இது வழிசெய்யும்.

நவம்பர் 8-ம் தேதி பிரதமரின் உரையில், ஊழல், கறுப்புப் பணம் மற்றும் கள்ள நோட்டு ஆகியவற்றை ஒழிக்க பணமதிப்பு நீக்க நட வடிக்கை மேற்கொள்ளப் படுகிறது என்றார். ஆனால் அந்த அறிவிப்பு அடுத்த நாள் அரசி தழில் வெளியானபோது, ஊழல் என்ற வார்த்தை காணப்படவில்லை. ஏன் என்ற கேள்விக்கு, பிரதமர்தான் பதில் சொல்ல வேண்டும்.

**அப்படியென்றால், பணமதிப்பு நீக்கத்தின் நோக்கம் தான் என்ன?**

இந்த நடவடிக்கை நடைமுறைக்கு வந்த சில நாட்களுக்குப் பிறகு கள்ள நோட்டுக்கள் வெளியாகின. அந்தத் தோல்வியை மறைக்க, கறுப்புப் பணத்தை ஒழிப்போம் என்று சொல்லப்பட்டது. சில வாரங்களுக்குப் பிறகு, எதிர்பார்க்கப்பட்ட அளவு கறுப்புப் பணம் வரவில்லை. அந்தத் தோல்வியை மறைக்க பணமில்லாப் பொருளாதாரம் என்று சொன் னார்கள். ஆனால் முறை யான கட்டமைப்பு வசதிகள் இல்லாததால் பணமில்லாப் பொரு ளாதார பிரச்சாரமும் இப்போது தோல்வியைத் தழுவியுள்ளது.

ஆட்சிக்கு வந்த பிறகு, அம்பானி, அதானி களுக்கு நிறைய சலுகைகள் வழங்கப்பட்டன. இதனால் மோடி அவர்களுக்கு நெருக்கமாக இருக்கிறார் என்று விமர்சனங்கள் எழுந்தன. அதனால் அவர்மீது மக்கள் வெறுப்புடன் இருந்தார்கள். அதிலிருந்து தன் மீதான பிம்பத்தை நிலைநிறுத்திக்கொள்ள, இப்படி ஒரு நடவடிக்கையை அவர் எடுத்துள்ளார்.

ஆம், பணமதிப்பு நீக்க நடவடிக்கை என்பது ஒரு நாடகம். அந்த நாடகத்தின் மூலம் அவருக்குத் தேவையான அளவு அரசியல் வெற்றி கிடைத்துவிட்டது. ஆனால், பொருளா தாரம்தான் சிக்கலில் மாட்டிக்கொண்டது!






# தொடர் தோல்விகளை மறைக்க மோடி இனக்கலவரத்தை தூண்ட வாய்ப்பு!

## பிரிட்டிஷ் வார இதழ் "தி எகனாமிஸ்ட்" எச்சரிக்கை!

இந்தியாவின்பொருளாதாரம்கடுமையாகச் சரிவடைந்துள்ள நிலையில், பிரதமர் நரேந்திரமோடியின் செல்வாக்கு மிகவும் வீழ்ச்சியடைந்து வருகிறது. இந்நிலையில் தங்களுடைய கவுரவப் பிரச்சினையான குஜராத் மாநில சட்டப்பேரவைத் தேர்தலும் நடைபெறவிருப்பதால், அவற்றையெல்லாம் திசை திருப்புவதற்காக வகுப்புவாதப் பதற் றத்தை உருவாக்கி இந்து மத உணர்வைத் தூண்டுவதற்கு பிரதமர்மோடி திட்டமிட்டிருப் பதாக பிரிட்டிசின் (இங்கிலாந்தின்) பிரபல வார இதழ் "தி எகனாமிஸ்ட்" செய்தி வெளி யிட்டுள்ளது.

இது குறித்து "தி எகனாமிஸ்ட்" வார இதழ் வெளியிட்டுள்ள செய்தியில் கூறியிருப்ப தாவது:-

இந்தியாவில் தமது செல்வாக்கு சிதைந்து விடாமல் தக்க வைத்துக்கொள் வதற்காக பிரதமர் நரேந்திர மோடி வகுப்பு வாதப் பதற்றநிலையை உருவாக்க முயற்சிப்பார் என்ற தகவல் மிகுந்த கவலை அளிக்கிறது.

அவர் குஜராத் மாநிலத்தில் முதல் அமைச் சராக இருந்தபோது, வகுப்புக் கலவரத்தை உருவாக்கி குறைந்தபட்சம் 1000 பேர் - அவர்களில் பெரும்பாலோர் முசுலிம்கள் கொல்லப்பட்டனர். அதில் மோடி முக்கியப் பங்கு வகித்தார்.

இந்தியாவில் உள்ள வர்த்தக ஊட கங்கள் பல இந்த சம்பவத்தைக் குறிப்பிடுவதைத் தவிர்த்து வருகின்றன. இந்த நாள் வரையில் அவர், அந்தப் படுகொலையை திட்டவட்ட மாகக் கண்டிக்கவோ, அதைத்தடுக்கத் தவறிய தற்கு மன்னிப்பு கோரவோ இல்லை.

### இந்து மத வெறியர்

இந்தியாவின் பிரதமர் மோடி சீர்திருத்த வாதி அல்ல. அவர் பெருமளவில் தேசியவாத தீவிரப் பிரச்சாரகர். 2014இல் நரேந்திரமோடி பிரதமரான போது மாறுபட்டக் கருத்துக்கள் வெளிப்பட் டன. அவர் பொருளாதார சீர்திருத்தவாதி என்ற முகமூடிக்குள் ஒளிந்து கொண்டி ருக்கும் இந்து மதவெறியர் என்றும் கூறப்பட்டது.

கடந்த 3 ஆண்டுகளாக அந்தப்பிரச் சினை அடங்கியிருந்ததாகத் தோன்றுகி றது. சில நேரங்களில் அவர் அந்த சமய உணர்வை வெளிப்படுத்தியுள்ளார். மிகவும் குறிப்பாக இந்தியாவின் மிகப்பெரிய புகழ்பெற்ற மாநில மான உத்திரப்பிரதேசத்தின் முதலமைச்சராக தீவிரமான இந்து மதகுருவை நியமித் ததன் மூலம் அதை வெளிப்படுத்தினார்.

**ஜி.எஸ்.டி.யில் தேவையில்லாத குழப்பங்கள்**

பொருளாதாரச் சீர்திருத்தங்கள் எல்லாம் வெளித்தோற்றங்கள் என்று குறிப்பிடுவதன் மூலம் மக்கள் ஏமாற் றப்பட்டு வருகின்றனர். சரக்கு மற்றும் சேவை வரி வரவேற்கப்பட்ட போதி லும் தேவையில்லாத குழப்பங்களாலும் அதிகார வர்க்கத்தின் நடைமுறைகளாலும் அதன் செயல்பாடு பெருமளவில் குறைக்கப் பட்டுள்ளது.

புதிய திவாலா சட்டம் சரியான திசையில் எடுக்கப்பட்டுள்ள ஒரு நட வடிக்கையாகும். ஆனால் அது நிதி அமைப்பைச் சீர் படுத்த நீண்ட காலம் ஆகும். ஏனெனில் அது அரசு வங்கிக ளின் ஆதிக்கத்தில் உள்ளது. அந்த வங்கி கள் திரும்பப் பெறப்படாத கடன்களால் பாதிக்கப்பட்டுள்ளன.

நிலம் வாங்குவதில் ஏற்படும் கஷ்டம் முதல், கடுமையான தொழிலாளர் சட்டங்கள் வரையிலான தீவிரமான பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப் பதற்கான மத்திய அரசு அவற்றை மாநிலங்களுக்குத் திருப்பி விடுவதாகத் தான் உள்ளது.

**பண மதிப்பு இழப்பு சட்டப்பூர்வ பாதிப்பு!**

உயர் மதிப்பு பணத்தாள்கள் மதிப் பிழப்பு நடவடிக்கை (1000 மற்றும் 500 ரூபாய் பணத் தாள்கள் செல்லாது என்ற அறிவிப்பும் கடுமையான விமர்சனத் திற்கு உள்ளானது. அதுவும்கூட எதிர் விளைவுகளை ஏற்படுத்துவ தாகவும் சட்டவிரோதச் செயல்களுக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாமல் சட்ட பூர்வமான வர்த்தகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தியது.

அது வியப்பளிக்கவில்லை. பொரு ளாதாரம் அதை இழுத்துச் செல்லத் தொடங்கி யது. ஆண்டின் முதல் மூன்று மாதங்களில், மோடி பதவிக்கு வந்த போது இருந்ததை விட மிக மெதுவாக ஆண்டு விகிதமான 6.1 சதவிகிதத்துக்கு இழுத்துச் சென்றது.

**சிறப்பாகச் செயல்படவில்லை!**

வர்த்தகத்துக்கு ஆதரவானவர் என்ற மோடி யின் செல்வாக்கு குறிப்பிட்ட காலங்களில் உதவுவதற்கு அவர் மேற் கொண்ட கடுமை யான முயற்சிகள் - ஒரு குறிப்பிட்ட தொழிற் சாலைக்கு இடம் கண்டறிதல் அல்லது மின்சார நிலை யத்தைக் கட்டுவதை விரைவுபடுத்துதல் போன்றவற்றால் அது நிலைத்திருந்தது.

ஆனால் அவர் திட்டமிட்டுப் பணி யாற்றுவதில் சிறப்பாகச் செயல்பட வில்லை. பொருளாதாரத்தை மீட்டெ டுப்பதற்கான முயற்சியில் ஏற்படக் கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் சிறப்பாகச் செயல்படவில்லை.

உண்மையில் மோடி, தீவிரவாத இந் துக்களை தீவிரமான வர்த்தகர்கள் ஆக்கு வதில் தான் கவனமாக இருந்தார். அவ ருடைய அரசு சமீபத்தில் பெருகிவரும் மாட்டிறைச்சி ஏற்றுமதி வர்த்தகத்தில், கால்நடைகளை வாங்குவதில் புதிய விதிகளைப் புகுத்தியதன் மூலம், பசுக் களை மதிக்கும் இந்துக்கள் மகிழ்வதற் காகக் குழப்பத்தை எற்படுத்தியது.

**உத்தரப்பிரதேச முதலமைச்சர் கலவரத்தைத் தூண்டிவிடுகிறார்!**

உ.பி.மாநிலத்தின் முதலமைச்சராகத் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ள யோகி ஆதித் யாநாத் இதர பிரிவினருக்கு எதிராக சமய எதிர்ப்பையும் கலவரத்தையும் தூண்டி விட்டதற்காகவும் பிற குற்றங்களுக்காகவும் விசாரிக்கப்பட்டு வருகிறார்.

மோடியும் கூட மோசமான எண்ணம் கொண்டவராக மாறி விட்டதாகக் கருதப்படு கிறார். மோடியின் கீழ் செயல்பட்டுவரும் இந்து தேசிய குண்டர்கள் இந்தியாவின் மதச்சார்பற்ற தன்மையிலிருந்து அரசு விலகிச் செல் வதைக் கண்டிப்பவர்களுக்கு எதிராகச் செயல்படுகின்றனர்.

அரசைக் கண்டித்ததற்காக என்.டி. டி.வி., காவல் துறையினரால் வழக்க மாக இவ்வாறு செயல்படுவதற்கு அடிப்படையாக இல்லாத காரணங்களுக்காக சோதனையிடப்பட்டது.

இவ்வாறு பிரிட்டிஷ் வார இதழான "தி எகனாமிஸ்ட்" தனது செய்தியில் தெரிவித் துள்ளது.

# காந்திஜியைக் கொலை செய்ய மறுத்த முஸ்லிம்

# பக்த் மியானின் வரலாறு



1917ஆம் ஆண்டில் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் ஏஜெண்ட்கள் பல்வேறு ஆலைகளை இந்தியாவில் நிறுவிட முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். அத்தனையும் நமது இயற்கை வளங்களைச் சுரண்டும் திட்டங்கள். இந்த ஆங்கில தொழில் நிறுவனங்களில் ஒன்றுதான் Motihari Ltd மோத்திஹாரி லிமிடெட்.

மோத்திஹாரி என்பது அன்றைய இந்தியாவில் சம்பாரான் Champaran மாவட்டத்தின் தலைநகர். இது பீகார் மாநிலத்தில் இருக்கின்றது. இந்தப் பகுதியில் நிறுவப்பட்ட இந்த மோத்திஹாரி லிமிடெட் என்ற நிறுவனம் அவுரிச்செடியிலிருந்து (நீலச்) சாயம் தயாரிக்கும் நிறுவனம். இப்படி தயாரிக்கப்படும் சாயம் துணிகளுக்கும் இதர பொருட்களுக்கும் சாயம் தர பயன்படுத்தப்படும்.

இந்த சாயம் தயாரிக்கும் தொழில் நிறுவனமான மோத்திஹாரி நிறுவனம், Irwin "இர்வின்" என்ற ஆங்கிலேயனுக்குச் சொந்தமானது. இதற்காகப் பல ஆயிரம் ஏக்கர் நிலத்தை கையகப்படுத்த ஆங்கில அரசு அனுமதி அளித்து இருந்தது. இவன் அவுரிச் செடியை முளைவிக்க நம் நாட்டு விவசாயிகளின் நிலங்களைப் பெரிய அளவில் அபகரித்து வந்தான்.

அந்த நிலங்களில் வசித்த விவசாயப் பெருங்குடி மக்களை விரட்டினான். அவர்களை ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த பூமியிலிருந்து பிடுங்கி வெளியே வீசிவிட்டதால், அந்த மக்கள் வாழ்ந்திட வழியுமின்றி தொழிலுமின்றி வதைப்பட்டனர்.

இன்றைய நாட்களில், நமது சுதந்திர இந்தியாவில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் என்ற பெயரில் (Special Economic Lone) குடிமக்களை அவர்கள் தலைமுறை, தலைமுறையாக வாழ்ந்து வந்த பூமியிலிருந்து விரட்டுகின்றார்கள் அதுபோலத்தான் அன்று பீகார் மாநிலத்தின் சம்பாரான் பகுதியில் Ws இர்வின் செய்து கொண்டிருந்தான்.

மக்களின் இந்த ஓலம் காந்திஜியின் காதுகளில் எட்டியது. காந்திஜி அவர்கள், அந்தப் பகுதிகளுக்கு விஜயம் செய்து, அந்த மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார். அந்த மக்களை அன்றைய ஆங்கிலேயனின் ஆட்சிக்கு எதிராகவும் இர்வினுக்கு எதிராகவும் அணி திரட்டினார். இதனால் இர்வின் காந்திஜியின் மீது கோபம் கொண்டான். கோபம் கொலை வெறியாக மாறியது.

ஆங்கிலேயன் இர்வின், காந்திஜியைக்

கொலை செய்து விடுவது என்ற முடிவுக்கு வந்தான். அதற்காக வழிகளை ஆராய்ந்தான். ஒருவழியைக் கண்டுபிடித்தான். அது, காந்திஜி சம்பாரான் வரும்போது அங்குள்ள மக்கள் காந்திஜியை வரவேற்று விருந்தும் தந்திட தயாரானார்கள். அந்த விருந்து நிகழ்ச்சியை காந்திஜி, அவர்கள் ஓர் சமபந்தி போஜனம் என்றாக்கினார்கள். அதாவது அனைத்துத் தரப்பு மக்களோடும் உண்பது என்றாக்கினார்கள். விருந்து தயாரானது. தேவையான ஏற்பாடுகள் அதாவது சமபந்தி போஜனத்திற்கு தேவையான ஏற்பாடுகள் நடந்தன.

காந்திஜிக்குப் பிடித்த உணவை தயாரிக்க பக்த்மியான் என்ற சமையல்காரனை சம்பாரான் மக்கள் நியமித்தார்கள். சம்பாரான் வட்டாரத்தில் கீர்த்திமிக்க சமையல்காரராக இருந்தார் பக்த்மியான். அத்தோடு அவர் விடுதலைப் போரில் மிகுந்த ஆர்வம் கொண்டவராகவும், காந்திஜியின் மீது அன்பு கொண்டவராகவுமிருந்தார்.

பக்த்மியான் தான் காந்திஜிக்கும், விருந்துண்ண வருபவர்களுக்கும் சமைக்கப் போகின்றார் என்பதை தனது ஒற்றர்கள் மூலம் அறிந்து கொண்டான் Ws இர்வின். பக்த்மியானை அணுகி காந்திஜிக்குத் தரும் பாலில் விஷம் கலந்திட வேண்டும் என்றும் அதன்மூலம் காந்திஜியைக் கொலை செய்ய வேண்டும் என்றும், அதற்குதான் மிகப்பெரிய சன்மானம் தருவதாகவும் பேரம் பேசினான்.

பேரத்திற்கு பக்த்மியான் ஒத்துக்கொள்ளவில்லை. மிரட்டினான் இர்வின். தான் அந்தப் பகுதியில் தனக்கெதிராகக் கிளர்ந்தவர்கள் பலரைக் கொலை செய்திருப்பதாகவும் பக்த்மியான் தான் சொல்வதைக் கேட்கவில்லை என்றால் கொலை செய்து விடுவேன், அது தனக் கொன்றும் பெரிய வேலை இல்லை என்றும் மிரட்டினான். பக்த்மியான் அதற்கும் அஞ்சவில்லை. பாலில் விஷம் கலக்கும் வேலையைத் தான் செய்ய முடியாது எனச் சொல்லிவிட்டார்.

கொலைகாரன் இர்வின் காந்திஜியைக் கொலை செய்து விடுவதில் மிகுந்த வெறியோடு இருக்கின்றான் என்பதை அறிந்த பக்த்மியான் அவனுடைய திட்டத்தை காந்திஜி, அவர்களின் தோழர்கள், காந்திஜியை வரவேற்க தயாராக இருந்த மக்கள் என அனைவரிடமும் சொல்லி விட்டார். அதாவது அனைவரையும் உஷார் படுத்தி விட்டார்.

காந்திஜியை வரவேற்க தயாராக இருந்தவர்களில் டாக்டர் இராஜேந்திர பிரசாத் அவர்களும் ஒருவர். இவர் பின்னாளில் இந்தியாவின் முதல் குடியரசு தலைவராக ஆனார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் பீகார் மாநிலத்தின் சம்பாரான் மாவட்டத்தைச் சார்ந்தவர்.

பக்த்மியான் மேற்கொண்ட இடைவிடா பிரச்சாரத்தால், காந்திஜி பாதுகாக்கப்பட்டார். அங்குள்ள மக்கள் இர்வினுக்கு எதிராக கிளர்ந்தார்கள். இதற்காக - அதாவது காந்திஜியின் உணவில் விஷம் கலந்திட மறுத்ததற்காகவும் இர்வினின் திட்டங்களை வெளிப்படுத்தியதற்காகவும், பக்த்மியான் மிகப்பெரிய விலைத் தந்திட வேண்டியதாயிற்று.

பக்த்மியான் கைவசமிருந்த எல்லா விளை நிலங்களையும், அன்றைய (1917) ஆங்கில அரசின் உதவியோடு இர்வின் கையப்படுத்தினான். அவரை கைது செய்து சித்தரவதைச் செய்தான். பக்த்மியான் மீது பொய் வழக்கு களைப் புனைந்து சிறையில் அடைத்தான்.

அவருடைய குடும்பம் சிதறுண்டது. அவர்கள் தங்களது பிறந்த வீட்டையும், இடத்தையும் துறந்து அதாவது சம்பாரானை விட்டு இதர இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றார்கள். பக்த்மியான் பஞ்சையரானார். உடுத்த உடை கூட இல்லை என்ற நிலையில் சில கிளிசல் களோடுதான் சிறை யிலிருந்து வெளியே வந்தார். ஒரு பைத்தியக்காரனைப்போல் அவர் அலைந்து கொண்டிருந்தபோதுதான் அது நடந்தது.

**1950-ஆம் ஆண்டு முதல் குடியரசு தலைவர் Dr. இராஜேந்திரபிரசாத்**

*1947*-இல் இந்தியா ஆங்கிலேயர்களிடமிருந்து விடுதலை அடைந்து, முதல் குடியரசு தலைவராக பீகாரைச் சார்ந்த இராஜேந்திர பிரசாத் அவர்கள் பொறுப்பேற்றார்கள்.

*1948*-இல் மகாத்மா காந்தியை சங்கப் பரிவாரத்தைச் சார்ந்த நாதுராம் கோட்சே கொலை செய்தான்.

*1950*-இல் குடியரசு தலைவர் டாக்டர்

இராஜேந்திரபிரசாத் அவர்களுக்கு அவருடைய (பீகார்) வீட்டிலிருந்து ஓர் செய்தி வந்தது. அது அவருடைய உடன்பிறந்த சகோதரர் பிரசாத் வர்கா என்பவர் உடல் நலமில்லாமலிருக்கின்றார் என்பதே அது.

சகோதரனை கண்டுவர ரெயில் மூலம் குடியரசு தலைவர் சம்பாரான் மாவட்டத்திற்கு புறப்பட்டார். அவர் மோத்திஹாரி ரெயில் நிலையத்தில்தான் இறங்கி தன்னுடைய இல்லம் சென்றிட வேண்டும். இந்த மோத்திஹாரி ரெயில் நிலையம்தான் சம்பாராவின் முக்கிய ரெயில் நிலையம் - இந்த இடத்தின் பெயரால்தான் ஆங்கிலேயன் இர்வின் அவுரிச்செடி வளர்த்து சாயம் எடுக்கும் நிறுவனத்தை தொடங்கி இருந்தான்.

ஆக 1950-இல் முதல் குடியரசுத் தலைவர் டாக்டர் இராஜேந்திர பிரசாத் மோத்திஹாரி ரெயில் நிலையம் வந்து சேர்ந்தார். தன் தமை யனை தரிசிக்க. ரெயில் நிலையத்தில் குடியரசு தலைவரை வரவேற்க ஏராளமான முக்கியஸ் தர்கள் வந்திருந்தனர்.

ரெயிலிலிருந்து இறங்கி இந்த முக்கியஸ் தர்களை சந்தித்து விட்டு ரெயில் நிலையத்தி லிருந்து வெளியே வந்த குடியரசு தலைவரின் கண்களில் கிழிந்த உடையுடன் நின்றுகொண்டி ருந்த பக்த்மியான் யதார்த்தமாகப் பார்வையில் பட்டுவிட்டார்.

குடியரசு தலைவர் டாக்டர் இராஜேந்திர பிரசாத் ஓர் ஏவலாளை அனுப்பி பக்த்மியானை அழைத்து வரச் சொல்லவில்லை. அவரே சென்று பக்த்மியான் அவர்களை கட்டித் தழுவினார்.

ஏன் இந்தக் கோலம் என்றார்? பக்த்மியான் தன் நிலையைச் சொன்னார். உடனேயே குடியரசுத் தலைவர் அந்தப் பகுதி மாவட்ட ஆட்சியரை அழைத்து 50 ஏக்கர் நிலத்தை பக்த்மியான் அவர்களுக்குத் உடனேயே தந்திட வேண்டும் என ஆணையிட்டார். அத்துடன் அவருக்கு மாதந்தோறும் ஓய்வூதியம் ஒன்றையும் தந்திட வேண்டும் என்றும் ஆணையிட்டார்.

நீண்ட நாட்களாகியும் மாவட்ட ஆட்சியாள ரால் அந்த 50 ஏக்கர் நிலத்தைக் கண்டுபிடிக்க இயலவில்லை.

வருடங்கள் கழிந்தன. பக்த்மியான் தன் மூத்த மகன் முஹம்மத் ஜான் அன்சாரியுடன் தன் கடைசி நாட்களைச் செலவிட்டார்.

பக்த்மியானின் மூத்த மகன் சாம்பாரான் மாவட்டத்தின் எல்லையில் உள்ள சிஸ்வா அக்காரி எனும் கிராமத்தில் வாழ்ந்து கொண்டி ருந்தார். 1957-இல் அவர் இறந்தார். அவர் உயிரோடு இருந்தவரை அவருக்கு எந்த நிவாரணமும் கிடைக்க வில்லை.

தொடர்ந்து பக்த் மியானின் மூத்த மகன் முஹம்மத் ஜான் அன்சாரி தன் தந்தைக்கு குடியரசு தலைவர் தந்த வாக்குறுதியின் நிலையைக் குறிப்பிட்டு குடியரசுத் தலைவர் உட்பட அனைத்து அதிகாரிகளுக்கும் கடிதம் எழுதினார். கடிதத்தின் நகல் மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் தான் நிலத்தைக் கண்டுபிடித்துக் கொண்டிருப்பதாகப் பதில் சொன்னார்.

1968களில் 24 ஏக்கர் நிலத்தை கண்டு பிடித்துவிட்டதாகவும் முதல் குடியரசுத் தலைவர் வாக்களித்த 50 ஏக்கர் நிலத்திற்கு எந்த வாய்ப்பு மில்லை என்றும் கடிதம் எழுதினார்.

இந்த 24 ஏக்கரையும் பக்த்மியானின் வாரிசுகளுக்கு பதித்துத் தந்துவிடுதாகக் கூறினார். ஆனால் அந்த 24 ஏக்கரும் வனத்துறை தங்களுக்கு மிகவும் முக்கியமானது என்றும் இன்னும் சொன்னால் வனத்துறையின் நிலம் தான் அந்த 24 ஏக்கரும் எனக் கூறி விட்டார்கள்.

இனி இந்த அரசுகள் நமக்குப் பயன் தந்திட மாட்டா என்பதை உணர்ந்த, பக்த் மியானின் பிள்ளைகள், ஹரியான மாநிலம் சென்று கூலியாட்களாக உழைக்கத் தொடங்கினார்கள். வரலாற்றில் காணாமற் போய்விட்டார்கள்.

இந்த மொத்த வரலாற்றையும் ஹிந்துஸ்தான் டைம்ஸ் என்ற டெல்லி ஆங்கில நாளிதழ் சிறப்புக் கட்டுரையாக 60 ஆண்டுகளுக்குப் பின் வெளியிட்டது. அப்போது அது அன்றைய குடியரசு தலைவர் பிரதிபா பாட்டிலின் பார்வையில் பட்டது. அவருடைய செயலாளர் ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகைக்கு பதில் ஒன்றை அனுப்பினார். அதில் மேண்மைமிகு குடியரசு தலைவர் அவர்கள் உங்கள் கட்டுரை யைக் கண்ணுற்றார்கள். பக்த் மியானின்



குடும்பத்திற்கு தேவையான நிவாரணங்கள் மேற்கொள்ளப்படும் என்று அந்தப் பதிலில் கூறியிருந்தார்.

இதனிடையே இந்த விவகாரத்தைக் கூர்ந்து கவனித்து இடைவிடாமல் கடிதங்களை எழுதிக் கொண்டிருந்த பக்த்மியானின் மூத்த மகன், முஹம்மத் ஜான் அன்சாரி இறந்துவிட்டார்.

பிரதிபா பாட்டீலின் நடவடிக்கையின் கீழ் வெறும் (ஆறு) 6 ஏக்கர் நிலம் மட்டும் வாழ்ந்து கொண்டிருக்கும் மியாக்கானின் குடும்பத்திற்கு கிடைத்தது. இந்த 6 ஏக்கர் நிலத்தில் வீடு கட்டி மொத்தக் குடும்பமும் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றது. மீண்டும் விவசாயத்தை நோக்கி திரும்பி இருக்கின்றார்கள்.

இந்த 6 ஏக்கர் நிலத்தின் நடுவே ஓர் ஆறும் ஓடுகின்றது. இந்த மொத்த விவகாரத்தையும், வரலாற்றையும் Maintream மெயின்ஸ்டிரீம் என்ற ஆங்கில சஞ்சிகை வெளியிட்டது.

ஆனால் பக்த் மியான் ஆங்கில ஏகாதிபத் தியத்திடம் 1918-இல் இழந்தது 64 ஏக்கர் நிலம் - காந்திஜியைக் காப்பாற்றிட அவர் தந்த விலை அது தகுதியானது.

இன்று காந்திஜியைக் கொன்றவர்கள் ஆட் சிக்கு வந்தவுடன் இந்த 6 ஏக்கர் நிலத்தையும் "Disputed property" சர்ச்சைக்குரிய இடம் என்றாக்கினார்கள். ஆனால் லாலு, நித்திஷ்குமார் ஆகியோரின் கூட்டாட்சி அதை முற்றாக நிராகரித்தது.

அண்மையில் காந்திஜியின் சம்பாரான் வருகையின் 100 ஆண்டு நினைவு நிகழ்ச்சிகள் (1917 ஏப்ரல்-15 - 2017 ஏப்ரல்-15 ) நடைபெற் றன. அதில் பக்த்மியானின் குடும்பத்தினர் அனைவரும் கண்ணியப்படுத்தப் பட்டார்கள்.

**குறிப்பு :** பக்த் மியானின் துணிச்சல் மிக்க செயலையும், அவர் தன்னைக் காப்பாற்றியதை யும் காந்திஜி எங்கேயும் குறிப்பிடவில்லை என்பது பீகார் மாநிலத்தின் குறிப்பாக சம்பாரான் மாவட்டத்து மக்களின் மனக்குமுறல்.

ஆனால் விடுதலைப் போரில் சம்பாரான் மக்களின் பங்கு என்றொரு தொகுப்பு 40 ஆண்டுகளுக்கு முன் வெளியிடப்பட்டது. அதில் பக்த்மியான் காந்திஜியைக் காப்பாற்றியது அதில் அவருக்கு ஏற்பட்ட இழப்புகள் எல்லாம் மிகவும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

இந்த ஆவணத்தை மையப்படுத்தியே பல்வேறு பத்திரிகைகளும் அவ்வப்போது கட்டுரைகளை எழுதின.

**காந்திஜியின் சம்பாரான் வருகையின் 100 ஆண்டு பற்றி சிறப்புக் கட்டுரைகளை எழுதிய ஹிந்தி ஏடுகள் அனைத்தும் பக்த் மியானை மையப்படுத்தியே தங்கள் ஆக்கங்களை வெளியிட்டன.**

- MGM

Source April-17, 2017
Radiance - April-30, May-6, 2017
Hindustan Times / Mainstream

# ஹிஜாப் எங்களைப் பாதுகாத்தது



**அமெரிக்காவில் வாழ்ந்து கொண்டிருக்கும் சிரியாவைச் சார்ந்த இளம்பெண் சொல்லும் ஓர் அதிசய நிகழ்வு**

*1979* என்னுடைய பாட்டனார், நாங்கள் வாழ்ந்து கொண்டிருந்த சிரியாவை விட்டு வெளியேறுவது என்றும் அமெரிக்காவில் குடியேறுவது என்றும் முடிவு செய்து விட்டார். எங்களுடைய திட்டம் முதலில் எங்கள் பாட்டனார் அமெரிக்க செல்வார், பின்னர் நாங்கள் அமெரிக்கா செல்வோம். நாங்கள் மொத்தம் *8* பேர் எங்கள் பாட்டனாரைத் தொடர்ந்து அமெரிக்கா சென்றிட வேண்டும்.

அமெரிக்காவின் கேலிபோஃர்னியா மாவட்டத்தைத்தான் நாங்கள் தேர்ந்தெடுத் திருந்தோம். திட்டமிட்டபடி எங்கள் பாட்டனார் முதலில் சென்றுவிட்டார். அவரைத் தொடர்ந்து நாங்கள் *8* பேருடன் எங்களுடைய விமானம் **191** முதலில் அமெரிக்காவின் தலைநகர் நியூயார்க் செல்லும். நாங்கள் அங்கே இறங்கி இன்னொரு விமானத்தில் கேலிபோஃர்னியா செல்ல வேண்டும். இதற்கு நாங்கள் நியூயார்க் அதிகாரிகளிடம், ஒரு கீரின் கார்டு வாங்கிட வேண்டும்.

நாங்கள் நியூயார்க் வந்தோம். விமானத் திலிருந்து இறங்கி கிரீன் கார்டு வாங்கிடும் வரிசைக்குச் சென்றோம். என்னுடைய மைத்துனி அண்மையில்தான் ஹிஜாப் அணியும் பழக்கத்திற்கு உள்வந்தாள். அன்றுவரை ஹிஜாப் மீது அவளுக்கு மாறுபட்டக் கருத்து இருந்தது. அவளாகவே அண்மைக்காலந் தொட்டு ஹிஜாப் அணிந்திட தொடங்கினாள். இப்போது கிரீன் கார்டு வாங்கிடும் வரிசையில் அவள் நின்றாள் நிக்காப்வுடன்.

அமெரிக்கா அதிகாரிகள் நிக்காப்வுடன் ஒரு பெரும் வெறுப்பைக் கொண்டிருந்தார்கள் என்பதை அங்கே பார்க்க முடிந்தது. அவர்கள் என் மைத்துனி நிக்காப்-ஐ கழற்றினால்தான் அவளைப் புகைப்படம் எடுத்து கிரீன்கார்டு தருவோம் என உறுதியாக நின்றுவிட்டார்கள்.

என் மைத்துனி நிக்காப்-ஐ கழற்றமாட்டேன் என்று பதில் உறுதியாக கூறி விட்டாள்.

அத்தோடு அமெரிக்க அதிகாரிகளோடு மோதவும் தொடங்கிவிட்டார். நேரம் கடந்து கொண்டே சென்றது. நாங்கள் நியூயார்க்கி லிருந்து, கேலிபோஃர்னியா செல்வதற்கு பதிவு செய்திட்ட விமானம் கிளம்ப சில மணி நேரங்களே இருந்தன.

அமெரிக்கா அதிகாரிகள் நிக்காப்-ஐ மாற்றிடாவிட்டால் நாங்கள் உங்களைப் புகைப்படம் எடுத்திட இயலாது. புகைப்படம் எடுக்கவில்லை என்றால் நீங்கள் தேவையான கிரீன் கார்டை எடுத்திட இயலாது என விடாப்பிடியாக கூறிவிட்டார்கள்.

எங்கள் அண்ணி என்ன வேண்டுமானாலும் நடக்கட்டும் நான் நிக்காபை கழற்றமாட்டேன் எனக் கூறிவிட்டார்கள். நான் அல்லாஹ்வை நம்பி நிற்கின்றேன் எனக் கூறிவிட்டாள்.

என் மைத்துனி இதில் பல விஷயங்களைப் புரிந்துகொள்ளவில்லை. எங்களுடைய பாட் டனார் இருந்ததையெல்லாம் விற்றுக் கிடைத்த பணத்தோடு ஏற்கெனவே கேலிபோஃர்னியா சென்றுவிட்டார். இந்நிலையில் நாங்கள் மீண்டும் சிரியா செல்ல முடியாது.

நியூயார்க்கில் தரப்படும் கிரீன் அட்டை எங்கள் வாழ்வாதாரம். இதனை நாங்கள் பலமுறை எங்கள் மைத்துனியிடம் சொல்லி விட்டேன். அவள் புரிந்துகொள்ளவில்லை. நிக்காப்-ஐ அகற்றுவதாக இல்லை.

பின்னர் நாங்கள் வேறுவழியின்றி அமெரிக்க அதிகாரிகளிடம் பேசினோம், அவர்கள் தங்கள் மேலதிகாரியிடம் பேசினார்கள்.

அவர்களின் மேலதிகாரிகளிடமிருந்து பதில் வருவதற்கு அதிக நேரம் பிடித்துது. இதனிடையே கேலிபோஃர்னியா விமானம் புறப்படும் நேரம் வந்தது. எல்லாம் கெட்டு விடும் என்ற நிலை வந்தது. எனது மைத்துனி யிடம் முறையிட்டோம். எல்லாம் கெட்டு விடும் என்ற யதார்த்தத்தை எடுத்துச் சொன்னோம்.

என் மைத்துனி எல்லாம் அல்லாஹ்வின் நாட்டப்படி நடக்கும் என ஒற்றை வரியில் சொல்லிவிட்டு அவள் உறைந்து இருந்து விட்டாள்.

மீண்டும் அதிகாரிகளிடம் சொன்னோம். அவர்கள் மேலதிகாரிகளிடமிருந்து பதில் வர வேண்டும் என்றார்கள். இதனிடையே கேலிபோஃர்னியா விமானம் சென்றுவிட்டது.

சற்று நேரத்திற்கெல்லாம் அதிகாரிகள், அந்த அம்மாவை நிக்காப்வுடன் போட்டோ எடுக்க அனுமதித்தார்கள். போட்டோ எடுத்தார்கள். இதனால் நாங்கள் அங்கு தங்கி அடுத்த நாள்தான் கலிபோஃர்னியா விமானத்தைப் பிடிக்க முடிந்தது.

ஒரு வழியாக கேலிபோஃர்னியா வந்து சேர்ந்தோம். விமான நிலையத்தில் எங்களை வரவேற்க வந்த எங்கள் தாத்தா அவர்கள் அல்லாஹ் உங்களைக் காப்பாற்றினான், அனை வரும் சேர்ந்துவிட்டார்கள் எனக் கூறினார்.

எங்களுக்கு எதுவுமே புரியவில்லை. ஏன் அப்படிச் சொல்லுகின்றீர்கள் என்றோம். உன் மைத்துனியின் நிக்காப்தான் உங்களைக் காப்பாற்றியது என்றார்.

ஆக! அதுதானே அத்தனை தொல்லை களுக்கும் காரணம் என்றோம்.

இல்லை! நிக்காப் சண்டையில்தான் நீங்கள் புறப்பட்டிருக்க வேண்டிய விமானத்தைத் தவற விட்டீர்கள். அந்த விமானத்தில் வந்த யாரும் கலிபோஃர்னியா வந்து சேர்ந்திட வில்லை. அந்த விமானம் நொறுங்கிப்போய் விட்டது. அதில் பயணித்த 271 பேரும் இறந்து போனார்கள் என்றார்.

எல்லாம் அல்லாஹ்வின் செயல்! என்றாலும் இஸ்லாத்தின் மேல் காழ்ப்பையும், கசப்பையும் கக்கிக் கொண்டிருக்கும் இந்த நாட்களில் நாம் தீனைப்பற்றிப் பிடித்தால் நிச்சயமாக வெற்றி பெற்றிட இயலும் என்பதை நான் நன்றாகக் கற்றுக் கொண்டேன். நான் எதைப் பற்றிப் பிடிக்கின்றேனோ இல்லையோ, நான் நிக்காப்-ஐ பற்றிப் பிடித்துக் கொண்டேன்.




இன்னொன்றையும் சொல்கின்றேன் கேளுங்கள்...

**புர்காவும் தடைகளும் ; புர்கினியும்**

புர்காவை ஐரோப்பிய நாடுகள் தடை செய்துள்ளன. இஸ்லாத்தின் மேலுள்ள வெறுப்பை அவர்கள் புர்காவில்தான் காட்டுகின்றார்கள்.

பிரான்ஸ்-இல் புர்கா தடை செய்யப்பட்டுள்ளது.

பெல்ஜியம் என்ற நாடு புர்காவை 2011-இல் தடை செய்தது.

செஸ் குடியரசிலும் புர்கா தடை செய்யப்பட்டுள்ளது.

நெதர்லான்ஸ் என்ற நாட்டிலும் புர்கா தடைசெய்யப்பட வேண்டும் என்றொரு விவாதம் வலுப்பெற்று வருகின்றது.

ஸ்பெயின் நாட்டில் 2010-இல் புர்கா தடைசெய்யப்பட்டது.

சுவிட்சர்லாந்தில் மஸ்ஜித்களில் வானுயர நிற்கும் மினாரட்களுக்கே அலறுகின்றார்கள் அங்குள்ள பழைமை வாதிகள்.

இங்கேயும் சில பகுதிகளில் புர்கா தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆனால் முஸ்லிம் பெண்கள் புர்கா அணிவதை நிறுத்தவில்லை என்றே கள செய்திகள் கூறுகின்றன.

**புர்கினி :** இந்த நாடுகளுக்கு இப்போது இன்னொரு தலைவலி வந்திருக்கின்றது. அதுதான் புர்கினி என்பது இது நீச்சல் உடை! புர்கா போன்றது. முகத்தைத் தவிர வேறெந்த உறுப்பும் வெளியே தெரிவதில்லை.

இந்த புர்கினியை முஸ்லிம் பெண்கள் மட்டுமின்றி, இதர மத நம்பிக்கையைக் கொண்டவர்களும், கடவுள் மறுப்புக் கொள்கையைக் கொண்டவர்களும் பயன்படுத்துகிறார்கள். இதையும் தடை செய்ய வேண்டும் என பல ஐரோப்பிய நாடுகள் கூச்சலிட்டு வருகின்றன.

இந்த புர்கினி என்ற நீச்சல் உடையை வடிவமைத்து, லெபனானில் பிறந்து ஆஸ்டிரியாவில் குடியுரிமை பெற்று, பிரான்ஸ் நாட்டில் வியாபாரம் செய்யும் கீர்த்தி மிக்க ஆடை வடிவமைப்பாளர் அஹிதா ஜாடென்ட் ஒரு முஸ்லிம்.

இந்த புர்கினியை தொடக்கத்தில் முஸ்லிம் பெண்களே அதிகமாக பயன்படுத்தினார்கள். இதனால் இந்த புர்கினியைத் தடை செய்ய வேண்டும் என பிரான்ஸ் நாட்டு பழைமை வாதிகள் கொக்கரித்தனர். புர்கினி பிரபல்யமானது. புர்கினியின்"Demand" தேவை 200 மடங்கு அதிகமானது. பிற ஐரோப்பிய நாடுகளிலும் பிரபல்யமானது. அதேபோல் எதிர்ப்பும் வலுப்பெற்றுள்ளது. (Radiance Weekly Sep 4-10, 2016)

**- மார்வா அத்திக்**
**- தமிழ்வடிவம் - எம்.ஜி.எம்.**

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

**கொடிய வட்டியில் இருந்து மீள!**
**தாங்கள் வங்கியில் அடகு வைத்திருக்கும் நகைகளை ஏலத்திற்கு செல்லாமல் மீட்டு நல்ல விலைக்கு விற்றுத் தரப்படும்.**

தொடர்புக்கு

**90955 40678**



# இந்து பத்திரிகையின் தலையங்கமும் நீதியின் ஆதங்கமும்

அண்மையில், ஹைதராபாத் பேகம்பட், குண்டு வெடிப்பு வழக்கில் 10 முஸ்லிம் இளைஞர்களை உச்ச நீதிமன்றம நிரபராதிகள் என கூறி அனைத்து வழக்குகளிலிருந்தும் விடுதலை செய்தது. இவர்கள் 12 ஆண்டுகள் சிறையில் இருந்தவர்கள்.

இதனை வைகறை வெளிச்சம் 2017 செப்டம்பர்இதழில்விரித்துரைத்திருந்தோம்...

இதே சம்பவத்திற்கு இந்து பத்திரிகை ஓர் தலைங்கத்தை எழுதி இருந்தது. இந்தத் தலையங்கத்திற்கு "Slow Justice" வேகம் குறைந்த நீதி எனத் தலைப்பிட்டிருந்தது.

ஆமாம் 12 ஆண்டுகள் தங்கள் வாழ்க் கையையே சிறையில் தொலைத்த அப்பாவி முஸ்லிம்கள்மேல் பரிதாப்படும் தலையங்கம் இந்து பத்திரிகையின் தலையங்கம் என ஆவலோடு பார்த்தோம்...

**ஏமாற்றமே எதிர்பட்டது.**

2005 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்ட அந்த இளைஞர்கள் தங்கள் இளமையைத் தொலைத்துவிட்டு வெளியே வந்திருக்கிறார் கள். இவர்களுக்காக வழக்கு நடத்தவும் வாதா டவும் அலைந்த குடும்பங்கள் தங்களையும் தங்கள் செல்வங்களையும் இழந்து ஓர் குற்ற உணர்வோடு வாழ்க்கையின் நாள்களை நகர்த்தி இருக்கின்றார்கள்.

இந்த 10 முஸ்லிம் இளைஞர்களையும் குத்து மதிப்பாக கைது செய்த காவல்துறையினர், பதவி உயர்வு, பரிசில்கள், பதக்கங்கள் இவற்றைப் பெற்றவர்களாகப் பவனி வந்து கொண்டிருக்கின்றார்கள்.

பத்து இளைஞர்களையும் விடுவித்த உச்ச நீதிமன்றம் எந்தக் குற்றத்தையும் செய்யாத இவர்களை விடுவித்தபோது. அந்த காவல் துறையினரை கண்டிக்கவில்லை, துறை சார்ந்த நடவடிக்கைகளை எடுக்க பரிந்துரைக்கவு மில்லை.

சாதாரணமாக இதுபோன்ற வழக்குகளில் சாட்சியமில்லாமல் கைது செய்யும் காவல் துறையினரை கண்டிக்கும் நீதிமன்றம். இவர் களைப்போன்ற அப்பாவிகள் அனுமானத் தின்மேல் இனி கைது செய்வதைத் தடுக்க அந்தக் காவல்துறையினர் மீது நடவடிக்கைகள் எடுக்கப் பரிந்துரைக்கும். ஆனால் அதை உச்ச நீதிமன்றம் செய்யவில்லை. இதுபோன்ற இன்னும் பல வழக்குகளில் உச்ச நீதிமன்றம், இதுபோன்ற நிலையையே கடைபிடித்து வருகிறது.

அத்தோடு உச்ச நீதிமன்றம், நாம் ஏற் கெனவே சுட்டிக்காட்டியதைப்போல், இந்த இளைஞர்களுக்கு இழப்பீடு எதையும் வழங்கச் சொல்லிடவில்லை.

இவற்றையெல்லாம் தி இந்து நாளிதழின் தலையங்கம்சுட்டிக்காட்டிடவில்லை. ஆனால் பத்திரிகையின் தலையங்கம் வேறொரு பக்கம் தனது கவனத்தையும் வாசகர்களின் கவனத்தையும் திருப்பி இருந்தது. அது,

காவல்துறை எப்படியாவது கஷ்டப்பட்டு, தகவல்களைத் திரட்டி அவற்றை சாட்சியமாக காட்டி இந்த பத்து இளைஞர்களையும் தண்டிக்க வழி செய்திருக்க வேண்டும் என்பதே அது.

பட்கல் விவாகரத்தில் காவல்துறை இதை செய்தது என அதே இந்துப் பத்திரிகை பாராட்டியுமிருந்தது. தறிகெட்ட காவல்துறையை.

பட்கல் விவகாரத்தில் செய்தது அப்பட்டமான அநியாயம் என்பதை பல்வேறு செய்தி நிறுவனங்களும் இடித்துக்காட்டின. ஆனாலும் இந்தப் பத்திரிகை வம்பிழுத்துப் பாராட்டி இருக்கின்றது.

இதழிலும் வெளியிட்டிருக்கின்றோம்.

இப்படிக் குண்டு வெடிப்புகளை நடத்தி பழியை முஸ்லிம்களின் மேல் போட்டு வாக்காளர்களை இந்துக்கள் என்றும், முஸ்லிம்கள் என்றும் பிரித்து (Polarization) தேர்தல் வெற்றிகளைக் குவித்தது. இன்று நாட்டை சின்னாபின்னப்படுத்திக் கொண்டிருக்கும் பாரதீய ஜனதா கட்சி.




இப்படி நடத்திய குண்டு வெடிப்புகளால் தான் பாரதீய ஜனதாகட்சி ஆட்சிக்கு வந்துள்ளது என்கின்றார் மராட்டிய மாநிலத்தின் முன்னாள் காவல்துறை அதிகாரி எஸ்.எம். முஸ்ரிஃப் (Country's Number one Terrorist organization is RSS: by S.M. முஸ்ரிஃப். இந்த நூலை "இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு" எனத் தமிழிலும் கொண்டு வந்துள்ளோம். (வாசகர்கள், அதனை வாங்கிப் படிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்) வெளியீடு : வேர்கள்

நாட்டில் நீதி நிலைக்காமல் போனதற்கு இதுபோன்ற தலையங்கங்கள்தாம் காரணம். நீதி நிலைக்காதது மட்டுமல்ல. ஹைதராபாத் பீகம்பேட் குண்டு வெடிப்புகள் போன்றவற்றில் உண்மையான குற்றவாளிகள் யாரென்றே தெரியாமல் போனது. காரணம், வேண்டுமென்றே உண்மையான குற்றவாளிகளைவிட்டுவிட்டு வேண்டுமென்றே அப்பாவி முஸ்லிம்கள் மேல் பழியைப் போட்டது.

அஜித் ஷாஹி என்ற தெகல்கா வார இதழின் நிருபர் இவற்றையெல்லாம் ஆய்வு செய்து ஓர் உண்மையை வெளியே கொண்டு வந்திருக்கின்றார். அதில் இதுபோன்ற குண்டு வெடிப்புகளை நிகழ்த்திக் கொண்டிருப்பவர்கள் இந்துத்துவ தீவிரவாத அமைப்புகள்தாம் என நிரூபித்திருக்கின்றார்.

சில பல குண்டுவெடிப்புகளை உளவுத் துறையும் நடத்தி இருக்கின்றது என்கின்றார். (See : Charge Sheet by Ajith Shahi) இதன் தமிழாக்கத்தை நாம் வைகறை வெளிச்சம்

மீடியாக்கள் இந்துத்துவ தீவிரவாத செயல்களை வெளிச்சத்திற்கு கொண்டு வருவதில் முற்றாகத் தோற்றுப் போய்விட்டன என்கின்றார் இல்யாஸ் டேவிட்சன் என்ற ஜெர்மானிய ஆய்வாளர்.

எஸ்.எம். முஸ்ரிஃப் அவர்களின் நூலான கர்கரேயைக் கொலை செய்தது யார் இந்தியத் தீவிரவாதத்தின் உண்மை முகம்-ஐ ஆய்வு செய்த நான்கு வெளிநாடு அறிஞர்களில் ஒருவர். இவர் இந்தியாவில் நடந்த குண்டு வெடிப்புக்கள், நாடாளுமன்ற தாக்குதல், 26/11 என்ற 2008 மும்பைத் தாக்குதல் இவற்றின் உணமைகளை வெளியே கொண்டு வருவதில் ஊடகங்கள் முற்றாகத் தோற்றுப் போய்விட்டன என்கின்றர்.

அதனை ஊடகங்கள் செய்த துரோகம் என்கின்றார். (ஆதாரம் The great betroyal by elyas Devitssion)

**இனியாவது நமது ஊடகங்கள் உண்மையை உணரட்டும்.** - MGM

## எது முதலில்?

# இன்னொரு வகை ஏமாளிகள்!



இமாம் யூசுப் அல்கர்லாவி

மார்க்கப் பற்று மிக்கவர்களாகத் தம்மைக் கருதிக் கொள்ளும் செல்வந்தர்கள் சிலர் பல தடவை ஹஜ் செய்கிறார்கள். ஹஜ்ஜுக்காக செலவளிப்பதற்குப் பேராவர்படுகின்றனர். தம் பக்கத்து வீட்டினர் (வறுமையில்) வாடுவது பற்றி கவலைப்படுவதில்லை. எனவேதான் இப்னு மஸ்ஊத் (ரழி) கூறினார்கள்..

“கடைசி காலத்தில் செல்வச் செழிப்புடன் இருப்பதாலும் பயணம் செய்வது இலகுவாகி விடுவதாலும் காரணமில்லாமல் ஹஜ் செய்வோர் அதிகமாகி விடுவார்கள். இவர்கள் (ஏற்கனவே செய்திருந்த பழைய) நன்மைகளை இழந்தவர் களாகவும் புதிய நன்மைகளைப் பெறாமலும் திரும்பி விடுவார்கள். இவர்கள் பரிதாபத்துக் குரிய தம் பக்கத்துவீட்டாரை அரவணைக்க மாட்டார்கள். (ஹஜ் பயணத்தில்) வழியெங்கும் பஞ்சப் பராரிகளைக் கடந்து வந்திருப்பார்கள்”

இப்னு மஸ்ஊத் (ரழி)யவர்கள் அந்தக் காலத்திலிருந்தகொண்டே இக்காலத்தில் நடப்பதைக் கண்ணால் கண்டதுபோல் அப்படியே கூறிவிட்டார்கள்.

பிஷ்ரு (ரஹ்) : இதற்காக நீ எவ்வளவு பணம் தயாராக வைத்திருக்கிறாய்?

அவர் : இரண்டாயிரம் திர்ஹம் (வெள்ளிக்காசு) பிஷ்ரு (ரஹ்) : ஹஜ் செய்து நீ எதை அடைய விரும்புகிறாய்?

உலகப் பற்றின்மையா? கஅபாவின் மீதுள்ள அன்பையா? இறைவனின் திருப்தியையா?

அவர் : இறைவனின் திருப்தியை அடைய விரும்புகிறேன்.

பிஷ்ரு (ரஹ்) : நீ வீட்டில் இருந்துகொண்டே இரண்டாயிரம் திர்ஹம் செலவளித்து இறை வனின் திருப்தியை பெற வாய்ப்புக் கிடைத்தால் அ ை த விடுவாயா? செய்வாயா?

அவர் : கண்டிப்பாக செய்வேன்.

பிஷ்ரு (ரஹ்) : உன்னிடமுள்ள இரண்டாயிரம் திர்ஹத்தை பத்துப் பேருக்குப் பகிர்ந்தளித்து விடு, கடனாளி தம் கடனை அடைப்பார். ஏழை தனது வறுமையை விரட்டுவார். குடும்பத் தலைவன் தம் குடும்பத்தினருக்கு செலவளிப்பார். அநாதையின் காப்பாளன் மகிழ்ச்சி அடைவான். இவ்வாறு பகிர்ந்தளித்து விடு. ஒருவரிடமே அந்த இரண்டாயிரத்தையும் தந்து விட உன் மனம் ஒப்பினால் தந்துவிடு.

ஏனெனில் ஓர் இயலாதவனுக்கு நீ உதவுவது ஒருவனின் சிரமத்தை நீக்குவது திக்கற்றவனுக்கு வழிகாட்டிக் காப்பாற்றுவது ஒரு முஸ்லிமின் இதயத்தில் மகிழ்ச்சியைத் ஏற்படுத்துவது இவை யெல்லாம் கடமையான ஹஜ்ஜை முடித்த பின்ன ர் நூறு ஹஜ் செய்வதை விட ஏற்றமானது.

நான் சொன்னபடி செய். இல்லாவிட்டால் நீ என்ன நினைக்கிறாயோ அதைச் சொல். இதைக் கேட்டபிறகு பிஷ்ரு (ரஹ்) அவர்கள் அவரைப் பார்த்து புன் சிரிப்பொன்றை உதிர்த்துவிட்டு சொன்னார்கள் “ஐயத்திற்கிடமான வழியிலும் வியாபாரத்தின் அழுக்கு இலகும் செல்வம் சேர்த்தால் அதன்மூலம் மனம் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும்.

அது உனக்கு நற்செயல்போல் தோற்ற மளிக்கும். ஆனால் அல்லாஹ் இறையச்சமுள்ள வர்களின் செயல்கள் வழிபாடுகளைத்தரவி வேறெதையும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று தன் மீதே சத்தியம் செய்துள்ளான்” (நூல் : இஹ்யாவு உலூமித்தீன், பாகம்–8, பக்கம் 409)

(கர்ளாவி அவர்கள் "இமாம் கஸ்ஸாலி : பாராட்டுவோருக்கும் விமர்சிப்போருக்கும் இடையே" என்றொரு நூல் எழுதியுள்ளார்கள்.

அந்த நூலிலும் மேற்கண்ட கருத்துக்களை எடுத்தாண்டு இருக்கிறார்கள். இன்னும் சில அறிஞர்கள் கூறுகிறார்கள் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) காலத்தில் வாழ்ந்தவர் பேரறிஞர் அர்ரா நவிப் அல் அனஸ்பஹானி (ரஹ்) மரணம் : ஹிஜ்ரி, 502)

"எது முதலில்" என்ற துறை பற்றி இவர் கூறியுள்ள சில கருத்துக்களை முன்னர் நாம் கூறியுள்ளோம். அவரின் பொன்மொழி ஒன்று இதோ...

"ஃபழ்லு (உபரி வணக்கம்)வை விட ஃபர்ளு (கடமையான வணக்கம்)க்கு முன்னுரிமை தந்தவர் தண்டனையிலிருந்து தப்ப வைக்கப்படு வார். 'ஃபர்ளு'வை விட 'பழ்லு' க்கு முதலிடம் தந்தவர் ஏமாந்தவராவார்."

அவருக்குப் பின் "எது முதலில்" எனும் இத்துறையில் அக்கறைக் காட்டிய அறிஞர்களுள் ஒருவர் இப்னுல் ஜவ்சீ (ரஹ்) (மரணம், ஹிஜ்ரி : 597)

இவர் முஸ்லிம் சமுதாயத்தையும் அதிலுள்ள குழுக்களையும் எந்தெந்த குழு எந்தப் பணிக்கு முன்னுரிமை தருகிறது என்பதையும் ஷைத்தான் அவர்களை எப்படியெல்லாம் குழப்பிக் கொண்டி ருக்கிறான் என்பதையும் திறமையாக ஆய்வு செய்தவர்.

"தல்பீஸ் இப்லீஸ்", "சைதுல் ஹாத்திர்", "ஆதம்முல் ஹவா" உள்ளிட்ட அவரின் நூல்களில் இதை நாம் காணலாம்...

பலஹீனமான, இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்கள் பொதுமக்களிடையே பரவி இருப்ப தால்தான் இவர்கள் எந்தப் பணிக்கு முன்னுரிமை தருவது என்று முடிவெடுக்க முடியாமல் குழம்பி வருவதாக ஒரு முக்கிய விஷயத்தை எச்சரிக்கையாக வைக்கிறார் இப்னு ஜவ்சீ (ரஹ்)

இதுகுறித்து அவர் "அல்மவ்ளூஆத்" "அல்இலலுல் வாஹியா

ஃபில் அஹாதீசில் வாஹியா" என்று இரு நூல்களை எழுதியுள்ளார். இவருக்குப்பின் இத்துறையில் ஈடுபாடு கொண்டவராக நாம் காண்பது அறிஞர்களின் அரசர் எனப்படும் இஸ்சுத்தீன் பின் அப்துஸ் ஸலாம் (ரஹ்) (மரணம் : ஹிஜ்ரி 660) இவர் எது முதலில்? எதை விட எது ஏற்றமானது? ஆகிய துறைகளில் ஆழ்ந்த புலமையும் கூரிய பார்வையும் உள்ளவர். இவர் தனது "கவாலிதுல் அஹ்காம் ஃபீமஸாலிஹில் அனாம்" எனும் முக்கியமான நூலில் தம் கருத்துக்களை விரிவாகக் கூறியுள்ளார்.

இந்நூலின் இரண்டாவது அத்தியாயத்தில் அவற்றை நாம் எடுத்துப் பதிவு செய்துள்ளோம்.

அறிஞர் இப்னு தைமிய்யா சொல்லுவ தென்ன? எது முதலில்? எதைவிட எது ஏற்ற மானது ஆகிய துறைகளில் ஆழ்ந்த புலமையும் தேர்ந்த ஞானமும் கொண்ட அறிஞர்களுள் ஒருவர் இப்னு தைமிய்யா (இறப்பு : ஹிஜ்ரி 728) அதாவது பாட்டையில் நடைபோட்டவர். அன்னாரின் மாணவர், திறமைமிக்க அறிஞர் இப்னுல் கய்யிம் (இறப்பு : ஹிஜ்ரி 751)

"அவ்லவிய்யாத்துல் ஹரக்கத்தில் இஸ்லா மிய்யா" என்ற நூலின் இறுதியில் இப்னு தைமிய் யாவின் நூலிலிருந்து இரு அத்தியாயங்களை எடுத்து இணைத்துள்ளேன். இது அவரின் ஞானத்தைப் பறைசாற்றப் போதுமானது.

இப்னு தைமிய்யாவின் நூல்களும் துண்டுப் பிரசுரங்களும் ஃபத்வாக்களும் அவரின் நிலைப் பாடுகளும் அவரின் அறிவு ஞானத்தை நிரூபித் துக் கொண்டே இருக்கும். எனினும் நான் இங்கே அவரின் இரு கருத்துக்களை மட்டும் எடுத்து வைக்கிறேன் பாருங்கள்... இடத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப நற்செயல்களின் தரங்கள் வேறுபடும்

இதுகுறித்து எனது நூலொன்றிலும் நான் என் கருத்தைப் பதிவுசெய்துள்ளேன்.

இதோ இப்னு தைமிய்யா கூறுகிறார்

ஒரு நற்செயலைச் செயவதனாலோ செய்யா மலிருப்பதானாலோ ஏற்படும் விளைவுகளைப் பொறுத்து அச்செயலைச் செய்வது ஒரு சூழலில் நன்மையாகும். மற்றொரு சூழலில் அதைச் செய்யாமலிருப்பது நன்மையாகும்.

உதாரணமாகப் பாருங்கள் நபி (ஸல்) அவர்கள் மக்கா வெற்றிக்குப் பின்னர் கஅபா என்னும் இறை இல்லத்தை இப்ராஹீம் நபி (அலை)வின் அடித்தளத்தில் (செவ்வக

வடிவத்தில்) கட்டிட விரும்பினார்கள். ஆனால் செய்யவில்லை.

ஆயிஷா (ரழி)விடம் "ஆயிஷாவே! உன் சமுதாயத்தினர் அஞ்ஞானத்திலிருந்து மீண்டு புதிதாக இஸ்லாத்துக்கு வந்தவர்களாக இல்லாவிடில் நான் கஅபாவை இடித்துவிட்டு அதன் வாசலை தலையை ஒட்டி வைத்து அதற்கு இருவாசல்கள் வைத்திருப்பேன். ஒருவாசல் வழியக மக்கள் நுழைந்து மறுவாசல்

வழியாக வெளியே வர வசதியாக அமைத் திருப்பேன்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறின ார்கள் (நூல் : புகாரி, முஸ்லிம்)

மக்கள் நலனுக்கு ஏற்றபடி (இரு வாசல் வைத்து) கட்ட விரும்பினாலும் அதைச் செய்ய வில்லை. ஏனெனில் புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய குறைஷிகள் வெறுப்படைந்து விடக் கூடும் என்று அஞ்சினார்கள்.

ஆக, தாம் விரும்பும் மக்கள் நலனை விட ஏற்படப் போகும் குழப்பங்களைக் கருத்தில் கொண்டு அப்படிக் கட்டாமல் விட்டு விட்டார்கள். ஒரு முஸ்லிம் இப்படித்தான் செயல்பட வேண்டும். ஒரு பணியைச்செய்வதால் சீர்த்திருத்தத்தை விட சீர்கேடு அதிகமாகிவிம் என்றால் அச்செயலை விட்டு விட வேண்டும்.

எனினும் சீர்த்திருத்தம், சீர்கேடு என்பவை ஷரீஅத்தின் சான்றுகளின்படியே அமைய வேண்டும். எனவே இமாம் அஹ்மது (ரஹ்) முதலிய அறிஞர்கள் கூறுகின்றனர்.

"தொழுகை நடத்தும் இமாம் தாம் எதை சிறப்பானது என்று நினைக்கிறாரோ அதை செய்வதால் மக்களிடையே குழப்பம் ஏற்படும் என்றிருந்தால் அதைச் செய்யக் கூடாது"

"உதாரணமாக மூன்று ரக்ஆத்துகள் கொண்ட வித்ரு தொழுகையை (ரமழானில்) கூட்டாகத் தொழும் சூழலில் முதல் இரண்டு ரக்அத்களை தொழுது முடித்து பிறகு தனியாக ஒரு ரக்அத் தொழுவதே சரியானது என்று இமாம் இருக்கிறார்"

"மக்களோ மூன்று ரக்அத்களையும் (ஒரே சலாமில்) மொத்தமாக தொழும் வழக்கமுள்ள வர்கள் என்றால் இந்த இமாம் தாம் சரியெனக் கருதும் வழிமுறைப்படி தொழுகை நடத்தினால் மக்கள் மத்தியில் குழப்பம் ஏற்படும் என்ற சூழலில் அதை விட்டு விட்டு மக்களின் வழக்கப்படி தொழுகை நடத்த வேண்டும்."

"இதுபோலவே "பிஸ்மில்லாஹ்"வை சப்தமிட்டு ஓதும் வழக்கமுள்ளவர்கள் உண்டு. அதை மெதுவாக ஓதும் வழக்கமுள்ளவர்களும் உண்டு"

"இப்பொழுது தொழுகை நடத்துபவர் வீணான குழப்பத்தைத் தவிர்ப்பதற்காக அந்தப் பகுதியிலுள்ள மக்களின் வழக்கப்படி தொழுகை நடத்த வேண்டும். அது ஏற்றமானதல்ல என்று அவர் கருதினாலும் சரி"

அறியாத மக்களுக்கு ஒரு சுன்னா (நபி வழி) யைக் கற்பிப்பதற்காகவும் இப்படிச் செய்யலாம். அஊதுபில்லாஹ், பிஸ்மில்லாஹ், ஸனா ஆகியவற்றை கூட்டுத் தொழுகையில் சப்தமாக ஓதிக் காட்டலாம். இவ்வாறு தொழுகைகளில் ஓத வேண்டும் என்று மக்கள் புரிந்து கொள்வதற்காக

உமர் (ரழி) அவர்கள் தக்பீர் கட்டியபின் "ஸனா"வை சப்தமிட்டு ஓதியிருக்கிறார்கள்.

அஸ்வத்பின் யசீத் கூறுகிறார் : எழுபதுக்கும் அதிகமான தொழுகைகளை நான் உமர் (ரழி)வின் பின்னால் நின்று தொழுதிருக்கிறேன். அவர்கள் தக்பீர் கட்டியபின் "ஸனா"வை சப்தமாகி ஓதின ார்கள் (நூல் : முஸ்லிம்)

சுப்ஹகல்லாஹுு ம்ம.. என்று தொடங்கும் ஸனா மக்களிடம் பரவலாகி அதை அனேக மக்கள் ஓதி வருவதற்குக்கு காரணம் அதை உமர் (ரழி) பிறர் கேட்கும்படி சப்தமாக ஓதியதுதான். இதுபோல இப்னு உமர், இப்னு அப்பாஸ் (ரழி அன்ஹுு மா) இருவரும் தொழுகையில் அவூதுபில்லாஹ்வை சப்தமிட்டு ஓதியுள்ளார்கள்.

பல நபித்தோழர்கள் "பிஸ்மில்லாஹ்"வை சப்தமிட்டு ஓதியிருக்கிறார்கள். இவ்வாறு சப்தமிட்டு ஓதவது சுன்னத் அல்ல என்று கருதும் சட்ட வல்லுநர்களும் கூட அறியாத மக்களுக்குக் கற்பிப்பதற்காக சப்தமாக ஓதலாம் என்கின்றனர்.

இப்னு அப்பாஸ் (ரழி)யவர்கள் இறந்தவருக் கான ஜனாஸா தொழுகையில் ஃபாத்திஹா அத்தியாயத்தை சப்தமிட்டு ஓதினார்கள் என்று நம்பகமான ஓர் அறிவிப்பு உள்ளது. இது ஒரு சுன்னா என்று கற்பிப்பதற்காகவே அப்படி ஓதினார்கள் என்று இதற்கு விளக்கம் கூறப் பட்டுள்ளது.

இறந்தவருக்கான ஜனாஸா தொழுகையில் ஃபாத்திஹா அத்தியாயம் ஓத வேண்டியதில்லை என்று ஸலஃப் எனப்படும் முற்கால அறிஞர்கள் பலர் ஓதியுள்ளனர். இமாம் மாலிக், இமாம் அபூ ஹனீபா ஆகியோரின் கருத்தும் இதுவே. ஓதுவது சுன்னா என்பது இமாம் ஷாபி இமாம் அஹ்மது ஆகியோரின் கருத்து. இப்னு அப்பாஸ் (ரழி)வின் மேற்கண்ட ஹதீஸையும் வேறு சில ஹதீஸ்களையும் தமக்குச் சான்றாக இவ்விருவரும் முன் வைக்கின்றனர்.

சிலர் அது கட்டாயம் என்கின்றனர். ஏனெனில் மற்ற தொழுகைபோல இதுவும் ஒரு தொழுகைதான் என்கின்றனர். சிலர், இது (ஃபாத்திஹா அத்தியாயத்தை ஓதுவது) கட்டாயம் அல்ல, விரும்பத்தக்க ஒரு சுன்னா என்கின்றனர். மேற்கண்ட மூன்று கருத்துக்களில் இதுவே சரியானது.

இதுவே சரியான கருத்து என்று நான் கூறுவதற்குக் காரணம் "ஸலஃப்" எனப்படும் மூத்த முன்னோடிகள் இருவிதமாகவும் செயல் பட்டிருக்கின்றனர். இரு நடைமுறைகளும் அவர்கள் மத்தியில் தாராளமாக புழக்கத்தில் இருந்துள்ளது. இறந்தவருக்கான ஜனாஸா தொழுகையில் அவர்கள் ஃபாத்திஹா அத்தி யாயம் ஓதியுமிருக்கிறார்கள். ஓதாமலும் தொழு திருக்கிறார்கள்.

அதில் பிஸ்மில்லாஹ்வை சப்தமாகவும் சொல்லியிருக்கிறார்கள், மெதுவாகவும் சொல்லி யிருக்கிறார்கள். ஸனா ஓதியுமிருக்கிறார்கள், ஓதாமலுமிருந்திருக்கிறார்கள். ஒவ்வொரு தக்பீர் சொல்லும் போதும் கையை உயர்த்தியுமிருந் திருக்கிறார்கள். உயர்த்தாமலும் இருந்திருக் கிறார்கள்.

தொழுகை முடியும்போது ஒரு பக்கம் மட்டும் திரும்பி ஸலாம் சொன்னவர்களும் உண்டு, இரண்டு பக்கமும் திரும்பி இரு ஸலாம் சொன்னவர்களும் உண்டு. இமாமைப் பின்பற்றித் தொழுவோர் ஓதுவதும் உண்டு, ஓதாமலி ருப்பதும் உண்டு. நான்கு தக்பீர், ஐந்து தக்பீர், ஏழு தக்பீர் என்று பலரும் பலவிதமாக (மேற்கண்டபடி ஜனாஸா தொழுகை) தொழுதிருக்கின்றார்கள். மேற்கண்ட எல்லா வழிமுறைகள்படியும் நபித்தோழர்கள் தொழுதிருக்கிறார்கள் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இதுபோல பாங்கு இகாமத் சொல்லுவதிலும் இரு நடைமுறை புழக்கத்தில் இருந்துள்ளது. பாங்கை சப்தமாகச் சொல்லிவிட்டு ஒவ்வொரு வார்த்தையும் திரும்ப ஒருமுறை மெதுவாகச் சொல்வதும் உண்டு. சிலர் அப்படிச் சொல்வ தில்லை.

"இகாமத்"தின் வசாகங்களை இருதடவை கூறுபவர்களும் உண்டு. ஒரு தடவை மட்டும் கூறுபவர்களும் உண்டு. இரண்டுமே நபி வழி (சுன்னா)தான். இவற்றுள் ஒன்று சிறந்தது. மற்றெ ான்று மிகச்சிறந்தது.

மிகச் சிறந்ததைச் செய்யாமல் சிறந்ததைச் செய்பவர் அனுமதிக்கப்பட்டதையே செய்திருக் கிறார். மிகச் சிறந்ததைச் செய்வதால் குழப்பம் ஏற்படும் எனும்போது சிறந்ததைச் செய்வதே மிகச் சிறந்ததாகிவிடும். ஏனெனில் இதில் ஒரு சமூக நலன் இருக்கிறதே!

பொதுவாக எல்லா வழிபாடுகளுமே இப்ப டித்தான். எல்லாச் சூழல்களிலும் மிகச் சிறப் பானதாகவே ஒரு வழிபாடு (அமல்) இருந்து விடுவதில்லை. குர்ஆன் ஓதுவதை விட தொழுவது சிறந்தது. திக்ரு (இறைத்துதி)யை விட குர்ஆன் ஓதுவது சிறந்தது. பிரார்த்தனையை விட இறை த்துதி சிறந்தது.

அதே நேரத்தில் ஃபஜ்ர்க்குப் பின் (சூரிய உதயநேரம்) அஸர்க்குப் பின் (சூரியன் மறை யும் வரை) ஆகிய நேரங்களில் தொழக்கூடாது. இந்த நேரங்களில் கிராஅத் எனும் குர்ஆன் ஓதுவதும், திக்ரு எனும் இறைத்துதியும் துஆ எனும் பிரார்த்தனையும் தொழுவதை விடச் சிறப்பானதாகிறது.

தொழுயைின் இறுதி இருப்பில் அத்தஹிய் யாத் ஓதிய பிறகு (ஸலாம் கொடுப்பதற்கு முன்னர்) திக்ரு ஓதுவதை விட துஆ ஓதுவதே சிறப்பானது. ருகூவு எனும் குனிதல் ஸஜ்தா எனும் சிரம்பணிதல் ஆகிய இரு நிலையிலும் குர்ஆன் ஓதுவது கூடாது. இங்கு குர்ஆன் ஓதவதை விட திக்ருதான் சிறப்பானது. இவ்வாறு ஒவ்வொரு (வழிபாடு) அமலுக்கும் உரியதோர் இடமுண்டு. அதன் இடத்தில் சிறப்பானது மற்ற தை விட, இவ்வாறு அமல் எனும் வழிபாடுகள் அதனதனுக்குரிய இடங்களைப் பொருத்து சிறந்தவை, மிகச் சிறந்தவை, நல்லதல்ல என்று ஆவதைப்போல ஒரு தனிமனிதனுடைய

சூழ்நிலையைப் பொருத்தும் இவ்வாறு ஆவதுண்டு.

இதற்குக் காரணம் அவர் அந்த வழிப் பாட்டைச் செய்யாதபடி பலஹீனமானவராக இருக்கலாம். அல்லது அவரின் விருப்பமும் ஆசையும் ஈடுபாடும் காரணமாகவே இருக்கலாம். அதாவது மிகச் சிறந்த வழிபாடு ஒன்றைச் செய்திட அவரின் உடல் ஒத்துழைக்கவில்லை. அல்லது அவரின் மனம் மிகச் சிறந்த வழிபாட்டை விட தாழ்ந்த வேறொரு சிறந்த வழிபாட்டை விரும்புகிறது, லயிக்கிறது எனும் பட்சத்தில் இவரைப் பொறுத்தவரை இதுவே மிகச் சிறந்த வழிபாடு என்றாகிவிடும்.

ஏனென்றால் மனம் எதில் லயிக்குமோ அதை அவன் அதிகமாகவும் ஈடுபாட்டுடனும் செய்வான் அல்லவா? உதாரணமாக ஒரு நோயாளியின் நோய்க்கு இருவகை மருந்து உள்ளது. ஒன்று அவருக்குப் பிடித்திருக்கிறது. மற்றொரு மருந்து அவருக்குப் பிடிக்கவில்லை என்றால் பிடிக்காத மருந்து மிகச் சிறந்ததாக இருந்தாலும் கூட பிடித்த மருந்தைச் சாப்பிட்டு நோயைக் குணப்படுத்திக் கொள்வார் அல்லவா? இந்தக் கோணத்தில் பார்த்தால் சிலருக்க சில நேரங்களில் குர்ஆன் ஓதுவதை விட திக்ரு மிகச் சிறப்பானது. தொழுவதை விட குர்ஆன் ஓதுவது சிறப்பானது என்றாகிவிடும்.

அதை விட இது உள்ளபடியே சிறந்தது என்பதல்ல. அவருக்கு அவர் சூழலுக்கு அது சிறந்தது என்பதால்தான். இப்படியான உதார ணங்கள் ஏராளம் உண்டு. இப்படி ஒரு வழிப் பாட்டை விட மற்றொரு வழிபாடு சிறப்பானது என்ற பாடத்தை இதற்கு மேல் விரிவாக நீட்டிக் கொண்டுபோக முடியாது. நுண்மான்நுழை புலத் துடன் யாரும் இதைப் புரிந்திடவும் இயலாது.

பெரும்பாலான வழிபாடுகள் சூழ்நிலைக்கு ஏற்ப சிறந்தது, மிகச்சிறந்தது என்று ஏதோ ஒரு வடிவம் எடுக்கின்றன. இதற்குமேல் இதைப் பேசினால் குழப்பம்தான் ஏற்படும். ஏனென்றால் சிலர் சில குறிப்பிட்ட வழிபாடுகளை ஈடுபாட் டுடனும் விருப்பத்துடனும் செய்கின்றனர். இடைவிடாமல் தொடர்ச்சியாகச் செய்கின்றனர். பின்னர் கட்டாயக் கடமைகளை விட இவற்றுக்கு அதீத முக்கியத்துவம் தரும் அளவுக்குப் போய் விடுகின்றனர்.



இறுதியாக இது ஒரு வழிபாடு என்ற நிலையைத் தாண்டி “இது எம்வழி நடப்போரின் அடையாளம். இதைச் செய்யாதவன் எம்வழி நடப்பவனல்லன் என்று கருதிடும் அளவுக்கு பிடிவாதம், இன அடையாளம், குழு அடை யாளம், மனோ விருப்பத்தினபடி வழிபடுதல், அஞ்ஞான வழிமுறையாகவும் கூட ஆகிவிடு கிறது. அவர்கள் விடாப் பிடியாகச் செய்துவரும் ஒரு (அமல் எனும்) வழிப்பாட்டை வேறு சிலர் வேண்டுமென்றே புறக்கணிக்கின்றனர்.

அதைச் செய்யாமலிருப்பது. எம்வழி நடப் போரின் அடையாளம். அதைச் செய்பவன் எம் வழி நடப்பவனல்லன் என்று கருதி ஹராமைத் தவிர்ப்பதைவிடக் கடுமை அந்த (அமலை) வழிபாட்டைத் தவிர்க்கின்றனர்.இதுவும் பிடி வாதம், இன அடையாளம், குழு அடையாளம் மனோ விருப்பத்தின்படி வழிபடுதல், அஞ்ஞான வழிமுறையாகவும் கூட ஆகிவிடுகிறது.

அதுவும் தவறு, இதுவும் தவறு,ஆக எல்லா வழிபாடுகளுக்கும் ஒரு தரம் இருக்கிறது அந்த தரத்திலிருந்து அதை கீழே இறக்கக்கூடாது. அல்லாஹ்வும் அவனின் திருத்தூதரும் எதை தாராளமாக்கின ார்களோ அதை தாராளமாகவே வைத்திருக்க வேண்டும். எதை விரும்பச் சொன்னர்களோ அதை விரும்ப வேண்டும். ஒவ்வொரு வழிபாட்டுக்கும் ஒரு நோக்கம் இருக்கிறது. ஒரு சமூக நலன் இருக்கிறது. அது அல்லாஹ்வும் ரசூலும் விரும்பியது என்பதையும் கவனிக்கத் தவறக் கூடாது.

பேச்சுக்களில் சிறந்தது அல்லாஹ்வின் பேச்சு வழிமுறைகளில் சிறந்தது பெருமானார் (ஸல்) அவர்களின் வழிமுறை. அவர்களை அருட் கொடையாக அல்லாஹ் அனுப்பி வைத்துள் ளான். அவர்களின் கடைப்பிடித்துக் காட்டிய ஒவ்வொரு காரியத்திலும் ஈருலக வெற்றி இருக்கிறது என்பதையும் விளங்கிட வேண்டும்.

(தொழுகை, நோன்பு, தர்மம், ஹஜ், குர்ஆன் ஓதுதல், திக்ரு, துஆ ஆகியவற்றில் ஒன்றை உபரியாகவும் கூடுதலாகவும் ஒருவர் தொடர்ச்சி யாகச் செய்து வருகிறார். அதில் மன ஓர்மை யுடனும் லயிப்புடனும் ஈடுபடுகிறார். மற்ற வழிபாடுகளை விட இதுவே மேன்மை மிக்கது என்று அவர் கருதுகிறார் என்றால் அப்படி அவர் அதை விரும்புவதற்குரிய காரணம் தெளிவாக இருக்க வேண்டும்)

(அதாவது அல்லாஹ்வும், ரசூலுமே வழிகாட்டிகள். அவ்விருவரும் எதைச் சொன்ன ாலும் அதில் ஓர் அர்த்தம் இருக்கும் என்று நம்ப வேண்டும்) பிறகு குறிப்பிட்ட ஒரு வழிப் பாட்டில் மட்டும் தம் மனம் ஏன் லயிக்கிறது என்பதையும்அவர் விரிவாகப் புரிந்திட வேண்டும். இப்படி இல்லாமல் போனால் ஆளாளுக்கு மனம் போன போக்கிலோ அறியாமையாலோ அநியாயமாகவோ எனக்கு அது பிடிக்கும். எனக்கு இது பிடிக்கும் என்றும் அதை விட இந்த வழிபாடு ஏற்றமானது. இதைவிட அது ஏற்றமானது என்று செயல் படத் தொடங்கி விடுவர்.

சமுதாயத்தின் நிலைமை இப்படி ஆகிவிட் டால் அல்லாஹ்வும் ரசூலுமே வழிகாட்டிகள் அவர்கள் சொன்னால் அதில் ஓர் அர்த்தம் என்பதெல்லாம்வெறும்நம்பிக்கையாகமட்டுமே ஆகிவிடும். செயல்கள் அவரவர் விருப்பப்படி ஆகிவிடும். இது சரியல்ல.அல்லாஹ் நமக்கு நேர்வழி காட்டுவானாக...! நபிமார்கள் வாய்மை யாளர்கள், உயிர்த்தியாகிகள், நல்லோர்கள் ஆகிய அல்லாஹ்வின் அருள் பெற்றவர்களின் பாதையில் நம்மை செலுத்துவானால் இவர்களே நல்ல தோழர்கள்.

(நூல் : இப்னுதைமிய்யாவின் ஃபத்வாக்கள், பாகம்–24, பக்கங்கள் 195–199)

**தமிழில் பேராசிரியர் இல்யாஸ் ரியாஜி** M.A.,




இப்போது பரபரப்பான
விற்பனையில்




விலை ரூ. 30 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**
52/1, மண்ணடி தெரு, மண்ணடி,
சென்னை - 600 001.
தொடர்ப்புக்கு : 8148129887

# இஸ்லாமிய வங்கிமுறை

**இத்தகைய வங்கிமுறை இவ்வாறு இயங்குகிறது?**

**அது ஏன் வட்டியை தடை செய்தது?**

**வட்டியில்லாமல் எப்படி வங்கி லாபம் ஈட்டும்?**




இஸ்லாமிய வங்கிமுறை முஸ்லிம்களுக்கு மட்டும் உரிமையானது அல்ல. இது முற்றிலும் குர்ஆன் ஹதீஸ் அடிப்படையில் வரையறைக்கப்பட்டது. குர்ஆன் ஒட்டு மொத்த மனித குலத்திற்கும் அருளப்பட்ட வேதமாகும்.

எனவே இவ்வங்கி முறையை யார் வேண்டுமானாலும் பின்பற்றலாம். HSBC போன்ற வங்கிகள் எல்லாம் இஸ்லாமிய வாங்கி முறையை ஒரு பிரிவாக வைத்து செயல்படுகிறார்கள். சிங்கப்பூர், பிரிட்டன், ஹாங்காங் போன்ற நாடுகளிலும் இஸ்லாமிய வங்கி முறை செயலில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் ரகுராம் ராஜன் அளித்த அறிக்கையை ஏற்று இஸ்லாமிய சமுதாயத்தை வங்கி வட்டத்துக்குள் கொண்டுவர SBI ஷரியத் அடிப்படையில் ஒரு பிரிவை தொடங்க முயற்சித்தார்கள். அதை சுப்ரமணிய சாமி நீதிமன்றம் சென்று மத அடிப்படையில் வங்கி முறை செயல்படக்கூடாது என்று நிறுத்தி விட்டார். மேலும் இத்தகைய வங்கிமுறை வந்தால் ஹிந்துக்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும் இது மதமாற்றத்தை வலுப்படுத்தும் என்றும் ஒரு கூட்டத்திலும் சாடினார்.

நிச்சயமாக சாதிக்கொடுமையில் இருந்த மக்களுக்கு இஸ்லாம் அருமருந்தாக அமைந்தது என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இல்லை. அதேபோல், வட்டி என்கிற பொருளாதார சுரண்டலிலும் மக்களை விடுவித்தால் இம்மார்க்கத்தை வெறும் வழிபாடு மார்க்கம் அல்ல என்பதை எல்லா மக்களும் புரிந்து கொண்டு கூட்டம் கூட்டமாக சேரவாய்ப் புள்ளன. இதனால்தான் சுப்ரமணிய சுவாமிகள் கொதிக்கின்றார்கள், குதிக்கின் றார்கள்.

முஷாரகா, முராபஹா, முதாராபா, இஸ்திஸ்னா, சுகுக், இஸ்திஸ்னா, இஜாரா, தக்காஃபுல் போன்ற வங்கி செயல் திட்டம் எப்படி இயங்குகிறது?

இது போன்ற கேள்விகளுக்கு எடுத்துக் காட்டுடன் காண்போம்.

**இஸ்லாம் வட்டியை ஏன் தடைசெய்கிறது?**

மனிதர்களின் வாழ்க்கை எல்லா நாட்களும் ஒன்றுபோல் போன்று அமைந்து விடுவதில்லை. ஒவ்வொரு நாளின் தேவைகளும்




மாறிக்கொண்டே இருக்கும்.

ஒரு சில வேளைகளில் அதிகப்படியான பொருளாதாரம் தேவைப்படும். (எ-க: ஆபத்து காலங்கள், தொழில் தொடங்க மற்றும் பிற அத்தியாவசிய தேவைகளுக்காக).

இத்தகைய நேரங்களில் கடன் என்பது ஒரு அடிப்படை தேவையாகிறது. ஒருவரின் தேவைக்கு உதவி செய்வது என்பது மனிதாபிமான செயல், மேலும் இது சகோதரத்துவத்தை வலுப்படுத்தும். சமூகத்தில் உள்ள பிணக்குகளைகளையும். வன்முறை, வெறுப்புக்கு இடம் இல்லாமல் ஆக்கும். அனால், ஒருவரின் தேவை என்கிற சூழலை பயன்படுத்தி அவர்களின் உழைப்பை சுரண்டி பணம் சம்பாதிக்க பார்ப்பது மனிதாபிமானமற்ற செயல், இது வாழ்க்கையில் விரக்தியை ஏற்படுத்தும். தனிநபர் தாக்கம் சமுகத்தையும் பாதிக்கும். அது நாட்டு மக்களையும் பாதிக்கும்.இதற்கு ஒரு உதாரணம்

"நாங்கள் 1985 வரை வாங்கிய கடன் தொகை 5 பில்லியன்அமெரிக்க டாலர்கள் ( 1 பில்லியன் என்பது சுமார் 6500 கோடி ரூபாய்), இது வரை நாங்கள் செலுத்திய தொகை மட்டும் 16 பில்லியன், மேலும் எங்களிடம் இருந்து வரவேண்டிய தொகை 28 பில்லியன் உள்ளதாக கூறப்படுகிறது. உலகத்தில் மிகவும் கொடுமையான விஷயம் என்ன என்று என்னிடம் கேட்டால் எங்கள் மீது விதித்த வட்டியை தான் கூறுவேன்"

நைஜீரியா நாட்டு முன்னாள் பிரதமர் அபசஞ்சோ. 2000'ம் ஆண்டில் நடந்த உச்சி மாநாட்டில் இவ்வாறு கூறினார்.

மேலும் எகிப்து நாட்டில் நைல் நதியின் மேல் அணைக்கட்ட உலக வங்கியில் கடன் வாங்கி இன்று வரை வட்டியைத்தான் கட்டிக் கொண்டு இருக்கிறார்கள்.

இந்திய அரசு கடந்த ஆண்டில் 18% பட்ஜெட் தொகையை வட்டியாக உலக வங்கிக்கு செலுத்தியது.

இது வெளிப்படையான சுரண்டலே தவிர வேறல்ல.

**இஸ்லாமிய ஆட்சியும் - வட்டியும் :**

நிச்சியமாக வட்டி இல்லா உலகத்தை அமைக்க இஸ்லாமிய ஆட்சியால் மட்டுமே முடியும்.காரணம் மற்ற சித்தாந்தங்கள் வட்டியை வலுவாக எதிர்ப்பதற்கு வாய்ப்பில்லை. மேலும் இஸ்லாமிய ஆட்சியில்

**1) வட்டி தடை செய்யப்படும்**

**2) வட்டி கிரிமினல் குற்றமாக கருதப்படும்**

3) நபி (ஸல்) அவர்கள் காலத்தில் இச் சட்டம் அமலுக்கு வந்தவுடன், வட்டி தொழிலில் ஈடுபடுவோர் மீது போர் தொடுக்கப்படும் என்று எச்சரிக்கை செய்யப்பட்டது. (2:278)

4) நஜ்ரான் பிரதேசத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுடன் செய்த ஒப்பந்தத்தில், "நீங்கள் வட்டி தொழில் நடத்தினால் இவ்வுடன் படிக்கை ரத்தாகிவிடும். உங்களுக்கும் எங்களுக்கும் போர் நிலைதான் ஏற்படும்" என்று குறிப்பிடப்பட்டு இருந்தது.

வட்டி என்பது ரத்தத்தை உறிஞ்சும் அட்டை பூச்சி போன்றது. அதனால் தான் இஸ்லாம் இதை தடை செய்கிறது.

**- அபுதாஹிர்**

இன்ஷா அல்லாஹ் தொடரும்.



# காலம் தரும் பாடங்கள்

காலத்தின் மீது சத்தியமாக, நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கிறான், நம்பிக்கை கொண்டு நல்லறங்கள் செய்வோரையும், உண்மையைப் போதித்து, பொறுமையையும் போதித்துக் கொள்வோரையும் தவிர (அல்குர்ஆன் : 103 : 1-3)

இறைவன் காலத்தின் மீது சத்தியமாக என்று கூறி ஆரம்பிக்கிறான். இறைவன் ஒரு விஷயத்தின் மீது சத்தியம் செய்கிறான் என்றால் அது நிச்சயமாக "விலைமதிப்பு மிக்க ஒரு விஷயமாகவே இருக்கும்"

அவன் சத்தியம் செய்து கூறும் பொருட்கள் எல்லாமே அவனால் படைக்கப்பட்ட பொருளாக இருக்கும். வானத்தின் மீது சத்தியமாக, பூமியின் மீது சத்தியமாக, முற்பகல் மீது சத்தியமாக, நட்சத்திரங்கள் மீது சத்தியமாக என்றும் இன்றும் பல இடங்களில் பல விஷயங்கள் மீது சத்தியம் செய்கிறான். அவன் சத்தியம் செய்யும் அனைத்துமே அவனால் படைக்கப்பட்டவையாகவே இருக்கிறது.

இப்படி சத்தியம் என்ற ஒரு வார்த்தையில் நமக்கு கிடைக்கும் பாடம் என்னவென்றால், மனிதர்களாகிய நாம் சத்தியங்களை எவ்வாறு கையாள வேண்டும் என்பதாகும். சில மனிதர்களைப் பார்த்தால் சின்ன சின்ன விஷயங்களுக்ெல்லாம் எதை எதை எல்லாம் கூறி சத்தியம் செய்கிறார்கள். தன் மீதும், தன் பிள்ளைகள் மீதும், பெற்றோர் மீதும், தனக்கு சொந்தமில்லாத ஏதாவது ஒன்றின் மீதும் சத்தியம் செய்கிறார்கள். சில நேரங்களில் பொய்யாக கூட சத்தியம் செய்கிறோம். இதற்கெல்லாம் இஸ்லாத்தில் இடம் இல்லை.

முடிந்தவரை, இறுதி வரை உண்மையே பேச வேண்டும். நாம் உண்மையை பேசும்போது அதையும் சிலர் நம்ப மறுக்கும்போது, அந்த இடத்தில் உண்மையை நிரூபிக்க வேண்டுமே என்ற கட்டாயத்தில் மட்டுமே அகில உலகையும் படைத்த இறைவன் மீது மட்டுமே சத்தியம் செய்ய வேண்டுமே தவிர, அழிந்துப் போகும் எதை கொண்டும் நாம் சத்தியம் செய்யக் கூடாது.

அதிலும் இறைவன் பெயரைக் கூறி சொன்ன சத்தியங்கள் பொய்யாக இருந்தால் "அதற்காக 3 நாட்கள் தொடர்ந்து நோன்பு" இருந்து இறைவனிடம் பாவமன்னிப்பு செய்ய வேண்டும் என்ற பரிகாரமும், இன்னும் சில பரிகாரங்களும் இருக்கிறது. எனவே நாம் இதுவரை அசட்டையாக இருந்ததுபோல் சத்தியம் செய்யும் விஷயத்தில் இருந்து விடாமல்

இதிலும் ஈமானை பலமாக தற்காத்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து பார்த்தோமேயானால் காலத்தைப் பற்றி இறைவன் கூறுகிறான்..

இறைவன் ஒரு விஷயத்தின் மீது சத்தியம் செய்கிறான் என்றால் அது நிச்சயமாக விலை மதிப்பு மிக்க ஒன்றாகவே இருக்கும் என்று முதலிலேயே பார்த்தோம். ஆம், என்று நம் முன்னோர்களே அதை கூறி விட்டார்கள்" எப்படி என்றால், ஒரு பொன்மொழி கூறுவார்கள்...

"காலம் பொன் போன்றது" என்று இன்றைய உலகத்தில் காலத்தின் அருமையை உணராத மனிதர்களும் கூட, பொன்னின் அருமையை உணர்ந்து இருக்கிறார்கள்.

திடீரென்று விலை உயர்ந்துவிடும், திடீரென விலை சரிந்துவிடும், உயர்ந்தாலும், சரிந்தாலும் "பொன்னிற்கு" என்றும் மதிப்பு அதிகம்தான். இதை யாரும் மறுப்பதற்கில்லை.

அதேபோல்தான் இறைவன் கூறும் விஷயங் களும் அதைவிட ஒருபடி மேல்தான் என்றே கூறி ஆக வேண்டும். ஏனென்றால் (பொன்) தங்கத்தை கூட விலை கூடினாலும், குறைந்தா லும், நம் தேவைக்கேற்ப வாங்கிக் கொள்ளலாம். ஆனால், காலமும், நேரமும் நம் கை நழுவி சென்று விட்டதென்றால், அதை நம்மால் திரும்பபெறவே முடியாது.

கோடியைக் கொண்டு கொட்டி கேட்ட லாலும் சென்று விட்ட காலமும், சென்றுவிட்ட உறவுகளும் மீண்டும் வருவதில்லை. அதனால் தான் கூறுவார்கள்"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டவர் வருவதுண்டோ மீண்டும் பூமியிலே" என்பார்கள்.

இறைவன் நமக்கு தரும் நேரங்களையும் நமக்குத் தந்த உறவுகளையும் நல்ல முறையிலே பேண தவறவிட்டு விட்டோமேயானால் அவை நம்மை விட்டு சென்றபின் அழுது, புலம்பு வதால் எந்த பலனுமே இல்லை.

20 வயது கழிந்த பிறகு 10 வயது மீண்டும் வராதா என்று எதிர் பார்ப்பது எவ்வளவு ஏமாளித்தனமோ அதேபோல்தான் காலத்தை வீணாகவும், தீய வழியிலும் கழித்து விட்டு, பின்னர் கை தேசப்படுவதும், வயது போய் விட்டதால் சிகை அலங்காரங்கள் செய்து வயதை குறைவாக காட்ட பலர் முயற்சிப்பதும். ஆனால் உண்மை நாம் தமது வயதை கடந்து விட்டோம் என்பதே ஆகும்.

ஒரு வரலாற்று ஆசிரியர் "காலத்தைப் பற்றி கூறும்போது சொல்கிறார்" ஒரு பனிக்கட்டி விற்பனை செய்யும் வியாபாரி அந்த பனிக்கட்டி களை அவை உருகுவதற்கு முன் அவற்றை விற்றுவிட வேண்டும் என்று எப்படி குறியாக, துரிதமாக இருப்பானோ அதேபோல் நாமும் காலத்தை தவற விடாமல் வேகமாக பிடித்துக் கொண்டு அதை நற்செயல்கள் செய்வதன் மூலம் கழிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

ஒரு கண்ணாடி வியாபாரம் செய்பவன் எப்படி கண்ணாடியை உடையாமல் கவனமாக கையாள்வானோ அதேபோல் நாமும் "காலத்தை தவற விட்டுவிடாமல், கவனமாக இருக்க வேண் டும்" இதனால்தான் "பருவத்தே பயிர் செய்" என்பார்கள். "காற்றுள்ள போதே தூற்றிக்காள்" என்பார்கள்.

"காலத்தைப் பற்றி அறிவது மிக முக்கியமாக இருக்கிறது. காலம் அது எப்படிப்பட்டது, அதை எப்படி செலவிட வேண்டும், எப்படி செலவிடக் கூடாது, அதை நல்லமுறையில் பயன்படுத்த தவறினால் என்ன நிலை? அது எப்படி இன்று வீணடிக்கப்படுகிறது என்பதையும் அறிய வேண்டும்.

நாளை மறுமை நாளிலே ஒவ்வொரு ஆத்மா வும், அதற்காக வழங்கப்பட்ட காலத்தை எப்படி கழித்தது என்று விசாரிக்கப்படாமல் இருப்ப தில்லை" என்று நபிமொழியிலே பார்க்கிறோம்.

**நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்**

*1. வாழ்நாளை எப்படிக் கழித்தான்?*

*2. காலத்தை எப்படி செலவு செய்தான்?*

*3. வாலிபத்தை எதில் ஈடுபடுத்தினான்?*

*4. செல்வத்தை எப்படி சம்பாதித்து, எவ்வழியில் செலவு செய்தான்?*

*5. கற்றவைகளில் எதைச் செயல்படுத்தினான்?*

என்ற 5 விஷயங்கள் குறித்து விசாரிக்கப் படாத வரை மறுமை நாளில் எந்த மனிதனின் பாதமும் தன் இறைவனிடமிருந்து நகர முடியாது" என்று கூறினார்கள்.

*அறிவிப்பாளர் : இப்னு மஸ்ஊத் (ரழி) நூல் : திர்மிதி 25:31*

இன்று நமது நிலை "கண்டதே காட்சி,

கொண்டதே கோலம்" என்று நிசாரமான போக்கிலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

செல்போனிலே பேசி பேசி நேரத்தை வீணடிக்கிறோம். இதனால் நேரமும் வீணா கிறது, உடம்பிற்கும் கேடு ஏற்படுகிறது. சினிமா பலரை சிந்திக்க விடாமல் தடுத்து வைக்கிறது. நாமும் அதையே பார்த்துக் கொண்டு இருக் கிறோம். அவர்கள் நிமிட நடிப்பிற்கு பல லட்சங் களை வாங்குகிறார்.

அதைப்பார்த்துக் கொண்டே நாம் நம் பல ஆயிரங்களை இழக்கிறோம். பொன்னான நேரங் களை இழக்கிறோம். இதற்கெல்லாம் நாளை இறைவனிடத்தில் பதில் சொல்லியாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

வாலிபத்தை எப்படி, எதில் ஈடுபடுத்தினாய் என்று இறைவன் கேட்கும்போது, இன்றைய காலத்து இளைஞர்கள் என்ன பதில் சொல்வார்கள், எத்தனை இளம் பெண்களைப் பார்க்கிறோம், அர்த்தமே இல்லாமல், ஏதோ ஒரு அன்னிய ஆணுக்காக தன் ஒட்டுமொத்த இளமையை பருவத்தை நேரத்தை, பணத்தை, ஒழுக்கத்தை இழக்கிறார்களே காதல் என்ற பெயரால்,

எத்தனையோ துடிப்பான இளைஞர்கள் ஒரு பெண்ணுக்காக தன் ஒட்டுமொத்த இளமை பருவத்தையும் இழக்கிறார்கள். அதே சினிமா கற்றுத் தந்த காதல் என்ற கண்ணாமூச்சி தனத்தில்.

இதை போய் இறைவனிடத்தில் சொல்ல முடியுமா?

இதனால் நாம் பிறந்த பலனையே இழக்கிறோம் என்று நம்மில் எத்தனை பேர்கள் யோசித்துப் பார்க்கிறார்கள். தவறு செய்யும் ஒரு பெண்ணால் நாளை இறைவன் முன் அந்த ஆணை காப்பாற்ற முடியுமா? அல்லது அந்த ஆண் "உனக்காக உயிரைக் கூட கொடுப்பேன்" என இளமையிலே ஏமாற்று வார்த்தைகளை கூறி காலத்தை வீணடித்தவனால்,இறைவன் முன் நிற்கும்போது, தன்னுடைய நன்மையில் ஒன்றை அந்த பெண்ணுக்கு கொடுப்பானா அல்லது கொடுக்கத்தான் நினைப்பானா? இல்லை அதற்கெல்லாம் அங்கே வாய்ப்பே இல்லை. எல்லாம் பொய், பித்தலாட்டங்களும் இந்த பூமியிலே புதைக்கப்பட்டுவிடும்.

அநியாயமாக ஒவ்வொரு உயிர்களும் எங்கெல்லாமோ கொலை செய்யப்படுகிறதே அதற்காக எத்தனை இளைஞர்கள் கண்ணீர் சிந்தினார்கள், "மூஃமின்கள் அனைவரும் சகோதரர்களே" *(49:10)* (அல்குர்ஆன்)

என்று இறைவன் கூறுகிறானே நம் சகோதர பிஞ்சுகள், குழந்தைகள், ஒரு பாவமும் அறியா சிறு பிள்ளைகள் அநியாயமாக கொலை செய்யப் படுகின்றனவே அது ஏன்? என்று எத்தனை பேர் சிந்தித்து இருப்போம்? நாளை இந்த நிலை நமக்கும் கூட ஏற்படலாம், அப்படி வராமல் காக்க என்ன செய்ய வேண்டும்? என்று எத்தனை இளம் வயதினர் யோசித்து இருப்பார்கள்.

ஒரு மொபைல் போனும், ஒரு பைக்கும் கூடவே ஒரு பொண்ணுக்காக நேரத்தை, பணத்தை சீரழிக்கும் பழக்கமும் இந்த மூன்றும் இருந்தால் அதிலே இளமையை கழிக்கும் இளைஞர்களே இன்று அதிகமாக காணப்படுகிறார்கள்.

நம்மை இறைவன் எதற்காக படைத்தான் என்பதே புரியாவண்ணம் வாழ்ந்துக் கொண்டி ருக்கிறார்கள். இதனால் இரு உலகிலே கேடு தானே தவிர, நாம் செய்கின்ற ஒவ்வொரு தவறுக் கும் தனித் தனியாகவே விசாரிக்கப்படுவோம் என்பதை மறந்தே வாழ்கின்றார்கள்.

விலை மதிப்புமிக்க போனால் திரும்ப வராத இந்த உயிர்கள், ஜாதி, இன, மத, நிற அடிப்படையில் கொல்லப்படுகிறதே, இதை தடுக்க நம்மால் ஆன ஒரு சிறிய முயற்சியை செய்வோம்.

இறைவனும், இறைத்தூதரும் சொன்னதை கொஞ்சம் காது கொடுத்துக் கேட்போம், நாம் கேட்பதினால் கூட இறைவன் நன்மையை தரு கிறான். எனவே நம் தீங்குகளை களைவோம், மற்ற மக்கள் மத்தியில் நம் மார்க்கம் பற்றி தவறாக புரிதல்கள் இருந்தால் அதை நீக்குவோம் என்று, நல்ல முயற்சிகளை மனிதர்கள் மேற் கொள்ள வேண்டும். இப்படி நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் கூட நன்மை களை இறைவன் தர இருக்கிறான் என்பதை உணர்ந்து நம்மை நல்லவர்களால் நாம் சீர்திருத் திக் கொள்ள வேண்டும். காலத்தின் அருமையை உணர்ந்து நடக்க வேண்டும்.

**எல்லாப் புகழும் இறைவனுக்கே!**



# இந்தியருக்கு ஏன்? நோபல் பரிசு கிடைக்கவில்லை... மோடி காரணமா?

இந்தியாவின் மிகப்பெரிய பொருளாதார நிபுணர்களில் ஒருவர் ரகுராம் ராஜன்.

8-10-2017 உலகச் செய்திகளில், இவருக்கு நோபல் பரிசு கிடைக்கும் என கூறப்பட்டது. குடிமக்கள் அனைவரும் மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர். காரணம் நீண்ட நெடும் நாட்களுக்குப் பின்னர் இந்தியாவின் பெயர் உலக அரங்கில் கீர்த்தியோடு பவனிவரும் என்பதே.

ஆனால், அறுதி அறிவிப்பு வரும்போது, வேறு பெயர்களே வந்தது. இந்தியப் பெருங்குடி மக்களுக்கு ஏமாற்றமே!

ரகுராம் ராஜனுக்கு பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு கிடைக்கும் என்ற செய்தியைச் சொன்னவர்கள் அதனுடன் சேர்த்து இன்னொரு செய்தியையும் சொன்னார்கள். அது,

இந்த "ரகுராம் ராஜனை" இந்திய ரிசர்வ் வங்கியின் தலைவராக நியமித்தது முந்தைய மன்மோகன் சிங்.-இன் அரசு. அவருக்கு பதவி நீடிப்பு கொடுக்க மறுத்தது மோடி அரசு. காரணம், அவர் மோடியின் பணமதிப்பு நீக்க நடவடிக்கையை ஏற்கவில்லை, எதிர்த்தார், மறுத்தார்.

இதனை வைகறை வெளிச்சம் 2017 அக்டோபர் இதழில் தெளிவுபடுத்தி இருந்தோம். வாசகர் வைகறை வெளிச்சம் அக்டோபர் இதழில் வெளிவந்த கட்டுரையைப் படிக்கவும்.

பணமதிப்பு நீக்க நடவடிக்கையை செயல்படுத்தியே தீருவோம் என அடம்பிடித்த, மோடி அன்றைய ரிசர்வ் வங்கி தலைவர் ரகுராம் ராஜனிடம், பணமதிப்பு நீக்க நடவடிக்கையால் நீண்ட கால பலன் இருப்பதாக ஜோதிடம் சொன்னபோது, அதை ரகுராம் ராஜன் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்.



ரகுராம் ராஜன்

அப்படியேதும், நீண்ட காலப்பலன் இருப்பதாகத் தனக்குத் தெரியவில்லை என்றும், அப்படி இருந்தாலும், அது பணமதிப்பு நீக்க நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும், நடவடிக்கைகளில் ஏற்படும் செலவுகள் அதனை தின்றுவிடும் என்றார்.

அதுதான் இன்று நடந்து கொண்டிருக்கின்றது. வங்கிகள் தங்களுக்கு ஏற்பட்ட, மிகப்பெரிய இழப்புகளுக்கெல்லாம் நஷ்டங்களுக்கெல்லாம், மோடியே காரணம் எனச் சுட்டிக்காட்டிடும் அளவுக்கு நாடு கெட்டுப் போயிருக்கின்றது.

பொருளாதாரம் வளரவில்லை. மாறாக 9.2% சதவீதமாக இருந்த பொருளாதார வளர்ச்சி 3.2% சதவீதமாக வீழ்ந்துபோனது.

இந்நிலையில் ரகுராம் ராஜனுக்கு பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு கிடைத்தால், அது மோடியின் தோல்வியை உலகறியச் செய்துவிடும் என்பதால் மோடியே அமெரிக்க, இஸ்ரேலிய நாடுகள் வழி அழுத்தங்களைத் தந்து நோபல் பரிசை திசைதிருப்பி இருக்க வழி இருக்கின்றது என விபரமறிந்த வட்டாரங்கள் கருதுகின்றன. அந்த ஐயம் அனைவரையும் போல் நமக்குமிருக்கின்றது.

நோபல் பரிசுக்கான அறுதி அறிவிப்பு வரும்போது அமெரிக்காவைச் சார்நத பொருளாதார மேதை ரிச்சர்ட் தேலருக்குக் கிடைத்தது. பொருளியலுக்கும் உளவியலுக்கும் உள்ள நெருக்கமான (Nudging) தொடர்பை வெளிப்படுத்தியமைக்காக. நோபரிசு வழங்கப்பட்டுள்ளது.

**ரகுராம் ராஜன் இப்போது அமெரிக்காவின் ஹார்வேர்டு பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருக்கின்றார். மோடிக்குதான் அவருடைய அருமை தெரியவில்லை. ஆனால் அமெரிக்கர்கள் அவரைப் பயன்படுத்திக் கொண்டார்கள்.**

- எம்.ஜி.எம்.

# பரங்கிப்பேட்டை - மஸ்ஜித்-ல் NIA-வின் தலைமையில் நடந்த நாடகம்?

கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை மீராப் பள்ளி தெரு வழியாக 3 வாகனங்கள் சென்றது. கிளுர் நபி பள்ளிவாசல் எங்கு உள்ளது என்று மீராப்பள்ளி தெருவில் சென்றுக் கொண்டிருந்த இரண்டு நபர்களிடம் வாகனத்தில் இருந்தபடியே கேட்டுள்ளனர். அதன்பின் பள்ளிவாசல் வழியை காட்டியுள்ளனர். வந்த 3 வாகனங்கள் பள்ளியை நோக்கி விரைந்தன.

NIA அதிகாரிகள் பள்ளிவாசலில் தாடி வைத்த இரண்டு முஸ்லிம்களை இறக்கி கைது செய்வதுபோன்ற புகைப்படம், வீடியோகாட்சி களை எடுத்ததை பார்த்த அக்கம், பக்கம் உள்ள முஸ்லிம்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறியது...

கடந்த 23-09-2017 அன்று மதியம் 2.40 மணியளவில் பரங்கிப்பேட்டை கிளுர் நபி பள்ளிவாசலில் 2 இநோவா கார்கள் மற்றும் 15 நபர்களுக்கு மேல் ஏற்றி வரக்கூடிய காவலர்களின் பெரிய வாகனம் ஒன்று நின்றது.

NIA அதிகாரிகள் மற்றும் வி.ஏ.ஓ. தலையாரி மற்றும் பரங்கிப்பேட்டை காவல் நிலையத்திலிருந்து பெண் எஸ்.ஐ. பென் மகரம் மற்றும் 1 பி.சி.யுடன் இருந்தார்கள். சில நிமிடங்களுக்கு பின் ஒரு வண்டியிலிருந்து தாடி வைத்த ஒரு நபரை இறக்கினார்கள். அவர் பள்ளிவாசலில் நின்று ஒரு இடத்தை நோக்கி கை நீட்டிக் காட்டினார், இவர் செய்யக்கூடிய அனைத்து செயல்களையும் அதிகாரிகளுடன் வந்த வீடியோ எடுப்பவர் இத பதிவு செய்துக் கொண்டிருக்கிறார். NIA அதிகாரிகள் பள்ளி யிலிருந்து தீவிரவாதிகளை கைது செய்வது போல போட்டோ எடுத்துள்ளனர். அதில் ஒருவரை வண்டியில் ஏற்றினார்கள். பிறகு அந்த வாகனம் சில அடிகள் நகர்ந்தது பின்னே வந்த மற்றொரு வண்டியிலிருந்து மற்றொருவர் இறங்கினார். அவரையும் முதலில் செய்ததைப் போன்று புகைப்படம், வீடியோ பதிவு செய்துள் ளனர். பின்பு வண்டியில் ஏற்றினார்கள். இதை பார்த்துக்கொண்டிருந்த நாங்கள் அவர்களிடம் கேட்டோம்...

யார் நீங்கள்? இங்கே என்ன செய்கிறீர்கள்? என்றதற்கு "நாங்கள் NIA" என்று கூறியுள்ளார் கள். இங்கே ஒரு சிறிய விசாரணைக்காக வந்துள்ளோம். எந்த பிரச்சனையும் இல்லை என்று கூறினார். இதை சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று கார சாரமாக பரங்கிப் பேட்டை பேசியுள்ளார். இதைப்பற்றி ஏதேனும் விபரங்கள் தேவைப்பட்டால் பரங்கிப்பேட்டை காவல் நிலையத்திற்கு வந்து பெற்றுக்கொள்ளுங்கள் என்று கூறியுள்ளார். இதன்பிறகு வாகனங்கள் பள்ளியை விட்டுச் சென்றுவிட்டன.

பள்ளிவாசலில் கூடியிருந்த முஸ்லிம்கள் பரங்கிப்பேட்டை காவல் நிலையத்திற்கு சென்று கிளுர் நபி பள்ளிவாசலில் நடந்த சம்பவத்தைக் கூறி விளக்கம் கேட்டபோது, காவல் நிலையத்தில் உள்ளவர்கள் "நாங்கள் நீதி மன்றம் தீர்ப்பிற்கு வரக்கூடிய உயர் அதி காரிகளின் பாதுகாப்பிற்காக செல்ல இருக் கிறோம், ஆகையால் மாலை 6 மணிக்குமேல்

வாருங்கள் எனச் சொல்லியுள்ளார்கள்.

இதன்பின் இரவு 8.30 மணியளவில் பரங்கிப்பேட்டை இஸ்லாமிய ஐக்கிய ஜமாஅத் தலைவரின் தலைமையில் 30-க்கும் மேற்பட்ட இளைஞர்கள், பொதுமக்கள் ஆகியோர் நடைபெற்ற சம்பவத்திற்கு புகார் மனு எழுதி காவல் கண்காணிப்பாளரிடம் மனுவை கொடுக்க சென்றுள்ளனர்.

மனுவை விசாரித்த அதிகாரி, இது சுமார் 1 வருடத்திற்கு முன்னால் நடந்த சம்பவம், கைது செய்யப்பட்ட தீவிரவாதி பரங்கிப் பேட்டை கிளுர் நபி பள்ளிவாசலுக்கு வந்ததா கவும், அதனால் அவன் சென்ற, நின்று பேசிய இடங்களைக் காட்டுவதற்காக அவனைக் கூட்டி வந்ததாக கூறியுள்ளார். இதை ஒரு பெரிய பிரச்சனையாக எண்ணி பயப்பட வேண்டாம் என்று கூறினார்.

காவல்துறை அதிகாரியால் எடுக்கப்பட்ட வீடியோ, புகைப்படம் செய்திகளில் வராது என்று கூறினார். அதன்பிறகு அனைவரும் கலைந்து சென்றுள்ளனர். பரங்கிப்பேட்டை யில் ஒரு தீவிரவாதியை கைது செய்வது போன்ற நாடகம் NIA அதிகாரிகளால் நடத்தப் பட்டிருக்கின்றது என்று சிலர் கூறுகிறார்கள்.

பரங்கிபபேட்டையை தீவிரவாதிகளின் கோட்டையாக சித்தரித்துக் காட்டியுள்ளது செய்தித்தாள்கள். ஜாதி, மத வேறுபாடின்றி வாழ்ந்துவரும் மக்களிடையே பீதியை கிளப்பி முஸ்லிம்களை தீவிரவாதியாக சித்தரிப் பதை மக்கள் கடுமையாக எதிர்த்துள்ளனர். இதுபோன்ற நிகழ்வுகள் தொடரும் பட்சத் தில் மக்கள் போராட்டத்தை முன்னெடுப் பார்கள் என தெரிய வருகிறது.

**பரங்கிப்பேட்டை ந.நி.**

# ஆப்கானிஸ்தானில் தலீபான்கள் தாக்குதல் ராணுவ தளம் அழிப்பு; 43 வீரர்கள் கொன்று குவிப்பு

ஆப்கானிஸ் தானில் ஆதிக்கம் செலுத்தி வருகிற தலீபான் பயங்கரவாதி களின் கொட்டத்தை அடக்க முடியாமல் உள்நாட்டுப் படைகளும், அமெரிக்க கூட்டுப் படைகளும் திணறி வருகின்றன.

இந்த நிலையில் அங்கு காந்த ஹார் மாகா ணத்தில், மைவாந்த் மாவட்டத்தில் சாஷ்மோ பகுதி யில் அமைந்துள்ள ராணுவ முகா மில் நேற்று அதிகாலையில் தலீ பான் இயக்கத்தின் தற்கொலைப் படையினர், 2 கார்களில் வெடி குண்டுகளை ஏற்றிச் சென்று வெடிக்க வைத்து கொடூர தாக்கு தல் நடத்தினார்கள்.

இந்த தாக்குதலால் அந்த ராணுவ தளம் முற்றிலுமாக அழிக்கப்பட்டது. தொடர்ந்து பயங்கரவாதிகளுக்கும், பாதுகாப்பு படையின ருக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை யும் நடந்தது.

இதன் முடிவில் 43 ராணுவ வீரர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். 10 பயங்கரவாதி களும் கொல்லப்பட்டதாக தகவல்கள் கூறுகின்றன.



இந்த தாக்குதலுக்கு தலீ பான்கள் பொறுப் பேற்றனர். சம்பவம் நடந்த இடம் போர்க் களம்போல காணப்படுவதாக தெரிய வந்துள்ளது.

பக்தியா மாகாணத்தில் கார்டெஸ் நகரில் காவல்துறை வளாகம் ஒன்று குறிவைத்து தாக்கப் பட்டது. குண்டுகளை வெடித்தும், துப்பாக்கிகளால் சுட்டும் நடத்தப்பட்ட இந்த தாக்குதல் களில் 80 பேர் பலியாகி உள்ளதாக அங்கி ருந்து வரும் தகவல்கள் கூறு கின்றன.

தலீபான்களின் தொடர் அட்டூழியச் செயல் கள், அந்த நாட்டு அரசுக்கு பெருத்த தலை வலியாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.



# நீட் வழக்கில் அநீதிகள்!

அநீதியான நீட் தேர்வுக்கு உயிர் பலியான தங்கை அனிதா அவர்தம் குடும்பத்தினர் மற்றும் நீட் தேர்வால் அநீதியான முறையில் தங்கள் மருத்துவ படிப்பை பறிகொடுத்த ஆயிரக் கணக்கான மாணவர்களிடம் உளப்பூர்வமாக மன்னிப்பு கேட்டுக்கொண்டு இதை தட்டச்சு செய்ய ஆரம்பிக்கிறேன்.

நான் ஏன் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று கேட்கிறீர்களா? ஒரு வழக்கறிஞராக இருந்து கொண்டு நீட் தேர்வு குறித்த வழக்குகளில் இத்தனை சட்டத் தவறுகள் இருந்தும் அவைகளை நீதிமன்றம் முன்பாக, மக்கள் முன்பாக எடுத்து செல்லாமல் அமைதியாக இருந்துவிட்டேனே! தங்கை அனிதா மரணத்திற்கு ஒரு காரணமாக இருந்துவிட்டேனே!! இனியும் சட்ட தவறு களை அம்பலப்படுத்தாமல் இருக்க முடியுமா? அதுதான் இந்த நீண்ட பதிவு.

நீட் தேர்வு சரியா தவறா என்ற நீண்ட விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. என்றாலும் இந்த நீட் தேர்வு எப்படி கொல்லைப் புறம் வழியாக நுழைந்தது என்பது தெரியுமா? ஒரு சரியான தீர்ப்பு, சட்டத்திற்கு புறம்பான முறையில் ஒரு தவறான முறை மூலம் அவசர அவசரமாக வழக்கு விசாரிக்கப்பட்டு, மீண்டும் புதியதாக விசாரிக்கபோகிறோம் என்று சட்டத் திற்கு முரணாக முந்தைய தீர்ப்பு தற்காலிகமாக திரும்பப் பெறப்பட்டு, வழக்கு நிலுவையில் உள்ள நிலையிலேயே அநியாயமான முறையில் இன்று நீட் தேர்வு நம் குழந்தைகள் மீது திணிக் கப்பட்டுள்ளது. இதனை நம்மில் பெரும்பாலான வர்கள் அறியவில்லை.

நீட் தேர்வு சட்டப்படி சரியானது என்றும், உச்ச நீதிமன்றம் இறுதி தீர்ப்பு வழங்கிவிட்டது என்றும், அந்த தீர்ப்பு சட்டத்தின்படி தான் வழங்கப்பட்டிருக்கும் என்றும், உச்சநீதிமன்ற உத்தரவின் பேரிலேயே நீட் தேர்வு நடத்தப் படுகிறது என்றும், மத்திய ஆளும் பாஜக அரசுக்கும் நீட் தேர்வு திணிப்புக்கும் சம்பந்தம் இல்லை என்றும், இனி மாணவர்கள் நீட் தேர்வுக்கு தங்களைத் தயார்படுத்திக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்றும் தவறாக கருதிக் கொண்டிருக்கும் அப்பாவிகளுக்காக இந்த பதிவு.


அனிதா

இதைப் படிக்கும்போது தங்களுக்கு, "இப்படி யெல்லாம் ஒரு நீதிபதி இருந்திருக்க முடியுமா? இப்படிப்பட்ட நீதிபதிதான் நீட் தேர்வை விசா ரித்து தீர்ப்பளித்தாரா? ஒரு நீதிபதி சட்டத்தை

மீறி இப்படி ஒரு அநீதியான தீர்ப்பை வழங்கி அதனை செயல்படுத்தவும் அரசையும் அரசு இயந்திரத்தையும் இயக்க முடியுமா?" என பல ஆச்சரிய கேள்விகள் மனதில் தோன்றலாம். ஆனால் அதுதான் அப்பட்டமான உண்மை. இதனை படித்து முடித்த பின்னர் நடந்த அநீதி களை எதிர்த்து குரல் கொடுப்பீர்கள் என்றால் பாசிச பாஜக எச். ராஜா பார்வையில் நீங்களும் என்னைப்போல் ஒரு ஆன்டி இந்தியர்தான்.

**நீட் வழக்குகள் ஒரு கழுகுப் பார்வை:**

இந்தியா முழுவதும் ஒரே நுழைவுத்தேர்வு (NEET) மூலம் மருத்துவ படிப்பிற்கும் மருத்துவ மேற்படிப்புக்கும் மற்றும் பல் மருத்துவப் படிப்பிற்கும் பல் மருத்துவ மேற்படிப்புக்கும் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று கடந்த 21.12.2010ல் இந்திய மருத்துவக் கழகம் (MCI) இரண்டு அறிவிக்கைகளையும், 31.05.2012ல் இந்திய பல் மருத்துவக் கழகம் (DCI) இரண்டு அறிவிக்கைகளையும் வெளியிட் டன. இந்த அறிவிப்புகளை எதிர்த்து வேலூர், கிருத்துவ மருத்துவக் கல்லூரி [CHRISTIAN MEDICAL COLLEGE (CMC)] உள்ளிட்ட பல மருத்துவக்கல்லூரிகளும், தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநில அரசுகளும் பல வழக்குகளை தாக்கல் செய்தன.

இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட வழக்குகள் உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு.அல்டாமஸ் கபீர். திரு.விக்ரமஜித் சென் மற்றும் திரு.அனில் தவே ஆகிய மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு ஒன்றாக விசாரித்து கடந்த 18.07.2013 அன்று தீர்ப்பினை 203 பக்கங்களில் விரிவாக அளித்தது.

நீதிபதிகள் திரு.அல்டாமஸ் கபீர் மற்றும் திரு.விக்ரமஜீத் சென் ஆகிய இருவரும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் படியும், 2002ஆம் ஆண்டில்உச்சநீதிமன்றத்தின்11நீதிபதிகள்அடங் கிய அரசியல் சாசன முழுமையான அமர்வு (Full Bench) T.M.A. Pai Foundation Vs. State of Karnataka [(2002) 8 SCC 481] என்ற வழக்கில் அளித்த தீர்ப்பு, அதனைப் பின்னிட்டு Islamic Academy of Education Vs. State of Karnataka [(2003) 6 SCC 697] வழக்கு, உச்சநீதிமன்றத்தின் 7 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு P.A. Inamdar Vs. State of Maharashtra [(2005) 6 SCC 537] என்ற வழக்கில் அளித்த தீர்ப்பு மற்றும் Indian Medical Association Vs. Union of India [(2011) 7 SCC 179] ஆகிய வழக்குகளில் உச்சநீதிமன்றம் அளித்ததீர்ப்புகளின் அடிப்படை யிலும் நீட் தேர்வு நடத்த இந்திய மருத்துவ கழகம் மற்றும் இந்திய பல் மருத்துவ கழகம் வெளியிட்ட நான்கு அறிவிக்கைகளையும் இரத்து செய்து நீட் தேர்வு நடத்த அவை களுக்கு அதிகாரமில்லை என்றும் நீட் தேர்வு இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிரானது என்றும் தெளிவாக 176 பக்கங்களில் தீர்ப்பளித் தனர்.

நீதிபதி திரு.அனில் தவே அவர்கள் இரண்டு நீதிபதிகளின் தீர்ப்பில் தனக்கு உடன்பாடு இல்லை என்று கூறி தனது மாறுபட்ட (Dissenting) தீர்ப்பை அதே தீர்ப்பில் தொடர்ந்து 177 முதல் 203வரையில் அதாவது 27 பக்கங்களில் மட்டுமே Dr.Preeti Srivastava and Another vs. State of M.P. and Others (1999) 7 SCC 120 மற்றும் Veterinary Council of India vs. Indian Council of Agricultural Research, (2000) 1 SCC 750 ஆகிய தீர்ப்புகளின் அடிப்படையில் நீட் தேர்வு நடத்த MCI & DCI ஆகியவற்றிற்கு அதிகாரம் உள்ளது என்று தீர்ப்பளிக்கிறார். சட்டப்படி 2:1 என்ற அடிப்படையில் திரு.அனில் தவே அவர் களின் சிறுபான்மை மாறுபட்ட தீர்ப்பு செல்லாத தாகிவிட்டது. எனவே நீட் தேர்வு தடை செய்யப் பட்டது.

பின்னிட்டு 18.07.2013ல் வழங்கப்பட்ட மேற்படி Christian Medical College Vellore & Ors.Vs.Unionof India & Ors. [(2014) 2 SCC 305] வழக்கின் தீர்ப்பை எதிர்த்து இந்திய மருத்துவ கழகம் உள்ளிட்ட சிலர் மறுஆய்வு (Review Petitions) மனு தாக்கல் செய்கின்றனர்.

அந்த வழக்கு 2013ல் இருந்து வழக்கு தரப் பினர்களுக்கு அறிவிப்பு (Court Notice) அனுப்ப சார்பு செய்யப்படாமல் நிலுவையில் இருந்துவந்த நிலையில் நீதிபதிகள் திரு.அல்டாமஸ் கபீர் மற்றும் திரு.விக்ரமஜீத் சென் ஆகிய இருவரும் ஒய்வு பெற்று விட்டனர். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்ட இந்திய மருத்துவக் கழகம் திறமையாக காய்களை நகர்த்தியது. எனவே மேற்படி மறுஆய்வு மனு இதனை ஒத்த

வேறு ஒரு Civil Appeal No.4060/2009 என்ற ஒரு வழக்குடன் சேர்த்து விசாரிக்க வேண்டி *21.01.2016* அன்று *5* நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு விசாரணை மாற்றப்படுகிறது.

அந்த அமர்வுக்கு தலைவர் மேற்படி Christian Medical College Vellore & Ors. Vs. Union of India & Ors. [(2014) 2 SCC 305] வழக்கில் மாறுபட்ட தீர்ப்பளித்த சாட்சாத் அதே நீதிபதி திரு.அனில் தவே அவர்களேதான். மற்ற நீதிபதிகள் கி.ரி.சிக்ரி, ஸி.ரி.அகர்வால், ஆதர்ஸ் குமார் கோயல், ஸி.பானுமதி ஆகியோர்.



இந்த மறுஆய்வு வழக்கில் வழக்கு தரப் பினர்கள் பலருக்கு நீதிமன்ற அறிவிப்பு (Notice) சார்வு ஆகாதநிலையில் இரண்டு நாளிதழ்களில் விளம்பரம் மூலமாக மாற்று முறையில் அறிவிப்பு செய்ய உத்தரவிடப்பட்டு விளம்பரம் செய்யப்பட்டு *15.02.2016* அன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அதன்பிறகு விசாரிக் கப்பட்டு *16.03.2016* அன்று இறுதி விசாரணைக் குப் பின்னர் *11.04.2016* அன்று தீர்ப்பளிக்கப் பட்டது. தீர்ப்பு என்றால் ஏதோ நூற்றுக்கணக் கான பக்கங்களில் அரசியலமைப்பு சட்டம் உள்ளிட்ட பல சட்டங்கள், பல உச்சநீதிமன்ற தீர்ப்புகளை அலசி ஆராய்ந்து வழங்கப்பட்ட தீர்ப்பு என்று அப்பாவித்தனமாக எண்ணிவிட வேண்டாம். நான்கே பக்கங்களில் வழங்கப் பட்ட அந்ததீர்ப்பின்வரிகளை அப்படியே இங்கு பதிவிடுகிறேன்.

These review petitions have been filed against the judgment of this Court dated 18th July, 2013 passed in Christian Medical College Vellore & Ors. Vs. Union of India & Ors. reported in (2014) 2 SCC 305. The review petitions were placed before a Three-Judge Bench and notices were issued on 23rd October, 2013 and thereafter, it was brought to the notice of the Bench that Civil Appeal No.4060/2009 and connected matters involving an identical issue, had been referred to a Five-Judge Bench.

Accordingly, on 21st January, 2016, these review petitions were ordered to be heard by a Five-Judge Bench. On 21st January, 2016, notice was ordered to be served through substituted service and in pursuance of the said order, necessary publication was made in two newspapers and proof thereof was filed on 15th February, 2016.

Thereafter, we have heard the matters. Civil Appeal No.4060/2009 and its connected matters have been heard and order has been reserved on 16th March, 2016.

We have heard the counsel on either side at great length and also considered the various judgments cited by them, which include judgments cited by the non-applicants on the scope of review in Kamlesh Verma vs. Mayawati and Others (2013) 8 SCC 320, Union of India vs. Namit Sharma (2013) 10 SCC 359 and Sheonandan Paswan vs. State of Bihar andothers (1987) 1 SCC 288.

After giving our thoughtful and due consideration, we are of the view that the judgment delivered in Christian Medical College (supra) needs reconsideration. We do not propose to state reasons in detail at this stage so as to see that it may not prejudicially affect the hearing of the matters. For this purpose we have kept in mind the following observations appearing in the Constitution Bench judgment of this Court in Sheonandan Paswan (supra) as under: ".... If the Review Bench of the apex court were required to give reasons, the Review Bench would have to discuss the case fully and elaborately and expose what according to it constitutes an error in the reasoning of the Original Bench and this

would inevitably result in pre-judgment of the case and prejudice its re-hearing. A reasoned order allowing a review petition and setting aside the order sought to be reviewed would, even before the re-hearing of the case, dictate the direction of the re-hearing and such direction, whether of binding or of persuasive value, would conceivably in most cases adversely affect the losing party at the re-hearing of the case. We are therefore of the view that the Review Bench in the present case could not be faulted for not giving reasons for allowing the Review Petition and directing re-hearing of the appeal. It is significant to note that all the three Judges of the Review Bench were unanimous in taking the view that "any decision of the facts and circumstances which … constitutes errors apparent on the face of record and my reasons for the findings that these facts and

circumstances constitute errors apparent on the face of record resulting in the success of the review petition, may have the possibility of prejudicing the appeal which as a result of my decision has to be re-heard...."

Suffice it is to mention that the majority view has not taken into consideration some binding precedents and more particularly, we find that there was no discussion among the members of the Bench before pronouncement of the judgment.

We, therefore, allow these review petitions and recall the judgment dated 18th July, 2013 and direct that the matters be heard afresh. The review petitions stand disposed of as allowed.

*அதாவது மேற்படி வேலூர் சிவிசி வழக்கை நாங்கள் (நீதிபதிகள்) மீண்டும் விசாரிக்க வேண்டும் என்று கருதுகிறோம். அதற்கான காரணம் எதையும் விரிவாக இந்த நேரத்தில் நாங்கள் (நீதிபதிகள்) சொல்ல விரும்பவில்லை. அவ்வாறு சொல்வது நிலுவையில் உள்ளவைகளை பாதிக்கும். தீர்ப்பு வழங்கும் முன்பாக வழங்கப்போகும் தீர்ப்பு குறித்து நீதிபதிகளுக்குள் விவாதிக்கப்படவில்லை. எனவே இந்த மறு ஆய்வு மனு அனுமதிக்கப்பட்டு 18.07.2013 தீர்ப்பு திரும்பப் பெறப்பட்டு மீண்டும் புதிதாக விசாரிக்க உத்தரவிடப்படுகிறது. இதுதான் மேற்படி தீர்ப்பின் சாராம்சம்.*

**இந்த உலகில் எந்த ஒரு தீர்ப்பும் இவ்வாறு விசாரிக்கப்படாமலேயே ஒரு மறுஆய்வு மனு மூலம் எந்த சட்ட முரண்பாடும் காரணமும் சொல்லாமலேயே மூல வழக்கில் தீர்ப்பளித்த பெரும்பான்மை நீதிபதிகள் ஓய்வுபெற்ற பின்னர் அவ்வழக்கில் சிறுபான்மையாக மாறுபட்ட (dissenting) தீர்ப்பளித்த நீதிபதியின் தலைமையில் வேறு ஒரு அரசியல் சாசன அமர்வில் சட்டங்களுக்கு முரணாக இரத்து செய்யப்பட்ட அநீதி நடந்ததாக வரலாறு இல்லை.**

*முதலில் வழக்கின் அனைத்து தரப்பினர்களுக்கும் மறுஆய்வு மனு வழக்கு குறித்து நீதிமன்ற அறிவிப்பு 2013ஆம் ஆண்டிலிருந்து சார்வு செய்யப்பட்டாத நிலையில் ஐந்து நீதிபதிகள் அமர்வுக்கு மாற்றப்பட்டதும் அவசரமாக மாற்றுமுறையில் பத்திரிகை விளம்பரம் மூலம் அறிவிப்பு கொடுக்க உத்தரவிட்டதன் காரணம் அமர்வின் தலைவர் நீதிபதி திரு.அனில் தவே விரைவில் ஒய்வு பெற உள்ளார் அதற்குள் தீர்ப்பளிக்க வேண்டும் என்பதுதான். அதாவது தான் ஒய்வு பெறும் முன்பாக நீட் தேர்வை நடத்தியே ஆகவேண்டும் என்ற நீதிபதி திரு.அனில் தவே அவர்களின் ஆர்வம் தான் தற்போதைய நீட் தேர்வு.*

*இவ்வாறு அவசரமாக வழக்கு தரப்பினர்களுக்கு நீதிமன்றம் மூலம் நேரடி அறிவிப்பை தருவதிலிருந்து தவறி, மீறியது மற்றும் நீதிபதி திரு.அனில் தவே விசாரித்தது ஆகியவை இயற்கை நீதியை குழிதோண்டிப் புதைத்ததற்கு சமமாகும்.*

*இயற்கை நீதி என்றால் என்ன? இயற்கை நீதி என்றால் அடிப்படை நீதி ஆகும். மிக முக்கியமான இரண்டு இயற்கை நீதிகள்*

1. Nemo judex in causa sua: No man shall be a judge in his own cause, or the deciding authority must be impartial and without bias.

*அதாவது, தனது வழக்கில் எவரும் நீதிபதியாக இருக்கக் கூடாது (அல்லது) நீதிபதி அவசியம் நடுநிலையானவராக இருக்க வேண்டும். மேலும் நீதிபதி ஒரு தரப்பினர் சார்பான வராகவோ முன்னதாகவே முடிவை தீர்மானித்து விட்டவராகவோ இருக்கக் கூடாது.*

2. Audi Alteram Partem: To hear the other side, or both the sides must be heard, or no man should be condemned unheard, or that there must be fairness on the part of the deciding authority.

ஒரு தீர்ப்பின் மீதான மறுஆய்வு (Review) மனுக்களைப் பொறுத்தவரையில் சட்டப்படி முன்னதாக விசாரித்து தீர்ப்பளித்த நீதிபதிகளே விசாரிப்பார்கள். அது இயற்கை நீதிக்கு புறம் பானது அல்ல. ஏனெனில் மறுஆய்வு மனு என்றால் தீர்ப்பில் பார்த்த மாத்திரத்தில் வெளிப் படையாக தெரியக்கூடிய தவறுகள் இருந்தால் மட்டுமே மறுஆய்வு மனு மூலம் தீர்ப்பில் உள்ள தவறுகள் திருத்திக்கொள்ளப்படும்.

ஆனால் நீட் தேர்வு குறித்த வேலூர் CMC வழக்கு மீதான மறுஆய்வு மனுவைப் பொறுத்த வரையில், குறுகிய காலத்தில் தீர்மானிக்கப்பட வேண்டிய மறுஆய்வு மனு நீண்ட காலம் நிலுவையில் இருந்த நிலையில், தீர்ப்பை அளித்த மூன்று நீதிபதிகளில் பெரும்பான்மைத் தீர்ப் பளித்த இரண்டு நீதிபதிகளும் ஓய்வுபெற்று விட்டனர். இந்த நிலையில் புதியதாக வேறு ஒரு அமர்வுக்கு விசாரணை மாற்றப்படும் நிலையில் மூல வழக்கில் மாறுபட்ட தோல்வியுற்ற தீர்ப் பளித்த நீதிபதியையே தலைவராகக் கொண்டு விசாரணை செய்ய முடியுமா என்பதுதான் மில்லியன் டாலர் கேள்வி.

அவர் நியாயமாக, நடுநிலையாக விசாரித்து தீர்ப்பளிப்பாரா என்ற சந்தேகம் எவருக்கும் இயல்பாகவே எழும் என்பதில் ஐயமில்லை. அதற்கு தகுந்தாற்போல் இந்த மறுஆய்வு மனு வழக்கில் விசாரணை எதுவும் செய்யாமல் எந்த சட்டத் தவறுகளையும் குறிப்பிடாமல் சிவிசி மூல வழக்கை மீண்டும் புதியதாக விசாரிக்க விரும்புகிறோம் என்று மட்டும் காரணம் கூறி முந்தைய தீர்ப்பு திரும்பப் பெறப்பட்டுள்ளது.

இது மறுஆய்வு மனுவிற்கான சட்ட வரம்புகளுக்கே எதிரானது ஆகும். இங்கு குறிப் பிடத்தக்க மற்றொரு விஷயம் என்னவென்றால் நீதிபதி அனில்தவே அவர்கள் நீதிமன்றத்தின் உள்ளேயே, தான் ஹிட்லராக இருந்தால் அனைத்து பள்ளிகளிலும் பகவத்கீதையை கட்டாயப் பாடமாக்குவேன் என்று முழங்கி யவர். மேலும் நீதிபதி ஆதர்ஸ் குமார் கோயல் அவர்கள் பாஜக சார்பாக பல வழக்குகளில் ஆஜரானவர். இயற்கை நீதி அப்பட்டமாக மீறப்பட்டுள்ளது தானே?

குப்புறத் தள்ளிய குதிரை குழியையும் பறித்ததாம்:

அநியாயம் அதோடு நிற்கவில்லை. இவ்வாறு வேலூர் சிவிசி வழக்குத் தீர்ப்பை இரத்து செய்த மறுஆய்வு தீர்ப்பில் நீட் தேர்வு நடத்தப்பட வேண்டும் என்று சொல்லப்படவில்லை. அவ்வாறு சொல்லியிருந்தால் மற்ற நீதிபதிகள் ஒப்புக்கொள்ள மறுத்திருக்க வாய்ப்புள்ளது.

சொல்லிவைத்தது போல் உடனடியாக சங்கல்ப் சாரிடபிள் டிரஸ்ட் என்ற அமைப்பு இந்த (2016) ஆண்டே நீட் தேர்வு நாடு முழுவதும் நடத்த வேண்டும் என்று ஒரு ரிட் வழக்கை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறது. அந்த வழக்கு அவசர வழக்காக நீதிபதிகள் திரு.அனில் தவே, திரு.சிவ கீர்த்தி சிங் மற்றும் திரு.ஆதர்ஷ் குமார் கோயல் ஆகிய மூன்று நீதிபதிகள் அமர்வு முன்பாக விசாரிக்கப்பட்டது. இந்த வழக்கு மிக விரைவாக விசாரிக்கப்பட்டு 28.04.2016 அன்று தீர்ப்பளிக்கப்படுகிறது. விரைவான தீர்ப்பு அநீதிக்குச் சமம் என்றும், தாமதமான தீர்ப்பு மறுக்கப்பட்ட நீதி என்றும் சொல்வார்கள்.

நீட் தேர்வு வழக்கில் விரைவான தீர்ப்பு அநீதி என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆம் உடனடியாக நீட் தேர்வு 2016 ஆம் ஆண்டி லேயே நாடு முழுவதும் நடத்தப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டது. இந்த வழக்கில் எதிர் தரப்பினர்களாக யார் யார் சேர்க்கப்பட்டார்கள் அவர்கள் என்ன வாதிட்டார்கள் என்பது தான் சுவாரசியமான தகவல். சங்கல்ப் சாரிடபிள் அறக்கட்டளை தாக்கல் செய்த இந்த வழக்கில் நான்கு பேர் எதிர்தரப்பினர்களாக கொண்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

ஆனால் நீதிமன்றம் நான்காவது எதிர்மனு தாரரை (அது யார் விரைவான தீர்ப்புக்கு அவர் எவ்வாறு தடையாக இருப்பார் எனத் தெரிய வில்லை) நீக்கச்சொல்லி அவர் நீக்கப்பட்ட பின்னர் வழக்கில் எதிர்மனுதாரர்களாக இருந்தவர் கள் மத்திய அரசு, இந்திய மருத்துவக் கழகம், மற்றும் CBSC ஆகிய மூவர் மட்டுமே. அவர் களும் குறுகிய காலத்தில் தங்களால் தேர்வு நடத்த முடியாது, மூல வழக்கு நிலுவையில் உள்ளபோது தேர்வு நடத்துவது தவறானது என்று சொல்லி வாதாடியிருப்பார்கள் என்று நினைக்கிறீர்களா?

ஆம் எனில் உங்களை விட வெள்ளந்தியை பார்க்க முடியாது. அவர்கள் சொல்லியதைக் கேட்டால் எவருக்கும் இரத்த அழுத்தம் சற்றே





அதிகரிக்கும். ஆம் 2015 ஆம் ஆண்டிலேயே நாங்கள் நீட் தேர்வுக்காக பாடத்திட்டத்தை வெளியிட்டுள்ளோம் என்று ஒரு எதிர்மனுதாரரும், மூன்றே நாட்களில் நாங்கள் AIPMT 2016 தேர்வை வருகிற மே 1ஆம் தேதியே நடத்து கிறோம் அதனையே நீட் phase I தேர்வாக எடுத்துக்கொள்ளலாம் என்றும், ஜூலை மாதத்தில் நீட் phase II என விண்ணபிக்காமல் விடுபட்ட மாணவர்களுக்காக நடத்தி விடுகிறோம் என்று ஒரு எதிர்மனுதாரரும் போட்டிபோட்டு கொண்டு நீட் நடத்தி தரமான மருத்துவக் கல்வியை உடனடியாக இந்தியாவிற்கு அளிக்க தயாராக இருப்பதை சொல்லி நீதிமன்றத்தில் தங்கள் கற்றறிந்த வழக்கறிஞர்கள் மூலம் உறுதி யளித்தார்கள்.

2013ல் இருந்து 2016ல் இந்த வழக்கு வரை நீட் தேர்வு உச்ச நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டு இருந்த நிலையில் 2015ஆம் ஆண்டில் நீட் தேர்வுக்கான பாடத்திட்டத்தை ஏன் MCI வெளியிட்டார்கள் என்று புத்திசாலித்தனமாக ஆண்டி இந்தியர் எவரும் சிந்தித்து கேள்வி கேட்டால் அதற்கு நான் பொறுப்பல்ல. இந்த வழக்கில் தரப்பினர் இல்லாத ஆனால் சமூக நீதியில் அக்கறை கொண்ட ராஜீவ் தவான் போன்ற பல ஜாம்பவான் வழக்கறிஞர்கள் தாமாக முன்னிலையாகி தங்கள் வாதங்களை முன்வைத்தனர்.

வேலூர் CMC வழக்கு மீண்டும் புதிதாக விசாரிக்க வேண்டிதான் மறுஆய்வு மனுவில் தீர்ப்பு திரும்பப் பெறப்பட்டுள்ளது. தகுதியின் அடிப்படையில் மறுஆய்வு மனு தீர்மானிக்கப்பட வில்லை. எனவே நீதிபதி அல்டாமஸ் கபீர் தலைமையில் வழங்கப்பட்ட தீர்ப்பு Over Rule செய்யப்படவில்லை. எனவே புதியதாக விசாரித்து தீர்ப்பளிக்கப்படும் வரையில் நீட் தேர்வு நடத்தப்படக் கூடாது என்று பலவாறு வழக்கறினர்கள் சட்டங்களை விளக்கினாலும் அவற்றையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு வெறும் நான்கு பக்கங்களில் தீர்ப்பளித்து நீட் நம் குழந்தைகள் மீது திணிக்கப்பட்டது.

பொதுவாக நடைமுறையில் உள்ள எதனையும் மாற்றும் நடைமுறைகளில் பெருவாரியானவர்கள் ஈடு செய்ய இயலாத அளவிற்கு பாதிப்பு ஏற்படும் சூழல்களில் இறுதியாக தீர்மானிக்கப்படும் வரையில் இருக்கும் நிலையே (Status quo) இறுதி தீர்ப்பளிக்கப்படும் வரையில் தொடர வேண்டும் என்றே நீதிமன்றங்கள் உத்தரவிடும்.

அதாவது ஒரு கட்டிடத்தை இடிக்க வேண்டும் என்ற ஒரு வழக்கில் மேல்முறையீடுகள் அனைத்தும் முடியும் வரையில் கட்டிடம் இடிக்க தடை விதித்தே நீதிமன்றங்கள் உத்தரவிடும். இதுதான் சட்டமும், நியாயமும் ஆகும். ஆனால் நீட் தேர்வு வழக்கில் விநோதமாக புதியதாக விசாரிக்கப்பட்டு இறுதி தீர்ப்பு வரும் வரையில் புதிதாக திணிக்கப்படும் நீட் தேர்வு நடத்தப்பட வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. நீட் தேர்வு சட்ட விரோதம் என்று இறுதியாக தீர்ப்பளிக்கப்பட்டால் பலியான சகோதரி அனிதாவுக்கும், மருத்துவப் படிப்பை பறிகொடுத்த ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கும் ஏற்பட்ட இழப்புகளை யார் ஈடு செய்வார்கள்?

**வழக்கறிஞர் கமருதீன், திருச்சி.**

# பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி...




தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் சார்பாக கோவை மாவட்டம், மேட்டுப் பாளையத்தில் 17-09-2017 அன்று தங்கப்பா திருமண மண்டபத்தில் காலை 10.30 மணிக்கு துவங்கியது. சகோதரர் உமர் பாரூக் தலைமை யில் சகோதரர் இம்தியாஸ் அகமத் அவர்கள் கிராஅத் ஓதி நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தார். அதைத் தொடர்ந்து சகோதரர் சையது அபுதாஹிர் அவர்கள் வருகை தந்திருந்த அனைவரையும் வரவேற்று தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்டின் பணிகளை விவரித்தார்.

அதன்பிறகு சகோதரர் இம்தியாஸ் அகமது அவர்கள் இஸ்லாம் மார்க்கம் எவ்வளவு இனிமையானது என்றும், இஸ்லாத்திற்கு எதிராக வரும் எல்லா எதிர்ப்புகளும் இஸ்லாத் தினை மென்மேலும் வளரச் செய்கிறது என்றும் இஸ்லாமே உலக மக்கள் அனைவருக்கும் நேர்வழிகாட்டி என்று மக்களுக்கு எளிதில் புரியக் கூடிய வகையில் விளக்கினார்.

அதைத் தொடர்ந்து தமிழ் புலிகள் கட்சி யின் மாநில கொள்கை பரப்பு செயலாளர் சகோதரர் சபாபதி (எ) உமர் கத்தாப் அவர்கள் இந்து மதத்தில் உள்ள பாகுபாட்டினால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் சொல்லவண்ணா துயரங்களை தன்னுடைய ஆவேச பேச்சின் மூலம் இஸ்லாம் அக்கொடு மைகளை நீக்கி அனைத்து மக்களையும் அரவணைத்துக் கொள்கிறது என்று தன் உரையை முடித்தார்.

அதன்பிறகு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் நீலகிரி நாடாளுமன்ற தொகுதியின் துணைச் செயலாளர் சகோதரர் வை. குடியரசு




அவர்கள் அம்பேத்கர் அரசியலில் ஒதுக்கப் பட்டபோது அவரை கரம் கொடுத்து எழ வைத்தது இஸ்லாமிய சகோதரர்களே என்று வரலாற்று உண்மைகளையும் குர்ஆனிய வசனங் களையும், ஹதீஸ்களையும் அனைத்து மக்களை யும் இஸ்லாம் எவ்வாறு இணைக்கிறது என்ற தெளிவான விளக்கத்தை மன்றத்தில் எடுத்து வைத்து சமத்துவம் மேலோங்க இஸ்லாத் தினால் மட்டுமே முடியும் என்று தன் உரையை முழுமைப்படுத்தினார்.

அதன்பிறகு உரையாற்றிய சகோதரர் ஜக்கரியா அவர்கள் தான் தலித்தாக இருந்த போது பட்ட துன்பங்களையும் அதற்கு எதிராக மேற்கொண்ட அனைத்து போராட்டங்களும் மேலாக, இந்த தீண்டாமை, அடிமைத்தனம், ஒதுக்கப்படு தல் போன்ற இந்து மதம் தாழ்த் தப்பட்ட மக்களுக்கு கொடுத்த அனைத்து கொடுமைகளுக்கும் எனக்கு இஸ்லாமே விடுதலையை தந்தது என்று மக்கள் மன்றத்தில் இஸ்லாத்தினுடைய சிறப்புகளை அனுபவப்பூர்வமாக எடுத்துரைத்தார்.

அதன் பின்னிட்டு, தமிழ் புலிகள் கட்சி யின் மாநில துணைப் பொதுச் செயலாளர் சகோதரர் பேறறிவாளன் அவர்கள் இன்று நாட்டில்தலித்களுக்கும்இஸ்லாமியர்களுக்கும் நடக்கும் பாகுபாடுகளை விளக்கி தலித்துகளும் இஸ்லாமியர்களும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டிய அவசியத்தை தெளிவுபடுத்தினார்.

அதைத் தொடர்ந்து தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் நிறுவனர் மு. குலாம் முஹம்மது அவர்கள் தலித்துகளுக்கும் இஸ்லாமியர்களுக்குமான வரலாற்று ஒற்றுமையை விளக்கி, இன்று நாட்டில் ஒற்று மையை சீர்குலைக்க செய்யப்படும் சதிகளை மக்கள் மன்றத்தில் எடுத்துரைத்து இஸ்லாமே அனைத்து மக்களுக்கும் தீர்வாக அமையும் என ஆழமான தனது கருத்துக்களை பதிவு செய்தார்.

இறுதியாக சகோதரர் முபாரக் ராஜா அவர்கள் நன்றியுரை நிகழ்த்தி நபி (ஸல்) அவர்கள் கூறிய அடிப்படையில் பிரார்த்தனை யுடன் நிகழ்ச்சியை முடித்து வைத்தார். அல்ஹம்துலில்லாஹ்

# அன்பகத்தின்

## அன்பான வேண்டுகோள்!

**அன்பார்ந்த வாசகர்களே! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)**

**எமது இஸ்லாமியப் பிரச்சாரப் பணிகள் 37 ஆண்டுகளைக் கடந்து, 38 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றன. அல்ஹம்துலில்லாஹ்.**

ஒரு நீண்ட நெடும்காலம் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும், எங்கள் பிரச்சாரங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. அல்லாஹ், எங்கள் வழி பல பிரபல்யங்களுக்கு, நேர்வழியைக் காட்டினான் அல்ஹம்துலில்லாஹ்.

அப்படி இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களுக்கு இஸ்லாத்தின் செயல்முறை களையும் இஸ்லாத்தின் அனைத்துப் பகுதிகளையும் கற்றுத் தருவதற்கென மூன்று கல்வி நிறுவனங்களை நிறுவியுள்ளோம். அல்ஹம்துலில்லாஹ்.

இந்த மூன்று நிறுவனங்களிலும் பல்லாயிரக்கணக்கானோர் மார்க்க கல்வியை கற்று சென்றுள்ளார்கள். அவ்வாறு நிறுவப்பட்ட மூன்றாவது கல்விக்கூடமே அன்பகம். அதுவும் தன் 10 ஆம் ஆண்டை நிறைவு செய்கின்றது. எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!

இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கல்வி கற்றுச் சென்றிருக்கின்றார்கள். அன்பகம் கடந்த 10 ஆண்டுகளாக ஒரு வாடகைக் கட்டடத்தில் தான் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இதையும் அடிக்கடி மாற்றிட வேண்டிய நிலை.

**இன்ஷா அல்லாஹ்** அதனை ஒரு சொந்தக் கட்டடத்திற்கு மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். அதற்கு உங்கள் நிதி உதவிகளை தாராளமாக வழங்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

**அல்லாஹ் உங்களுக்கு அளப்பரிய கூலிகளை வழங்கிடப் போதுமானவன்.**

இவண்,

**மு. குலாம் முஹம்மது,** பேராசிரியர் **இல்யாஸ் ரியாஜி**

ஹாஜி. **அப்துல் ரவூஃப்**

**செக், டி.டி. அனுப்புவோர்**

## DARUL ISLAM FOUNDATION TRUST

என்ற பெயருக்கு எடுத்து பின்வரும் முகவரிக்க அனுப்பவும்
51/1, மண்ணடி தெரு, 4-வது மாடி, அறை எண்.7, மண்ணடி, சென்னை - 600 001.

website : www.darulislam.in, Email : darultrust@yahoo.com,
Please draw your cheques / **DD in Favour of DARUL ISLAM FOUNDATION TRUST**
**Canara Bank A/c. 1287101017301** Branch St.Mary's Road, R.A.Puram, Chennai.
and send to : 52/1, Mannadi Street, 4th Floor, Room No.7, Mannadi, Chennai - 600 001.
**Mobile : 81481 29887,** Email : darultrust@yahoo.com, website : www.darulislam.in

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.